கடற்கரைப்பரதவர் கலைச்சொல்லகராதி

ஆசிரியர்

ச.முருகானந்தம்

மின்னியத்தொகுப்பு

வைரப்ரகாஷ்

சித்தார்த்

அகுர = மீன் வகை, அகுரை மீன்

அசைமண் ஓடல் = வாடைக் காலத்தில், கடலின் அடிப்பகுதியில், நீர் மட்டத்திலிருந்து ஒரு சாண் உயரத்திற்கு மண் அசைந்து கொண்டிருக்கும். புயல் வருமுன்னர் இவ்வறிகுறி உண்டாகும். வள்ளத்தை இயக்கக் கோல் ஊன்றும்போது இந்நுணுக்கமான அசைவைப் பரதவர் உணர்வர்.

அஞ்சாள = மீன் வகை, அம் சாளை

அஞ்சுமீன் குத்தகை = ரோமன் கத்தோலிக்கக் கிருத்துவர்களான பரதவர்கள் தொழில் முடிந்து கரையேறியதும் தமது மீன்பாட்டிலிருந்து ஐந்து மீனை மாதா கோயிலுக்குச் செலுத்தும் வரியாகக் கருதி அளிப்பர். இதன்மூலம் உண்டாகும் வருவாயைக் கொண்டு கோயில் விழாச் செலவைக் கோயில் பொறுப்பாளர் கவனிப்பார். உவரி மணப்பாடு ஆகிய ஊர்களில் இப்பழக்கம் உண்டு.

அடக்காவி = கட்டுமரத்தைக் கரையேற்றப் பயன்படும் முட்டுக்கட்டை. இதைக் கட்டுமரத்தின் அடியில் முட்டுக் கொடுத்து இலகுவாக மரத்தைக் கரை ஏற்றுவர்.

அட சரக்கு = அடைசரக்கு; திருக்கை மீனை ஒருநாள் உப்பில் ஊறவிட்ட பின்னர் மறுநாள் வழக்கம் போல (கருவாடு தயாரிப்பில் செய்வது போல)க் காயப்போடாமல் மேலும் உப்பிட்டு 40 கிலோ எடையளவில் ஒரே பொட்டணமாகப் பனம்பாயினால் கட்டி வைத்து விடுவர், இதுவே அ(டை சரக்கு; இது கிழக்குக் கடற்கரையில் இருந்து கேரளாவிற்கு விற்பனைக்காக அனுப்பப்படுகிறது. இறைச்சி மீன் உண்ணும் வழக்கம் உள்ள கேரள வாசி களின் திருமணத்தில் அடசரக்கான திருக்கை மீன் பதார்த்தம் ஒரு சிறப்பான உணவுவகையாகப் பயன்படுத்தப் படுகிறது.

அடசறது = அலசுதல்; அடசுதல்; வழக்காற்றுத் திரிபு. கடுவாடு தயாரிப்பிற்காகச் சிமெண்ட் தொட்டியில் ஒரு நாள் ஊறவிட்ட பின்னர் மறுநாள் காயப்போடும் முன்பாக இலேசாக ஒருமுறை நீரில் அலசுதல்.

அடப்பங்கொடி = கடல்கரைக் கழிகளில் காணப்படும் நெய்தல் நிலத் தாவரம்; கொடியினம். 'அடும்பு' எனச் சங்க இலக்கியங்களிலும் சிலப்பதிகாரத்திலும் இது குறிக்கப் படுகிறது.

அடல் = மீன் வகை; சாம்பல் வெண்ணிறம் இந்நிறமுடைய மீன்

அடித்தண்டுவாரி = வள்ளத்தின் கடைசிப் பகுதியில் உட்கார்ந்து தண்டு வலிக்க வசதியாக அமைந்திருக்கும் பட்டி. மரப்பலகை, குறுக்குவாட்டத்தில் அமைக்கப் பட்டிருப்பது.

அடி நீரோட்டம் = கடல் தளத்திற்குக் கீழ் ஓடும் நீரோட்டம். Under Current

அடுக்குப்பல்சுறா = மீன் வகை. பல்லமைப்பால் பெற்றபெயர். Carcharhinus ellioti. Grey Shark

அடுக்குமிதி = (அ) உப்பளத் தயாரிப்பில் களியடித்த பின் தளம் இறுகுவதற்காகக் கால்களால் இடைவிடாது சேர மிதித்தல்; (ஆ) மழைக்காலம் முடிந்ததும் இளகியிருக்கும் பாத்தியைப் புதுநீர்விட்டு இறுகும்படி சேர மிதித்தல்.

அட்டிக்கட்டை = தோணியின் இறுதிப் பகுதியில் உள்ள கட்டை

அட்டுப் பிடித்தல் = தெப்பங்களிலும் தொட்டான்களிலும் ஜிப்ஸம் படிதல்

அணியத்துவாரி = வள்ளத்தில் துடுப்பு வலிப்பதற்கு வசதியாக அமர்வதற்குரிய பலகை. முகப்பிற்குப் பக்கத்தில் (அண்மை , அணிமை) இருக்கும் பலகை. அத்து-தைத்தல், இசைத்தல். சாரியை என்றும் கொள்ளலாம். வள்ளத்தின் முன்பக்கமுள்ள வாரி

அணியம் = வள்ளத்தின் உட்பகுதி உறுப்பு. கடல் கலத்தின் முன்பக்கம்

அண்டளிக்க முடியாத காற்று = எதிர்கொள்ள முடியாத கடுமையான காற்று

அண்டை = கட்டுமரத்தின் முன்பகுதியில் உள்ள ஓர் உறுப்பு

அமக்கரம் = படகின் மேல் பகுதியில் கட்டப்படும் உறுப்பு. இதன் மறுபெயர் ஒட்டம் என்பதாகும்.

அமரம் = தோணியின் பின்புறம் (அதாவது நீரில் முன்னேறிச் செல்லும் ‘முகப்பு'க்கு எதிர்ப் புறம். கலத்தின் பின் பகுதி. Stern.

அமரத்தட்டுப் பலகை = படகின் கடைசிப் பகுதியில் ஆட்கள் உட்காரும் பலகை

அமரத்துக் கட்டை = படகின் அடிப்பகுதியில் அமைந்த நுனிக் கட்டை

அம்பாரம் = அடுக்கு , குவியல் உப்பு அம்பாரம்

அம்பா = பரதவர் பாடும் தொழிற் பாடல். கடற்கரை மக்களின் நாட்டார் இலக்கியம். நாட்டுப்புறப் பாடல், அந்தாதித் தொடையில் அமைந்தது.

அம்பாரம் தேத்துறது = வாரு பலகையால் உப்பு அம்பாரத்தை அழகாகத் தேய்த்து 'பிரமிட்' அமைப்பில் அமைத்தல்

அம்மு = ஆழ்கடலுக்குச் சென்று மீன் பிடிக்கும் பரதவர் கரை திரும்ப ஒரு வாரமாகும். அதுவரை மீன் கெடாமல் இருக்கப் பதப்படுத்தல் வேண்டும். வலைப்பட்ட மீன் களைக் குடல் நீக்கி உப்பு அடைத்துப் பாடஞ்செய்வர். அதற்குப் பயன்படும் கருவிகளாவன : அம்மு, அரிவாள், கத்தி, கண்டர்கோடரி, குத்தி ஆகியன.

அயிர = மீன் வகை. சிறுமீன்

அய்ட்ரான் = ஆங்கிலச் சொல். உப்பு நீரின் அடர்த்தியை அளந்து அறிவிக்கும் கருவி. Hydrometer

அரக்கோட்ட = அரை கோட்டை. சிப்பி, சுண்ணாம்பு ஆகியனவற்றின் முகத்தலளவு. கோட்டை -112 படி; அரைக்கோட்டை- 56 படி

அரச்சவல = அரச்சவலை. அரை வலை. சங்கு, முத்துக் குளிப்போர் இதனைப் பை மாதிரியான அமைப்பில் இடுப்பில் கட்டியிருப்பர். கடலுள் இறங்கித் தொழில் செய்யும்போது சங்கு, முத்துக்களை அள்ளிச் சேகரிப்பதற்கு இது பை போலப் பயன்படும்.

அரணிசுறா = மீன் வகை. Scyllium marmoratum

அரணிவாடு = கரையிலிருந்து கடல் நோக்கி (வங்கக் கடலைப் பொறுத்தமட்டில் மேற்கிலிருந்து கிழக்காக) ஓடும் நீரோட்டம்

அரவட்டம் = அரை வட்டம். வட்டக்காரர் தாம் மீன் பிடித் தொழிலில் சம்மாட்டியார் மூலமாகப் போட்ட முதலுக்குத் தினமும் பெறும் வட்டத் தொகையில் அரைப் பங்கு. வட்டம். ரூ. 6-25; அரைவட்டம்-ரூ. 3-12

அரிவாள் = மேற்குறிப்பு காண்க. மீன் பதப்படுத்தப் பயன்படும் கருவி.

அருந்ததி = நேர் வடக்கில் வானில் காணலாகும் விண்மீன் பரதவர் நடுக்கடலில் திசையறிய இதன் இருப்பிடத்தைக் கவனித்தல் நலம்.

அரும்பு அரியறது = அளங்களைத் தயாரிக்கும்போது பாத்திகளில் மிதக்கும் கசடுகள், சருகுகளைக் கையினால் அரித்தல், அப்புறப் படுத்தல்.

அரைச்சான் = சங்கு குளிக்கும் பரதவர் தமது இடுப்பில் கட்டி யிருக்கும் வலையாலாகிய பை. சுமார் நூறு சங்குகள் கொள்ளும் அளவினது.

அல = அலை. Surf, Wave

அலசல் = அலைசல், அலைவு, தொந்தரை (கடல் அலை மிகுதியாக இருத்தல். வள்ளம் முதலானவை நிலை நிற்க முடியாமல் தவித்தல், ஆடுதல்

அலசா = சுக்கான்

அலநீளம் = அலை நீளம். Wave-length

அலவாரி = தானாகக் கடலில் வந்து ஒதுங்கும் மரம்

அலவாக் கர = அலை வாய் கரை. கடற்கரை, அலைக் கரை. இச்சொற்றொடர் எல்லாக் கடற்கரையையும் பொது வாகக் குறிக்குமென்றாலும் தொண்டி கடற்கரையைச் சிறப்பாகக் குறிக்கும்.

அல வைத்தல் = அலை வைத்தல். பரதவர் பிள்ளைகள் அலையோடு ஓடி வரும் கடல் விளையாட்டு

அலவு = அலைவு . ரூஜ் அலைவு. Tide

அவுளியா = மூன் வகை

அளக்கரா = உப்பமைப்போர்

அனக்கா = கடல், உப்பளம்

அனக்காத்திணை = கடலாற் சூழப்பட்ட நூலம்

அளத்தி = நெய்தல் நிலப் பெண்

அனத்து நிலம் = களர் நிலம் உப்பு தயாரிக்க உதவும் நிலம்

அளம் = உப்பளம், நெய்தல் நிலம்

அளவர் = உப்பளங்களில் தொழில் செய்யும் தொழிலாளர்கள், உப்புழைப்போர், அளக்கிறவர். இவர்களுக்குப் பண்ணையன், பண்ணையர் என்ற பெயர்களுமுண்டு

அளவுப்பலகை = அளப்பதற்குப் பயன்படும் 'பலகை. Gauging board

அளி = குளிர்ச்சி

அளுவாபார் = அளுவா - பாசி முதலியன. Aluva Par; Aluva : rotten (Pasi, Sea weed being understood) Rotten Weed Bank (J.H.)

அறுத்து வாங்குதல் = உப்புப் பாத்திகளை மண்வெட்டியினால் ஒரே மட்டமாகச் செதுக்கி விடுதல்

அறை ஓடல் = பரதவர் விண்மீன்களை வெள்ளி என்பர். இவ்வெள்ளிகள் வானிலிருந்து மறைந்து விழும் மறைதல்- அறை ஓடல். இவர்கள் வெள்ளிக்குப் பல பெயர் கொடுத்து வழங்குவர். அரும் வெள்ளி, கப்ப வெள்ளி, கூட்டு வெள்ளி, சோற்று வெள்ளி, விடி வெள்ளி என்பன அப்பெயர்கள், விழும் விண்மீனை இருப்பிட அடிப் படையில் கூட்டு வெள்ளி அறை ஓடுதல், விடிவெள்ளி அறை ஓடுதல் என்பர். இங்ஙனம் அறை ஓடினால் புயல், காற்று, கொந்தளிப்பு ஆகியன ஏற்படலாம் என்று பரதவர் அஞ்சுவர். இது இவர்தம் நம்பிக்கை

அன்னபார் = அன்னம் -நீர்வாழ் பறவையினம். வாத்து போன்றது. Anna Par; Anna or Annam Signifies Swan (J.H.)

அஷ்டமி = அட்டமி நாளில் கடல் நீரோட்டம், தண்ணி அற ஓடுதல் ஆகியன குறிப்பிடத் தகுந்த மாற்றத்திற்குள்ளாகும். இவ்வாறே அமாவாசை, பௌர்ணமி ஆகியன குறிக்கத்தக்கன.

ஆசாரி = கட்டுமரம், தோணி, படகு, வள்ளம் ஆகியன கட்டிச் செதுக்கும் தச்சு வேலை செய்பவர்

ஆஞ்சான் = மரக்கலப்பாய் கட்டுங்கயிறு

ஆஞ்சாங்கயிறு = பார்க்க -ஆஞ்சான்

ஆஞ்சாம்பற்றி = மரக்கலப்பாய் கட்டும் தூண்

ஆஞ்சான்வாரி = வள்ளம் அல்லது தோணியில் சிறியாய் 'கட்டப்பட்டிருக்கும் மரத்தைத் தாங்கும் பலகை. இதற்குப் 'பிச்சில்வாரி' என்ற மறுபெயரும் உண்டு.

ஆடாதிருக்கை = மீன் பெயர். திருக்கை மீனின் வகை. காண்க: திருக்கை. சுறாவேலா என்னும் சுறாமீனை விட அபாயகர மானது. சங்கு குளிக்கும் பரதவர்க்கு ஊறு விளைவிப்பது. குளியல் சங்கு எடுக்கும்போது

பாய்ந்து தொடையைக் கடித்துவிடும் இயல்பினது. பரதவர் இம்மீனுக்கு மிகவும் அஞ்சுவர். **ஆட்டுக்கத்திகோலா** = மீன் வகை. Belone Strongulara

ஆத்துவாய் = ஆற்றுவாய். ஆறு கடலுடன் கலக்குமிடம்

ஆத்துவி ஆறுபாகம்பார் = ஆற்றுவாய் ஆறுபாகம் பார். Bank near mouth of the river in six fathoms (J.H.)

ஆத்தொம்பது பார் = ஆற்று ஒன்பது பார். Nine fathom bank off river; 'Ombadu' a corrupt form of 'onpatu' (J.H.)

ஆமை = நீர் வாழ் உயிரினம். Turtle

ஆயினீஸ்மரம் = வள்ளம் முதலானவை செய்யப் பயன்படும் மரம். கேரளாவில் உற்பத்தியாவது. எண்ணெய்ப் பசையுடையதும் நீர் உறிஞ்சாத் தன்மையுடையதும் ஆகும்.

ஆரால் = மீன் வகை. Rhyncobdella Spp.

ஆலந்தலைப்பத்துர் = ஆலந்தலை பத்து பார். The 10 fathom bank of Alanthalai (J. H.)

ஆலா கத்துதல் = கடற்கரையோரக் காட்டுப் பகுதி களில் வாழும் ஒரு பறவை ஆலா. இது கத்தினால் மழை வரும் எனப் பரதவர் நம்புகின்றனர். 'ஆலா கத்த கத்த, அத்திமழை பெய்ய பெய்ய' - என்பது அவர்தம் பழமொழி.

ஆவட்ட சோவட்ட = ஓர் ஒலித் தொடர். இத்தொடரை, மிகுதியான களைப்பு எனும் பொருளில் பரதவர் பயன்படுத்துகின்றனர்.

ஆவுகரியா = மீன் வகை. குட்டி போட்டுப் பால் கொடுக் கும் மம்மூலியா இனத்தைச் சேர்ந்த மீன். இராமநாதபுரம் மாவட்டம் குருசடைத் தீவில் நெடுங்காலமாகப் பிடிக்கப் படுவது

ஆழம் = கடலாழம். Depth

ஆழிக்கடல் = 'ஆழி' எனினும் 'கடல்' எனினும் ஒன்றே. ஆழம் மிகக்கொண்டது ஆழி. பரதவரிடையில் ‘ஆழிக் கடல்' எனும் தொடர் 'ஆழமான கடல்’ எனும் பொருளில் வழங்கப்படுகிறது.

ஆளி = சிப்பி. கிளிஞ்சல் போன்றது, Oyster

ஆளித்திடல் = ஆளிப்படுகை, Oyster bed

ஆறாம் வெள்ளி = நடுக்கடலில், பரதவர் திசையறிய, வழி காட்டும் ஆறு புள்ளிகள் போலத் தோற்றமளிக்கும் - விண்மீன் தொகுதி, கூட்டம். ஆறு வெள்ளி--ஆறாம் வெள்ளி

ஆறுனபாட்டன் = பரதவர் கடல் தொழிலில் ஈடுபட்டிருக் கும்போது காற்று பலமாக வீசினால் கடல் நீரைக் கையால் அள்ளி பாய்மீது தெளித்துக் கும்பிட்டு வணங்குவர். இப்படிச் செய்யும்போது 'ஆறுனபாட்டன், நேர்பாட்டன், சீர்பாட்டன்' எனக் கூவுவர். இங்ஙனம் செய்வதால் காற்று (பாட்டன் முறை) சினந்தணிந்து அடங்கும் என நம்புவர்

ஆனி = ஒருவகைக் கிளிஞ்சல் மீன்; கூர்மையான தோற்றம் கொண்டது.

ஆனைமட்டி = ஒருவகைக் கடல் கிளிஞ்சல்

ஆஸ்பிடித்தல் = தெப்பம், தொட்டான் முதலிய உப்பளப் பாத்திகளுக்கு வரப்பு போடுதல்

இடர்பாய்மரம் = அவசர, ஆபத்துக் காலங்களில் உதவிகரமாக இருக்கும் பாய்மரம். Hullock; Trysail

இணைவலை = வலையின் உறுப்பு, வலைகளைத் தம்முள் ஒன்றுக்கொன்று இணைக்கும் பகுதி

இப்பி = சிப்பி, சங்கு

இயற்கை முத்து = கடல் சிப்பிகளில் இயற்கையாகவே உண்டாகும் முத்து. Genuine Pearl

இராக்கெட் சங்கு = இராக்கெட் - விண்கலம்; இராக்கெட் திடிரென்று விண்ணில் சூறிப் பாய்வது போல - இவ்வகைச் சங்கு 5 அடி, 10 அடி நூரில் பாய்வதால் பெற்ற பெயர். அண்மைக் காலங்களில் லாஞ்சுகள் புழக்கத்திற்கு வந்தான பின்னர் இழுவை வலைகளில் இது மிகுதியாகக் கிடைக்கத் தொடங்கிற்று. சங்கு வகைகளுக்குள் இது அரியது. விரல் அளவுடையது. ரூ. 1000/- வரையும் பெறுமதி உடையது.

இராமேஸ்வரம் = சங்கு வகை. இராமேஸ்வரம் பகுதியில் மட்டும் கிடைக்கும் ஒருவகைச் சங்கு. இடவாகு பெயர்.

இராவணன் விழி = சங்கு வகை, இராமநாதபுரம் மாவட்டத்தில் கிடைப்பது

இருட்டு அமாவாசை = அமாவாசை நாளிரவு மிகவும் இருட்டாக இருப்பதால் அமாவாசையை 'இருட்டமாவாசை' என்றே அழைப்பர். இந்நாளில் கடல் நூரோட்டம், தண்ணி வாட்டம் ஆகியன குறிப்பிடத்தகுந்த மாற்றம் கொள்ளும்.

இரு பிறவி = சங்கு வகை. இராமநாதபுரம் மாவட்டத்தில் கிடைக்கும் வகை

இரைமூன் = பெருமூன் பிடிப்பதற்காகத் தூண்டில் மூள் கொக்கியில் மாட்டும் சிறுமூன்

இலுப்பா = ஒருவகைச் சுறாமூன்

இழுபடகு = இழுவைப் படகு. Tug boat

இழுப்புக்கயிறு = வலையை இழுப்பதற்கு வசதியாக அமைந்த கயிறு. TOW rope

இருவலைக்கயிறு = வலையுடன் இணைந்த கயிறு. Towing Warp

இழுவலை = வலைவகை Trawlers

இழுவைக் கயிறு = இழுக்குங்கயிறு, நெடுங்கயிறு

இழுவைப்படகு = இழுக்கப்படும் படகு

இழுவை = இழுவை வலையில் பட்டமீன். Haul

இளந்தண்ணி = உப்புக்காட்டம் அல்லது அடர்த்தி குறைந்த உப்பு நீர்

இறப்பாக் கட்டை = வள்ளத்தில் விழும் அல்லது புகும் கடல் நீரை இறைத்து வெளியேற்றப் பயன்படுகிற கட்டை

இறல் = கிளிஞ்சல்

இறுக்காவலை = வலைவகை; தடித்த நைலான் நூலினால் ஆனது. 10 அல்லது 12 அடி அகலமும் 500 அடி நீளமும் கொண்டது. இவ்வலை பல துண்டங்களின் இணைப்பாகும்; வலையின்கண் 3 அங்குல நீளமுடையதாக இருக்கும். வலையின் மேற்புறம் மிதவைக் கட்டைகளும் கீழ்ப்புறம் அளவான சிறு கற்களும் கட்டப்பட்டு கடல் நீரில் வேலி போல் மிதக்கும் இயல்பினது.

இறால் = மீன் வகை

ஜட்ஃபி = ஆழ்கடல் மீன்பிடி படகு. இதன் - நீளம் 43 அடி. Zenebh Boat

ஈசானதிசை = வடகிழக்குத் திசை

ஈரப்பதம் = காற்று வெம்மையாய் இராமல் குளிர்ச்சியாய் இருத்தல்

ஈரால் = இரால் இறால் எனும் சொற்களின் முதல்

உக்கயிறு = வீசுவலையில் உள்ள உள் கயிறு

உடுவலை = வலைவகை

உப்பங்கழி = கடற்கரையருகில் நீண்ட கால்வாய்களாக அமைந்திருப்பது. கடல் நீர் ஏறி இறங்கும் கால்வாய், காயல், உப்பளம் Back water

உப்பங்காத்து = உப்பு அம் காற்று கடற்காற்று, தென்கிழக்கிலிருந்து வீசும் கடற்காற்று எனும் பொருளும் உண்டு .

உப்பளவர் = உப்பு விளைவிப்போர், பரதர் வெள்ளுப்புப் பகருநர் மீன்வலைப் பரதவர்

உப்பாணி = உப்புச் சுமப்பவன். விளையாட்டில் தோல்வி அடைந்தவன் வென்றவனைச் சுமக்கும் விளையாட்டு உப்புச் சுமத்தல் இழிவெனும் கருத்து உப்பு விளைவிப்போரின் சமூக நிலையைச் சுட்டும்.

உப்பு = அராகம், இலவணம், இனிமை, உருசி, உவர்த்தல், எல்லை, கடல், மகளிர், விளையாட்டு

உப்புக்கரித்தல் = உவர்த்தல்

உப்புக்களிக்கெளிறு = மீன் வகை . Arius Jella

உப்புத்தண்ணீர்த்தீவுபார் = Uppu Thanni Tivu Bank; 'Uppu Salt: An island close to Nalla Thanni Tivu where the walls are brackish (J.H.)

உப்பு நீரி போதல் = அளவுக்கு அதிகமான வெப்பத்தாலும் காற்றாலும் உப்பளங்களில் உப்பு மிகவும் பொடிப்பொடியாய்ப் பொடிதல்

உப்புப் படுதல் = உப்பு விளைதல்

உப்புப்பற்றுதல் = உப்புப் பிடித்தல்

உப்புப் பாத்தி = உப்பு விளைதற்கிடமான பாத்தி

உப்புப் பாறை = கடலடியில் உப்புப் படிவம் படிந்த பாறைகள், Evaporites

உப்புப் புல்லு = உப்புப்புல். உவர்த்தரையில் (உப்பளங்களில்) முளைக்கும் புல்

உப்புப் போடுறது = கருவாடு தயாரிப்புக்காகக் கட்டப்பட்டிருக்கும் பெரிய சிமெண்ட் தொட்டிகளில் மீன்களை டன் கணக்கில் கொட்டி உப்பிடுதல்

உப்பு மாறுதல் = உப்பு விற்றல்

உப்பு மூலை = தென்கிழக்கு மூலை

உப்பு வாடி = உப்பு கொட்டும் மேடை

உமட்டியர் = உப்பு விற்கும் மகளிர்

உமரி = கடற்கரைப் பூண்டு; நெய்தல் நிலத் தாவரம். பரதவ சமூகத்தினரால் கூரை உணவாக உட்கொள்ளப்படுகிறது

உமணத்தி = உமணப் பெண்

உமணர் = உப்பு விற்கும் ஆடவர்

உப்பு = கருவாடு தயாரிப்பில் பயன்படுகிற சிமெண்ட் தொட்டியில் ஒருவாரகாலமாகச் சேர்ந்திருக்கும் உப்பை அள்ளி வெளியே கொட்டிவிட்டுப் புதுத் தண்ணீர் விடுவர். இப்படி அள்ளப்படும் உப்பானது மீனுடன் ஊறிய உப்பாதலால் நல்ல உரமெனக் கருதப்பட்டு தாவரங் களுக்கு அடி உரமாக போடப்படுகிறது. இது உரஉப்பு.

உருமால் = வலையால் கட்டிக் கொள்ளப்படும் தலைப் பாகை

உல்லம் = மீன் வகை

உல்லாவலை = வலைவகை; உல்லம், வஞ்சிரம், வவ்வால் ஆகிய மீன்களைப் பிடிக்கப் பயன்படும் வலை. வலைக்கண் 2 அங்குலம் கொண்டது. பல துண்டங்களின் இணைப்பு; ஒரு துண்டு வலை 15 அடி அகலமும் 50 அடி நீளமும் கொண்டதாகும். இப்படி பத்துக்குக் குறையாத துண்டங் களை இணைப்பதால் உருவாவது 100 கட்டவலை, 60 கட்ட வலை என்று பரதவர் கூறுவர். வலை மேல்புறம் மிதக்கும் மிதவைக் கட்டைகளின்

எண்ணிக்கையால் இதன் அளவைச் (நூளம்) சுட்டுவர். காற்று, வெள்ளம் ஆகிய வற்றிற்கு ஏற்பப் பரதவர் இவ்வலையைக் கையாளுவர். ஒருவகையான துவர்ச்சாயம் தோய்க்கப்பட்ட இவ்வலைகள் மூன்னாளில் ஆந்திரப் பிரதேசத்திலிருந்து வந்தன. துவர் நுணுக்கம் ஆந்திரர் மட்டுமே அறிந்ததாகும். தற்போது இதற்குப் பதில் நைலான் வலை பயன்படுத்தப்படுகிறது.

உவரி அந்தோணியார் கோயில் புடித்தபார் = Ovari Anthoniyarkoil Piditha Par; Ovari-the name of a village; Anthoniyarkoil-St. Antony's Church; Bank touching St. Antony's Church at Ovari (J.H.)

உவரி அந்தோனியார் கோயில் வள்ளவிளைபார் = Ovari Anthoniyarkoil Vallai velai par (J.H.)

உவர்நீர் = உப்பு நீர். Brackish wator

உழப்புமிதி = உப்பளத் தயாரிப்புக்காகக் களிமண்ணில் உழவுபோட்ட பின்னர் காலால் குறுக்கவும் நெடுக்கவும் நடந்து மிதித்தல்

உழவு போடுறது = அளத்தை மாடுகட்டி உழுதல்

உளுவை = மீன் வகை. Butis butis, Glassogobius Spp.

உள்ளான் = மீன் வகை, இராமநாதபுரம் மாவட்டக் கடற்கரையில் பிடிக்கப்படும் மீன் வகை. மிகுந்த சுவையுடையது, "உள்ளதை எல்லாம் விற்றாவது உள்ளான் வாங்கிச் சாப்பிடு" என்பது பழமொழி.

ஊசி = 1. வள்ளத்தின் உறுப்பு, 2. வலை தயாரிக்க உதவும் சிறுகருவி

ஊசிகோலா = மீன் வகை . Belone Strongulara

ஊசிப் பலகை = பரதவர் மீன்பிடி கருவிகளுள் ஒன்று

ஊச்சி = பொடி சிப்பி

ஊஞ்சல் மரம் = கடலூர்த்தி தயாரிப்புக்கு உதவும் . மரம் Albizzia Ainara

ஊடச்சு = வள்ளம், தோணி இவற்றின் அடித்தளத்தில் அமைந்திருக்கும் அச்சு. Axis

ஊடம் = மீன் வகை. 'ஊடகம்'

ஊடிணைப்பு = வலைகட்டும்போது சிறு அளவில் இருமுனைகளை இணைக்கப் பயன்படும் கயிறு

ஊடுருவியார் = Possibly has reference to a Cavernous Condition of the rock, enabling fish to pass in and out of the cavities. Uduruvi-Penetrating or passing through (J.H.)

ஊத்தா = வலைவகை. தூரிபோன்ற அமைப்புடையது

ஊத்தி பார் = Snail bank, Oti or Uti, a snail like molluse, probably a corrupt form of Uri, the name of a small spiral shell-fish (gastropod) that is an active enemy of the Pearl Oyster during the first four months of life (J.H.)

ஊரக் கருவாடு = கூறி (பிளந்து) உப்புவைத்துப் பதப்படுத்தப்பட்ட கருவாடு

ஊரா = மீன் வகை. Acanthurus Spp. Surgeon fish

ஊரி = மீன் வகை. Amply pharngodon

ஊளைக்காத்து = ஊதல் காற்று, ஊதைக்காற்று

ஊளா = மீன் வகை. நெடுவாய் மீன் Sphyraena Obtusata

ஊளி = மீன் வகை. கொக்கிக் கயிற்றால் பிடிக்கப்படும் மீன். Sphyraena Obtusata

ஊன் = சங்கினுள் உள்ள தசை. சங்குக் கிடங்கினுள் குவியலாகக் கொட்டியிருக்கும் சங்கிலிருந்து வடியும் ஊன்

எச்சப்படுதல் = சங்கு, முத்து குளிப்பவரை சுறாக்கள் கடித்தால், பரதவர் 'எச்சில் பட்டுவிட்டது' எனும் தொடரால் இதனை உணர்த்துவர்.

எடவலை = வலைவகை. 'எடவலை' இறக்குவதற்கு முன்னரே தென்னை, பனை மட்டைகளைக் கடலின் குறிப்பிட்ட பகுதியில் போட்டு வைத்திருப்பர்; பின்னர், 'எடவலை'யை அப்பகுதியில் பக்குவமாக இறக்கி மட்டைகளை மொய்த்துக் கொண்டிருக்கும் மீன்களையெல்லாம் வலைக்குள் விழுமாறு நீரில் மூழ்கி நுழைப்பர். இவ்வலைக்குக் கம்பி வலை, மதவலை எனும் மறுபெயர்களும் உண்டு.

எரசல் = கனம் குறைந்த, இலேசான உப்பு

எருமை நாக்கு = மீன் வகை. Brachirus Commersonii

எழுத்தாணிச் சங்கு = சங்கு வகை. நீளமாகவும் கூர்மையாகவும் ஏறக்குறைய எழுத்தாணி போன்ற அமைப்பில் இருப்பது. உவமை வகையால் வந்த காரணப்பெயர்

எளநாடு = கடல் படுகையில் இருக்கும் சல்லி நிலத்தில் (பார்க்க-கடல்படுகை, சல்லிநிலம்) கம்பங்கதிர் அமைப்பில் 'சங்குப்பூ' இருக்கும். இதற்கு 'எளநாடு' என்று பெயர். ஒரே ஓர் எள நாட்டில் பல்லாயிரக்கணக்கான சங்குகள் உற்பத்தியாகின்றன. லாஞ்சிக்காரர்கள் வலை போட்டுச் சங்கு பிடிக்கும் முறையால் இந்தச் சங்குப்பூக்களை (எளநாடுகளை) நசுங்கி அழியும்படி செய்து விடுகின்றனர். இதனால் சங்கு உற்பத்தியும் சங்குத் தொழிலும் பாதிக்கப் படுவதாக வள்ளத்தில் சென்று சங்கு குளிக்கும் குளியர்கள் கூறுகின்றனர்.

எஸ். டி. பி. = டீசலால் இயங்கும் விசைப்படகு; இதன் நீளம் 32 அடி; இழுப்பு வலை, கில்நெட் ஆகியன இப்படகில் மீன்பிடிக்கப் பயன்படுகின்றன. இதில் தொழில் செய்வதால் கிடைக்கும் வருமானத்தில் 60% விசைப்படகு உரிமையாளரும் 40% தொழிலாளரும் பிரித்துக்

கொள்கின்றனர். டீசலுக்கு ஆகும் செலவு இருவருக்கும் பொதுவானது. இப்படகில் பணி செய்ய ஆறு ஆட்களுக்குமேல் தேவைப்படுவர். Stand Trawler Boat

ஏத்துமீன் = கடல் நீரோட்டத்தை எதிர்த்து ஏறும் மீன். நீரோட்டத்திசைக்கு எதிர்த்திசையில் நீந்தும் மீன்

ஏரா = வள்ளம் அல்லது படகின் அடிக்கட்டை . Keel. மரக்கலத்தின் அடிமரம், வள்ளத்தின் இரண்டாவது ஏரா

ஏராக்கட்டை = பெருவலைப் படகின் அடிப்பகுதி

ஏலம் = மீனவர் வலையில் பட்ட மீன்பாட்டினை உச்சகட்ட விலைக்கு ஏலம் போடுதல். Auction

ஏறல் = கிளிஞ்சல்

ஏறா முதல் பலகை = ஏறா - நீர் ஏற முடியாத மேடு, மரக்கலம் நீரில் மிதக்கும் போது நீர் பரப்பிற்கு மேல் உள்ள வள்ளத்தின் சுற்றுப்புற முதல் சட்டம்.

ஏறா இரண்டாம் பலகை = ஏறாவில் இரண்டாம் சுற்றுச் சட்டம். பார்க்க - ஏறா முதல் பலகை

ஏறினி = கடலின் வெள்ளப் பெருக்கு

ஏற்றுமதி = கிழக்குக் கடற்கரையிலிருந்து வெளிநாடுகளுக்கு அனுப்பப்படும் பொருட்கள் - இல்மனைட் மணல், உப்பு, உலர் இலைகள், கருவாடு, தேங்காய் எண்ணெய், பச்சிலை, பட்டைகள், பனந்தும்பு, மிளகாய், வெங்காயம் ஆகியன. Export

ஐ. பி. = டீசலால் இயங்கும் விசைப்படகு. இதன் நீளம் 30 அடி; ஆழ்கடல் மீன்பிடிப்புக்கு பயன்படுவது. நாள் வருமானத்தில் 65% படகு

உரிமையாளரும் 35% தொழிலாளரும் பிரித்துக் கொள்வர்; இப்படகில் தொழில் செய்ய 4 அல்லது 5 தொழிலாளர் போதும். Illugasan Boat

ஐரத்தீவுகுடாமுத்துபார் = Irai Tivu Kuda Muthu Par; Irai - literally finger joint, inch; Kuda-bay; Muthu --Pearl (J. H.)

ஐவிரலி = சங்கு வகை. மனிதருடைய விரிந்த கைவிரல் களைப் போன்ற அமைப்பில் இருக்கும் சங்கு. ஐவிரல் சங்கு என்பதன் சுருக்கம்.

ஐவிரல் சங்கு = பார்க்க-ஐவிரலி

ஒட்டி = சிறு அளவிலான மீன் வகை; திமிங்கலம் போன்ற பெருமீன்களை அழித்து அவ்வினம் கடலில் பெருகாதவாறு இம்மீன் பார்த்துக் கொள்கிறது எனப் பரதவர் நம்புகின்றனர்; மனிதர் பாதம் போன்ற வடிவுடைய இந்த 'ஒட்டி' மீனானது திமிங்கலம் போன்ற பெருமீன்களின் புறத்தே ஒட்டிக் கொண்டு துளைபோட்டு இரத்தம் முழுவதையும் உறிஞ்சிக் குடித்துவிடும் இயல்பினது; இதனால் திமிங்கலம் முதலானவை ஓர் எண்ணிக்கைக்குள் மட்டுப்படுகின்றன என்பர் பரதவர்.

ஒட்டுமுத்து = உள்ளே திடமாகவும் கெட்டியாகவும் இராமல் திரவத்துளிகள் அமையப் பெற்ற முத்து. Blister Pearl.

ஒட்டம் = பார்க்க - அமக்கரம்; படகின் மேல் பகுதியில் கட்டப்பட்டிருக்கும் ஓர் உறுப்பு

ஒட்டு முளை = வலிக்கின்ற தண்டுகளைப் பிணைத்து வைக்கின்ற முளை போன்ற உறுப்பு

ஒத்தமரத்துவாரி = கடல் தொழிலாளிகள் - உட்கார்ந்து கொண்டு ' தண்டு' (துடுப்பு) வலிக்க வசதியான பலகை. அணியத்துவாரியின் பயனைப் போல பயன்படுவது. அத்து - தைத்தல் இசைத்தல்

ஒமல் = உமல். மீன் பிடிக்கிறவர்களின் ஓலைப் பை பெரும்பாலும் தென்னோலையால் ஆன பெட்டி

ஒரு தோணி வலை = கடல் தொழிலில் ஒரு தோணிக்கு வேண்டிய வலை; வலையின் அளவுப் பெயர்

ஒரு மரத்து வலை = கடல் தொழிலில் ஒரு கட்டு மரத்திற்கு வேண்டிய வலை

ஒரு மரத்துவாரி = ஒரே தடியால் உருவாக்கப்பட்ட கட்டு மரம்

ஒழினிவெள்ளம் = வெள்ளம் -நூரோட்டம். கிழக்கிலிருந்து மேற்காக ஓடும் நூரோட்டம் (திசைகள் மன்னார் வளைகுடாவைப் பொறுத்த மட்டில் குறிக்கப்படுகிறது)

ஓங்கல் = 1. மூன் வகை, 2. மரக்கலம்

ஓடக்கரை துண்டுபார் = ஓடை கரை துண்டு பார். Narrow and Small bank towards the Shore (J.H.)

ஓடக்கரை பார் = ஓடை கரை பார். Narrow bank towards the Shore (J.H.)

ஓடத்துறை = ஓடம் நிற்கும் இடம். Quay

ஓடம் = கடலூர்தி. Craft

ஓடு கயிறு = Trolling line

ஓரா = மூன் வகை

ஓலப்பாய் = ஓலைப்பாய். கருவாடு கட்ட பயன்படும் பாய்

ஓலவக்கிறது = உப்பள வரப்புகளின் இருபுறமும் வரப்பு பாதுகாப்பிற்காக பனை அல்லது தென்னை ஓலையைப் பதித்தல் - ஓலை வைத்தல்

ஓலவால்திருக்கை = மூன் வகை. Dasyatis Sephen

ஓலவாள = மீன் வகை. ஓலை வாளை. Trichiurus haumela

கங்காணி = தோணியில் 'மேஸ்திரி' போல தொழில் பார்ப்பவர். பார்க்க - சவருக்குப் போதல்

கச்சாங்காத்து = கீழ்க்காற்று அல்லது கொண்டல் காற்று எனும் பொருளில் இராமநாதபுரம் மாவட்டத்திலும் தெற்கிலிருந்து வீசும் காற்று எனும் பொருளில் திருநெல்வேலி மாவட்டத்திலும் பயன்படும் சொல்

கச்சால் = வீன்பிடிக்கும் கூடு

கங்காணி = தோணியில் 'மேஸ்திரி' போல தொழில் பார்ப்பவர். பார்க்க - சவருக்குப் போதல்

கச்சாங்காத்து = கீழ்க்காற்று அல்லது கொண்டல் காற்று எனும் பொருளில் இராமநாதபுரம் மாவட்டத்திலும் தெற்கிலிருந்து வீசும் காற்று எனும் பொருளில் திருநெல்வேலி மாவட்டத்திலும் பயன்படும் சொல்

கச்சால் = வீன் பிடிக்கும் கூடு

கச்சான் = தென்மேற்குக் காற்று. மழை, வரும் முன்னர் வீசும் காற்று. 'கச்சான் மழைக்கு மச்சான்' என்பது பழமொழி

கச்சாக் கழி = கச்சா வலையில் உள்ள கைப்பிடிக்கழி

கச்சாங்கோடை = தென்மேற்குத் திசையிலிருந்து வட கிழக்குத் திசைநோக்கி வீசும் காற்று

கச்சாவலை = வலைவகை. இது இருவகைப்படும். (1.' வட்டமான கழியைச் சுற்றிக் கூம்பு போல ஒருவலை அமைந்திருக்கும்; இது கைக்கு அடக்கமாகவும் சிறு அளவிலும் காணப்படும். இதனைப் பயன்படுத்தி இறால், நண்டு ஆகியனவற்றைப் பிடிப்பர். (2) நீளமான இரண்டு கழிகளில் பை போன்ற அமைப்பில் பிணைக்கப் பட்டிருக்கும்; இதனை இருவர் பயன்படுத்தி கோலா மீன் பிடிப்பர்.

கஞ்சி கொடுத்தல் = வலை உறுதியாக விளங்குவதற்காக அரிசி மாவினால் கஞ்சி செய்து வலைக்குக் கஞ்சியிட்டு உறுதிப் படுத்தல்

கஞ்சி வைத்தல் = மேற்படி விளக்கம் காண்க. பருத்தி வலையை உறுதியாக்கவும் குற்றம் கழிவதற்காகவும் அரிசி அல்லது கேழ்வரகுக் கஞ்சியில் நனைத்தல்

கடகம் = பனை நாரால் பின்னப்பட்ட பெட்டி. மீன் விற்கும் பெண்டிர் பயன்படுத்தும் கருவி

கடப்பலகை = கட்டு மரத்தின் கடைசியில் உள்ள சுக்கான் பலகை

கடப்பாளம் = மிதவை போன்ற அடையாளக்கருவியை நிலை நிறுத்தும் கயிறு. Buoy anchor rope

கடலடி = கடலின் அடிப்படுகை. Benthic; Sea bottom

கடலடிக்குன்று = பார். கடலின் கீழுள்ள பாறை. Submarine ridge

கடலம்மை = கடல் தாய், கடல். உருவகம்.

கடலாமை = ஆமை வகை. சிலர் இதனை உணவுப் பொருளாக உட்கொள்வர். இதில் சில வகைகள் நச்சுத் தன்மை உடையவை

கடலிறக்கம் = தாழ்கடல். Low tide

கடலுளுவை = மீன் வகை

கடலேத்தம் = உயர்கடல். கடல் ஏற்றம். High tide

கடலோடி = 1. கடலில் தொழில் செய்பவர். Seaman, 2. மரக்கலமோடுவோன்

கடல் கழி = கடலையொட்டிய கால்வாய். Firth

கடல் அறைஓடல் = காண்க - அறை ஓடல்

கடல் உடும்பு = ஒருவகைக் கடல் மீன்

கடல் எடுத்தல் = சமுத்திரம் பெருகுதல்

கடல் ஓட்டு = கப்பலோட்டு

கடல் கழுகு = மீன் வகை. Erne

கடல் கன்னி = கடல் தேவதை. கடலோடிகளான பரதவர்களின் வணக்கத்திற்குரிய பெண் தெய்வம். மீன் வகை. பாம்பன் கடலில் 7 அடி நீளமும் 2அடி அகலமும் உள்ளவையாக இவை அகப்படுகின்றன. இவை 80 ஆண்டுகள் வரை வாழும். முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்காமல் குட்டி போட்டு பால் கொடுக்கும். பரதவர் கடல்கன்னியைக் கடவுளாகக் கருதுவதால் இவற்றை உணவாக உட்கொள்வதில்லை. கடல் கன்னியின் தோல் பணப்பை செய்ய பயன்படுகிறது. Mermaid

கடல் கட்டி = செம்படவன், மச்சங்களின் வாய கட்டுபவன்

கடல்காத்து = கடல் வழி வீசும் காற்று. Sea breeze

கடல் கால் = இரு பெருங்கடல்களை இணைக்கும் நீர் இணைப்பு (ஜலசந்தி). Strait

கடல் குதிரை = மீன் வகை. Trachyrhamphus Serratus

கடல் கூம்பு = சிறுகுடா. Cove

கடல்கோரை = கடல் நீர்த் தாவரம். Agar

கடல் சுரப்பு = கடல் கொந்தளிப்பு

கடல் பன்றி = கடல் வாழ் உயிரினம்

கடல் புலி = கடல்வாழ் உயிரினம்

கடல் முனை = கடல் அந்தம்

கடல் திட்டு = கடல் நடுவில் உள்ள சிறுநிலம். Head land

கடல் நாய் = கடல்வாழ் பிராணி. Seal

கடல் நீரோட்டம் = கடலில் ஓடும் நீரோட்டம். Sea Current

கடல் பசு = இது ஒரு சிறிய திமிங்கலம் போன்றது. 8 முதல் 12 அடி நீளம் உடையது. கடற்பூண்டுகளைத் தின்று உயிர் வாழ்வது. Dugong

கடல் பஞ்சு = கடல்வாழ் உயிரினம். பவழ இனம், Anthozon

கடல் படுகை = கடலடிப் படுகை. Sea bed

கடல் பண்ணி = கடல் பன்றி. Dolphin

கடல் பள்ளம் = கடலடியில் உள்ள பள்ளம். Trough

கடல் பாறை = இராமநாதபுரம் மாவட்டக் கடல் பகுதியில் உள்ள நல்ல தண்ணீர்த்தீவு, உப்புத்தீவு, தலையாரித் தீவு, வெள்ளித்தீவு, முள்ளித்தீவு, முயல் தீவு, மண்ணளித் தீவு, குருசடைத் தீவு, பூ முறிச்சான் தீவு, சிங்களத் தீவு, புல்லித் தீவு, கச்சத்தீவு ஆகிய பல சின்னஞ்சிறிய தீவு களைச் சுற்றியும் கடலோரத்திலும் இப்பாறைகள் உண்டா கின்றன. தெளிந்த நீராறுகள் வந்து சேரா இடமாகவும் படிவங்கள் சேரா இடமாகவும் இருப்பின் இப்படிப்பட்ட கடல் பாறைகள் உருவாகும். Coral Reefs

கடல் புலி = சுறாமீனின் மறுபெயர்

கடல் பேய் = மீன் வகை. உருவமும் பற்களும் பயங்கர மான வடிவமைப்பில் உடையவை. மிகப் பருத்தும் குறுகி யும் மனிதர்களும் பிராணிகளும் அஞ்சத்தக்க வகையில் செயல்படுபவை.

கடல் முயல் = ஓடில்லா நத்தை . Aplysia

கடல் வண்டல் = கடல்வடிப் படியும் படிவங்கள். Marine Sediment

கடல் வயலா(க) இருத்தல் = கடல் மிகவும் அமைதியாக இருத்தல்

கடல் வாங்கலா(க) இருத்தல் = கடல் சிறிதளவு கொந்தளிப்பாக இருத்தல்

கடல் வாத்து = மீன் வகை. Eider

கடல் விறால் = மீன் வகை. Elacate nigra

கடல் வெள்ளரி = கடல் அட்டை . Sea Cucumber

கடாயக் கோல் = கட்டுமரம், தோணி ஆகியவற்றின் பின்பகுதியிலிருந்து குத்திக் கலத்தை முன்னோக்கிச் செலுத்தும் கோல்

கடுந்தண்ணி = காட்டம் அல்லது அடர்த்தி மிகுந்த உப்புநீர்

கடுப்புக் கழி = பார்க்க-குழிவலை

கடுமிதி = அடுக்குமிதிக்குப் பின்பு அளம் இறுகுவதற்காக உப்பு நீர் விட்டு இறுகும்படி மிதித்தல்

கடுமை = கடல்காற்றின் 'வேகத்தை' இச்சொல் புலப்படுத்துகிறது

கடையன் பார் = Kadeiyan Par; The Kadeiyar Caste is that of the lime-burners; it however furnishes & contingent of men who work as divers at the Chank and Pearl fisheries; the lime-burner's Bank (J. H.)

கடையன் = சுண்ணாம்புச் சுடுதலும் முத்துக் குளித்தலும் செய்யும் பரதவப் பிரிவினர்

கட்ட சுறா = மீன் வகை. Carcharhinus Melonopterus

கட்டா = மீன் வகை. Chorinemus Spp. Leather Jacket

கட்டியிழுத்தல் = வலையைக் கரைக்கு இழுத்தல், வள்ளத்தைக் கரைக்கு இழுத்தல். Towing

கட்டு கட்டுதல் = உலர்மீனை (கருவாட்டை)க் கட்டு கட்டாகக் கட்டுதல்

கட்டுத்தறி = கடல் கலத்தின் மேல் தளத்தில் உள்ள கம்பம். Bollard

கட்டுமரம் = சில மரத்தடிகளை வலுவான கயிற்றால் பிணைத்து ஆக்கப்பட்ட மிதவை. பாறை, பார் என வழங்கப்படும் கற்குவியல். கல்மலை நிறைந்த கடற்பகுதி களில் இது தொழிற் செய்ய பயன்படுகிறது. வள்ளம், தோணி ஆகியன பாறைகள் நிறைந்த கடலில் மோதி உடைந்துவிடும் அபாயமுண்டு. ஆனால் கட்டுமரங்கள் இப் பாறைகளால் உடைவதில்லை.

எற்றித்தள்ளப்படுகின்றன. திருச்செந்தூர் முதல் கட்டப்புளி வரை கட்டுமரங்கள் புழக்கத்தில் உள்ளன. இராமநாதபுரம் மாவட்டத்தில் கட்டுமரங்கள் குறைவு. காரணம் பார்கள் இல்லை. திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களில் பாறைகள் அதிகமாதலால் கட்டுமரங்களும் மிகுதி. Catamaran.

கட்டுவலை = வலைவகை . Stake net.

கட்டையடித்தல் = கால்மிதியால் கெட்டிப்படுத்தப் பட்ட உப்பள தளத்தைக் கனமான மரக்கட்டைக் கொண்டு அடித்து இறுகும்படிச் செய்தல்

கட்டை பற்றல் = வலையைக் கழுவிக் காய வைக்கும் போது வலை விரைவில் காய்ந்து விடும். மிதப்புக் கட்டை காயாது. ஆகவே புரட்டிப் போடுவர். இதற்குக் கட்டை பற்றல் என்று பெயர்.

கணலா = மீன் வகை

கணவா = மீன் வகை, 'கணவாய்'. இம்மீன் நிறைய கிடைக்கும் பார் 'கணவாபார்'. Sapio

கணவாபார் = Kanava Par; Kanava- Cuttle fish; Bank abounding in Cuttle fish (J.H.)

கண் = வலைக்கண்

கண்டமரம் = கடற்கரைப் பகுதியில் காணலாம். ஒரு வகைத் தாவரம், மரம்

கண்டர் கோடாரி = பார்க்க-அம்மு. தங்கு வலை; ஆழ் கடலில் மீன் பிடிக்கும் பரதவர் கரையேறுவதற்குள் மீன்கள் கெட்டுப் போகாமல் இருக்கக் குடலை அப்புறப்படுத்தி உப்பிட்டுப் பதப்படுத்துவர்; இதற்கு உதவும் இரும்பாலான கோடாரியாகும்

கண்டல் = மீன் வகை

கண்ணாடி = சங்கு, முத்துக்குளிப்போர் கடலின் அடியில் தொழிற்படும்போது உப்பு நீரால் கண்கள் எரியாமல் இருக்கவும் கண்களை அகலத்திறந்து சங்கு, முத்துச் சிப்பிகளைத் தேடிச் சேகரிக்கவும் வசதிப்படும்படியாக அணியப்படும் கண்ணாடி. இரும்புத்

தொழிற்பட்டறையில் கண் பாதுகாப்பிற்காக அணியப்படும் கண்ணாடி போன்றது. Watch glass.

கண்ணாடி மீன் = மீன் வகை . Ambassis, Glass fish

கண்ணி = வலைச் சந்து. One of the spaces in a net.

கண்ணிப் பலகை = மீன்பிடி கருவி. Mesh Board

கதம்பறால் = இறால் வகை

கதிர் = வலைக்குப் பயன்படும் நூலை முறுக்கேற்றும் கருவி

கத்தி = மீனைப் பதப்படுத்த உதவும் கருவி. பார்க்க: அம்மு, கண்டர்கோடரி

கப்பலோட்டி = கப்பல் ஓட்டுநர். Sailor

கப்ப வெள்ளி = கப்பல் போன்று தோற்றமளிக்கும் விண்மீன். இவ்விண்மீன் வடகிழக்குத் திசையில் காணப்படும்

கப்பி = பாய்மரத்தில் பாய் ஏற்றவும் இறக்கவும் பயன் படும் உருளை

கம்பி = மீன்பிடி தொழிலில் பயன்படுவது. தூண்டிலின் கொக்கிப் பகுதிக்கு முன் உள்ளது. மீன்களால் கயிறுகள் கடிக்கப்படுமாதலால் இதனைத் தடுக்கக் கம்பியைப் பயன் படுத்துவர்

கம்பி வலை = காண்க : எடவலை

கம்மாக்காரர் = இச்சொல் எளிய மீனவரைக் குறிக்கிறது

கயிறு = பாய் கட்டவும் பிறதேவைகளுக்கும் உதவும் நூல், நைலான் கயிறு

கயிறுகட்டி அரிதல் = உப்பள வரப்புகள் நேராக அமையும் பொருட்டு கயிற்றைக் கட்டி மண்வெட்டியால் அரிதல்

கயிறு காட்டியாச்சு = கடலில் வலை இறங்கும்போது பெருவலை வைக்கத் தொடங்கியாகி விட்டது என்பதை இத்தொடருக்குரிய பொருளாகப் பரதவர் கொள்கின்றனர்.

கயிறு சாம்புதல் = வலைக் கயிற்றை வள்ளம் அல்லது லாஞ்சில் இழுத்துக்கட்டுதல்

கரல் = மீன் வகை

கரவல = வலைவகை. கரைவலை. 2 கிலோ மீட்டர் நீளமும் 200 மீட்டர் அகலமும் 5 மீட்டர் உயரமும் உடை யது. கரையிலிருந்து கிளம்பிய படகுக்காரர்கள் கடலில் வெவ்வேறு திக்குகளில் நின்று கொண்டு அவற்றின் ஊடே கரைவலையை விரித்துப் பலவாறு குரல் கொடுத்து மீன்களை விரட்டி 6 மணி நேரத்தில் பல இலட்சம் மீன்கள் பிடித்து விடுவர். இது மீன்களைப் பிடிக்க ஒரு பொறிபோல் பயன்படுகிறது. இதில் மீன்களை ஏமாற்றுவதற்காக தேங்காய்த் துண்டுகள் பொருத்தப்பட்டிருக்கும். கரையிலிருந்து கரைவலையை இழுத்து மீன்களைக் கரை சேர்ப்பர்.

கரி எண்ண = கூல், தார், கரி எண்ணெய்

கரிமுட்டைச்சுறா = மீன் வகை. சுறா இனம். Carcharhinus Menisorrah; Dog Shark

கரிமுஞ்சிப்பாரை = மீன் வகை. Caranx ire

கரிய கருவல்பார் = Kariya Karuval Par; Karuval black; Probably from the colour of the Surface of the rock; In-Shore black bank (J.H.)

கரிவலங்கோலா = மீன் வகை. Belone Chorum

கருக்கல் = விடியல் பொழுது

கருப்பு மட்டலா = மீன் வகை. Acanthopagrus berda

கருப்புத்தேளி = மீன் வகை, Callichrous Spp.

கரு'மை = கரிய நிற மை. கணவாய் மீன் இந்திரமையைப் பயன்படுத்தித் தற்காத்துக் கொள்கிறது. காண்க : கணவாய்

கருவாடு = உலர்ந்த மீன். Dehydrated fish

கருவாட்டுத் தொட்டி = டன் கணக்கில் மீன்களைக் கொட்டி உப்பிட்டு ஊற வைப்பதற்கு ஏற்றவகையில் அமைந்த சிமிண்ட் தொட்டி. 5 அடி நீளம், 4 அடி அகலம் கொண்டது

கருவேலன் = மரவகை. கடல் கலங்கள் செய்ய ஏற்றது

கருவை = மீன் வகை . Aetobatus flagellum; Spotted eagle Ray

கரை = பரதவர் இடையில் இச்சொல் கடற்கரையைக் குறிக்கும்

கரைகாரர் = கடற்கரையில் முதல் மரியாதைக்கு உரியவர். ஜாதித் தலைவன்

கரைபார் = Karai Par; Bank lying towards the shore (J. H.)

கரை(ர) மரம் = கரைப் பகுதியில் தொழில் செய்யப் பயன்படும் சிறிய மரங்கள் (கட்டு மரங்கள்) 'கரைமரம்' எனப்படும். கவலை வலை, நண்டு வலை போன்றன கரை மரத்தொழிலுக்கு ஏற்றவை.

கரையார் = கடற்கரையில் வசிப்பவர். பரதவர். மீன் வலைஞர். Fishermen

கலக் கடல் = கச்சத்தீவுக்கு அண்மையில் உள்ள கடல் பரப்பு; மன்னார் வளைகுடாப் பரதவர் கலக்கடல் எனும் தொடரை மேற்குறித்த பொருளில் வழங்குகின்றனர்.

கலக்கு = கரையிலிருந்து கடல் நோக்கி ஓடும் நீரோட்டம் (அரணிவாடு) காரணமாகக் கடற்கரையிலிருந்து சுமார் 13 மைல் தொலைவு வரை கடல் நீர் தெளிவில்லாமல் கலங்கியிருத்தல். இக்கலக்கை கடந்த பின்னரே சங்கு குளியர்கள் சங்கு குளிப்பர்.

கலக்குமட்டிச் சுறா = மீன் வகை. Carcharhinus Melonopterus

கலங்கர விளக்கு = கலம் கரை விளக்கு. கலம் - வள்ளம், தோணி , லாஞ்சி, கப்பல் ஆகியன. கரை - கடற்கரை. கரை காணாத கடலுள் இறங்கிய கடல் தொழிலாளர்கள் இரவு நேரத்தில் கரையறிந்து திரும்பவும் தமது கரைக்குத் திரும்ப வழிகாட்டும் விளக்கு. Light house

கலப்பத்து வேலை = படகில் கயிற்றுப் புரியை அடிக்கும் வேலை. இது ஆசாரியின் வேலையாகும்.

கலவா = மீன் வகை

கல் உளுவை = மீன் வகை. Eleotris fusca

கல்லாந்தலை = மீன் வகை

கல்லாப் பாறை = மீன் வகை. Caranx armatus

கல்வெட்டி = மீன் வகை

கவடை = சங்கு வகை

கவல வலை = வலை வகை. 'கவலை' எனும் பெயர் கொண்ட மீனைப் பிடிக்க உதவும் வலை; நூலால் ஆனது; வலைக்கண் அரை அங்குலம் கொண்டது; துவர் தோய்ந் தது; பல துண்டு வலைகளின் இணைப்பு: இதன் நீளம் 200 அடி. கரைமரத் தொழிலுக்கு இவ்வலை மிகுதியும் பயன்படுகிறது. .

கவுண்டன் = இந்து சமயத்தைச் சார்ந்த பரதவர்

கவுளிப் பாத்திரம் = சங்கு வலை

கடல் கால்வாய், = கடல் நீர்நிலை, காயல். Lagoon

கழிவுமீன் = வள்ளத்தில் உள்ள மீனை ஏலம் விட்ட பின்பு இறுதியில் எஞ்சும் காரல் போன்ற சிறு மீன்கள். Trash fish

கழி முள்ளு = கடல் நடுவே உள்ள முள் காடுகள்

கழிவு முள்ளு = மீனிலிருந்து கழிக்கப்படும் முள்

கழியர் = உப்பளவர், நெய்தல் நில மக்கள்

கழிவுச் சங்கு = சங்கு, வளையல் போன்ற பொருட்கள் தயாரிக்கப்பட்டபின் எஞ்சிய பகுதி கழிவுச் சங்கு எனத் தள்ளப்படும். இதனைப் பயன்படுத்தி உயர்ரக சுண்ணாம்பு முதலானவை தயாரிக்கப்படுகின்றன.

களி நண்டு = நண்டு வகை

களியடித்தல் = உப்பளத் தயாரிப்பில் முதன் முதலாக வெற்று நிலத்தில் களிமண் கொட்டுதல்

களிவிரித்தல் = கும்பலாகக் கொட்டிய களிமண்ணை அளத்துடன் கலக்கும்படிச் சமமாகப் பாத்தி முழுமைக்கும் பரப்புதல்

கள்ளமீன் பிடிக்கிறவர் = வேறொரு வள்ளக்காரர் கடலில் இறக்கியிருக்கும் வலையில் பட்டிருக்கும் மீன்களைத் திருட்டுத் தனமாக அள்ளித் தம் வலையில் போட்டுக் கொள்பவர். பொதுவாக இச்செயல் இரவு காலங்களில் நடைபெறும். Black-fisher

கள்ளவலை = இச்சொல் இருபொருள் உடையது. 1. கரையோரக் கழிமுகங்களில் அல்லது காயல்களில் இரண்டு மூன்று பேர் கழுத்தளவு நீரில் வலை போடுவது; 2. முன்பு யாராலோ போடப்பட்ட வலையில் பட்ட மீன் கள் தம் வலையில் படுமாறு கள்ளத்தனமாக வலை போடு வது. பொதுவாக இது இரவுக் காலங்களில் மிகுதியாக நடை பெறும்.

கறுப்பில் அகப்பட்டுவிட்டது = வலை இளக்கும்போது பார் (கடல் பாறை)களில் வலை அகப்பட்டுக் கொள்ளுதலை இத் தொடர் குறிக்கிறது.

கற்றளை = மீன் வகை

கன்னத்தீவு ஆறுபாகம்பார் = Kanna Tivu Aru Pagam Par; Bank of Kanna Tivu in six fathoms (J. H.)

கன்னபுளி பூண்டுபார் = Kanna Puli Pundu Par; Bank having a tamarind bush as landmark near Kanna Tivu (J. H.)

கன்னாத் தோணி = சிறிய அளவிலான தோணி. கன்னா. ஆங்கிலச் சொல்

கன்னிமூலை = தென்மேற்கு மூலை, திசைப் பெயர்

காகண்டை = கடற்கரையில் உள்ள ஒருவகை நெய்தல் நில மரம்

காக்காசெந்நெல் = மீன் வகை. Ambassis nyops; Glass perchlet

காக்காச்சி = மீன் வகை. ஒருவகை மச்சம். 'காக்காய்மீன்' என்பதின் திரிபாய் இருக்கலாம். Ambassis myops; Glass Perchlet

காக்கியம் = தோணி அல்லது படகில் பலகைகளுக்கு இடையே கயிற்றுப் புரி அடித்தல்

காணா = வள்ளத்தின் உள்ளூறுப்பு

கானாக்காரன் = கட்டுமரத் தலைவன்

காணாங்கெளுத்தி = மீன் வகை. Rastrelliger Kanagurta

காத்து இறங்கியிருத்தல் = காற்று இறங்கியிருத்தல்;m கடல் தொழிலாளர் நடுக்கடலில் தொழிற்படும் போது காற்று தாழ இறங்கி வீசுதல். மழை வருவதற்கு முந்திய நிலை.

காப்பாத்தடி = தண்டு வலிப்பதற்குப் பயன்படுத்தப்படும் வளைந்த தடி

காயப்போடுதல் = கருவாட்டுத் தொட்டியில் ஊறிய. மீனை மறுநாள் அலசி சிமெண்ட் அல்லது கடப்பைக் கல் அல்லது மணல் தளத்தின் மீது அமைந்த தாட்டின் மேல் காயப் போடுதல் . தாட்டு - தேங்காய் நார்ப்பாய்

காயல் = கழி , கழிமுகம். காயல் என்பது கடலோரத்தில் ஆற்றுக்கால்களாய் அமைந்த நிலப்பகுதி. தமிழ்நாட்டில் திருநெல்வேலி மாவட்டம் தவிர வேறெங்கும் காயலைக் காணமுடியாது. இம்மாவட்டத்தில் ஸ்ரீ வைகுண்டம் வட்டத்தில் காயல் பட்டினம், மஞ்சள் நீர்க் காயல், பழைய காயல், புன்னைக் காயல் என்னும் பெயர்களில் ஊர்கள் உள்ளன. (சோமலெ') Lagoon

காரப்பொடி = மீன் வகை. காரல்பொடி. Leiognathns Gindus

காரல் = மீன் வகை. Silver bellies; Equula Spp.

காராப்பூச்சி = மீன் வகை

கார்பாய் = ஆங்கிலச் சொல். சுற்றிலும் பிரம்பால் பின்னப்பட்ட வலுவான கண்ணாடியால் ஆகிய பெருங்குப்பி. லாஞ்சிகளில் குடிநீர் கொண்டு செல்ல பயன்படுத்தப்படும் பாத்திரம். Carboy

கால் = வள்ளத்தின் உறுப்பு, மரக்கால்

காவலாளி = மீன் வகை. கோலாமீன். நாட்டார் பாடல்களிலும் காணப்படும் சொல்லாட்சி

காவளைப் பூண்டு = நெய்தல் நிலத் தாவரம். கோலா மீன் பிடிக்க இது பயன்படுத்தப் படுகிறது. பார்க்க- கோலா

காவி = மிதவை

காவுதல் = தோளில் தூக்கிச் செல்லுதல்;. 'கடல் தொழிலுக்குச் செல்ல ஏற்பாடுகள் செய்யும் பரதவர் கட்டு மரங்களின் உறுப்பு மரங்களையோ அல்லது வேறு கனமான பொருட்களையோ இருவர் தோள் மீது ஏற்றிக் காவட்டுப் போட்டு எடுத்துச் செல்லுதல்; தோணி காவுதல், வலை காவுதல் என்பர்.

காற்றும் கடலுமாக இருத்தல் = கடுமையான காற்றும் கொந்தளிப்பான கடலுமாக இருத்தல்

கான் = கடல் கலங்களில் காணலாகும் அடி அகடு கால்வாய். கடலூர்தியின் அறை Bilge

கில்நெட் = விசைப்படகுகளில் ஆழ்கடல் மீன்பிடிப் புக்காக இவ்வலை பயன்படுத்தப் படுகிறது. வலைக்கண் 4 அங்குலமுடையது. அகலம் 20 அடி நீளம் ஒரு மைல் கூட இருக்கும். வலையின் மேற்புறம் மிதவைகளும் கீழ்ப்புறம் கற்களும் இணைக்கப் பட்டிருக்கும். கில்நெட் – ஆங்கிலம்

கிழங்கான் = மீன் வகை

கிழிச்சி உப்புவைக்கிறது = மீனைப் பிளந்து உப்பு வைத்துக் கருவாடாக்கச் செய்யும் செயல்

கிளாச்சங்கு = சங்கு வகை. சங்கு வகைகளில் மிகவும் சிறியது. குழாய்ச்சங்கு எனும் வார்த்தையின் திரிபு.

கிளாத்தி = மீன் வகை . Balistes Capistratus (Marked file- fish), Balistes maculatus (Spotted-file fish) கிளாத்திபார் Kilatti par : Bank abounding in trigger fish (J.H.)

கிளிஞ்சல் = நீர்வாழ் உயிரினம், கடல், கழி முதலிய நீர் நிலைகளில் வாழ்வது. இருமேலோடுகளால் ஆனது. இதனுள் கிளிஞ்சல் பூச்சி பாதுகாப்பாக வாழ்கிறது. இந்த ஓடுகள் சுண்ணாம்புத் தயாரிப்புக்கு மூலப்பொருளாக உதவுகின்றன. Shell

கிளிஞ்சா = மீன் வகை

கிறாய் = மீனைக் காயப்போடும் உப்பள உவர் நிலம்

கீங்கா = கீழ்வலை, வலையின் கீழ்ப் பகுதி

கீங்காப் பந்தல் = கீழ்வலையை எடுத்து விடுதல்

கீரிமிஞ்சாளை = மீன் வகை

கீழக்கரை வள்ளியமலை விலங்குபார் = Outer bank of the white hill at Kilakarai; Kilakarai literally the East Coast. Kilai -east; Karai--Shore; Vellai-white; malai hill; Velangu-further or outer; Kilakarai a port on the East Coast (J.H.)

கீழ்த்தண்டு = தோணிப் பாயின் கீழ்ப்பகுதித் தண்டு

கீழ்ப்பா(ய்)க் கயிறு = தோணிப்பாயின் கீழ்ப்பகுதிக் கயிறு

கீழ்வாடை = வாடைக்கொண்டல் கீழ்க்காற்று

கிளிபார் = Kili Par; Kili--the name of a small fish (Parrot fish) Bank abounding in Parrot fish (J.H.)

குஞ்சுவல = வலைவகை. Spawn Collection net

குடகுசதோணி = ஒரே மரத்தில் தோணிபோல் குடையப் பட்ட மரக்கலம். Dug-out Canoes –

குடஞ்சபடகு = ஒரே மரத்தில் சிறுபடகு போன்ற அமைப்பில் குடைந்து ஆக்கிய படகு. Dug-out Canoes

குடாத்தலைபார் = The bank at the head of the bay (J.H.)

குடாமுத்துபார். = Kudamuthu Par; Kuda-bay; Pearl Bay bank (J.H)

குடிமகன் = பரதவரின் ஊர்ப்பணி செய்யும் தொழிலாளி; பரதவர் சமூகத்தின் ஒரு பிரிவினர்

குடில் = தொழில் முடிந்ததும் துடுப்பு, நூரிறைக்கும் கட்டை, கோல் ஆகியவற்றை வீட்டிற்குக் கொண்டு செல்வர். மழை, புயல் போன்ற காரணங்களால் பல நாட்கள் தொழிலுக்குப் போகாமலிருக்கும்போது வலை முதலானவற்றைக் கடற்கரையில் உள்ள குடிலில் போட்டு வைப்பர்.

குண்டன் சுறா = மீன் வகை . Carcharhinus limbatus

குதிப்பு = மீன் வகை . Lactarius Spp. (Big Jawed Jumper)

குதிரைமுள்ளிச் சங்கு = சங்குவகை. குதிரை போன்ற நீண்ட அமைப்புடையதும் ஓட்டைச் சுற்றிலும் முள்போன்ற குமிழ் கள் உடையதுமான சங்குவகை

குத்தி = தங்குவலை போட்டு மீன் பிடிக்க ஆழ்கடல் போகும் பரதவர் கரை திரும்ப சில நாட்களாகும். அதற்குள் பிடித்த மீன் கெட்டுப் போகாமலிருக்க குடலை அப்புறப்படுத்தி உப்பிட்டு வைப்பர். இப்படி பதம் செய்வதற்கு உதவும் கருவி

குத்தித் தாங்குதல் = கோலால் ஊன்றிக் குத்திப் படகைத் தள்ளுதல்

குத்து வல = வலைவகை. பொடி மீன், பொடி றால் பிடிக்க இவ்வலை பயன்படுத்தப் படுகிறது.

குப்பம் = மீனவர் வாழ்விடம். பரதவர் கிராமம் Fishing hamlet

குப்பி = புட்டி, போத்தல், சில இடங்களில் பிளாஸ்க் எனும் பொருளிலும் வழங்கப்படுகிறது. Bottle; Flask

குமிக்கிறது = குவித்தல், உப்பை அம்பாரமாகக் குவித்தல்

குமுளம்பார் = Probably this is the bank abounding in hemispherical stones 'Kumulam' a blister like swelling; is applied to the hemispherical masses of Astraid Corals so common on certain sandy oyster banks (J. H)

குரங்கன் சுறா = சுறாமீன் வகை. இதைப் பார்ப்பது அபசகுணம் (தூய நிமித்தம்) என்பர் பரதவர்

குரங்கு சுறா = மீன் வகை. சுறா இனம். பேச்சு வழக்கில் 'கொரங்குச் சுறா' என வழங்கப்படுவது. Carcharhinus Melonopterus

குரவை = மீன் வகை

குக்கட்டா = மீன் வகை

குருவிச் சங்கு = சங்கு வகை. மிகச் சிறிய அளவிலான சங்கு

குருவித் திருக்கை = மீன் வகை. Aetomylus maculatus; Nottled eagle Ray

குரூக்ஸ்ய ன் பார் = Bank of the Cross. Kross (Curusu), a corruption of the Portuguse Cruz, Cross (J.H.)

குரூக்ளியன் துண்டு பார் = Small Cruxian Bank (J.H.)

குழாய்ச் சங்கு = சங்கு வகை. மிகவும் சிறிய சங்கு. Chank undersized

குழி வலை = வலை வகை. இவ்வலை கரையில் இருந்தே மீன் பிடிப்பதற்குப் பயன்படுகிறது. ஓரடி அகலம், ஓரடி நீளத்திற்குச் சிறுசிறு பைகளாக இவ்வலை அமைந்திருக் கும். பைகள் குழி போன்ற அமைப்பினை உடையன. இவ் வலைப்பை திறந்திருப்பதற்குத் தோதாக ஒவ்வொரு பையின் வாய்ப் புறத்தின் குறுக்கிலும் ஒருகழி கட்டப்பட்டிருக்கும். இக்கழிக்குக் கடுப்புக்கழி' என்பது பெயர். இக்கழி ஓரடி நீளம் கொண்டதாகும். இவ்வாறு நூற்றுக்கு மேற்பட்ட பைகள் நீண்ட நீண்ட கயிற்றினால் கீழும் மேலும் இணைக்கப் பட்டிருக்கும். இருவர் இரு பக்கத்திலும் இருந்து கொண்டு வலையைப் பற்றி இழுத்துச் செல்வர். குறுக்கே ஓடி வருகின்ற மீன்கள் வலைக் குழிகளில் அகப் பட்டுக் கொள்ளும். பொதுவாக வெள்ளம், நீரோட்டத்திற்கு எதிர்த்திசையில் வலை இழுக்கப்படும்.

குளிகல் = சங்கு, முத்துக் குளிப்போர் வள்ளத்திலிருந்து கடலுக்குள் குதிக்கும்போது அடிமட்டத்தை விரைவாக அடைவதற்காகக் காலில் 10 அல்லது 12 கிலோ எடையுள்ள கல் அல்லது எடைக்கல் கட்டியிருப்பர். இதற்குக் குளிகல் என்று பெயர். குளியாள் கடல் அடி மட்டத்தை அடைந்ததும் சங்கேதமாய் கயிற்றை அசைக்க வள்ளத்திலிருக்கும் மறு ஷிப்ட் தொழிலாளர்கள் கயிற்றுடன் கட்டப்பட்ட குளிகல்லை விரைந்து மேல் இழுத்து வள்ளத்தில் வைப்பர். இவ்வாறு ஒவ்வொரு முறை கடலுள் இறங்கும்போதும் இக்கல் பயன்படுத்தப் படுகிறது.

குளிகாரன் = சங்கு, முத்து ஆகியன குளித்தெடுப்பவர்.

குளியன் = பார்க்க-குளிகாரன்

குளியோடிகள் = குளியர்

குள்ளக் கெண்ட = மீன் வகை. Barbus Stigma

குள்ளப்பார = மீன் வகை. Caranx leptolepis

குறுக்குவிசிப்பலகை = வள்ளத்தின் குறுக்கு வாட்டத்தில் அமைக்கப்பட்டிருக்கும் மரப்பலகை. கடல் தொழிலாளர் அமர்வதற்கும் பிற செயல்களுக்கும் பயன்படுவது. Thwart

குன்னு வாடை = வடமேற்குத் திசையிலிருந்து தென்கிழக்குத் திசை நோக்கி வீசும் மிகக் குளிர்ந்த காற்று

கூச்சம் = பெரிய பாய்மரத்தை நடுவதற்காக வள்ளத்தின் அச்சில் அல்லது அடித்தளத்தில் அமைக்கப்பட்ட குழி போன்ற அமைப்பு

கூடை = பனம்பாய், பனை நார் ஆகியவற்றால் செய்யப்பட்டது. மீன் அள்ளவும் சுமக்கவும் பயன்படும் பெட்டி

கூட்டுவெள்ளி = இரவுக்காலங்களில் கூட்டமாக வெளிச்சம் தரும் விண்மீன் தொகுதி. 'வெள்ளி' எனும் சொல் பரதவரிடையில் ' நட்சத்திரம்' எனும் பொருள் தருவதாகும்.

கூதல் காத்து = குளிர்காற்று

கூத்தாடியார்பார் = Kuthadiyar par; Dancer Bank; Kuthadiyar-a dancer (J.H.)

கூம்பு = பாய்மரம் (மதுரைக் காஞ்சி. 377)

கூலமடி = கூலிக்காக மீன்பிடி தொழில் செய்யும் பரதவர்

கூவிவலை = வலைவகை; சின்னக்கூனி, நெத்திலி போன்ற சிறு மீன்களைப் பிடிக்க இவ்வலை பயன்படுகின்றது. வலைக்கண் மிகச் சிறியது. நெல் அளவு கொண்டது; வலையின் கடைசிப் பகுதி சிறிய நீண்ட பைபோல அமைந்திருக்கும். இவ்வலையின் வாய்ப்பகுதி அகன்றும் இடைப்பகுதி சிறுத்தும் அடிப்பகுதி பெருத்து மிருக்கும்.

கூறப் பாய் = கூறைப்பாய். தோணிப்பாய்

கூறி = மீன் வகை. Acanthopagrus berda

கெசம் = ஆழம். இருண்மை நிறைந்த பேராழம். கசம் - கயம்; கயமூழ்கு மகளிர் - சான்றோர் சொல்லாட்சி

கெடமால் கட்டை = வலையின் மேல்புறம் கட்டப்பட்ட மிதப்புக் கட்டைகளுள் ஒன்று. தலைவலைக்கட்டை, தொங்கு வலைக்கட்டை, மோப்புக் கட்டை என்பன பிற.

கெண்டை = மீன் வகை. Carp

கெமிகல் உப்பு = கெமிக்கல் - ஆங்கிலச்சொல். சோடியம் குளோரைடு மட்டும் தனியாக உண்டாகும்படி ஆக்கப்படும் உப்பு. தொழிற்சாலைகளுக்குப் பயன்படுவது. Chemical Salt

கெவ்வுதல் = வலை களை இழுத்தல். பொதுவாக 'வலை' எனக் கூறப்படுவது பல துண்டுவலைகளின் இணைப்பாகும். ஒரு துண்டுடன் இன்னொரு துண்டை இணைப் பது 'கெவ்வுதல்' எனப்படும். 'கௌவுதல்' எனும் சொல்லின் திரிபாகலாம்.

கெழுது = மீன் வகை

கெழுத்தை = மீன் வகை. விஷமுள் உடைய மீன். கெழுத்தி மீன் போலவே இதுவும் விஷமுள்ளைப் பயன்படுத்தித் தற்காத்துக் கொள்ளும். கடலின் அடியில் வளை தோண்டி வாழும் இயல்பினது என்பர் பரதவர்.

கௌல் = வள்ளம் கடலில் செல்லும்போது காற்று வீசும் திசைக்கு ஏற்ற கோணத்தில் நிறுத்தப்பட்டிருக்கும் பாய் மரத்தின் எதிர்திசை, கீழ்திசை. கீழ் அல்-கீழல் - கிழல் - கெழல்

கெளுத்தி = மீன் வகை. Arius Sena; Cat fish

கையாப் பலகை = வள்ளத்தின் குறுக்குவாட்டில் கடல் தொழிலாளர் அமர்வதற்கும் பிற செயல்கள் செய்வதற்கும் ஏற்ற பலகை. குறுக்கு விசிப் பலகை போன்றது. குறுக்குப் பலகைகள் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு பெயர் உண்டு.

கைவலை = வலைவகை. சிறுவலை

கொக்கராஞ்சி = கனவா மீனின் முதுகு ஓடு

கொக்கிக் கயிறு = மீன்பிடி சுருவி. தூண்டில் முள் கோக்கப்பட்ட நூளக் கயிறு,

கொச்சவாடை = மீன் அழுகியதால் உண்டாகும் நாற்றம்

கொடி மப்பு = மப்பு-மேகம், கொடி (தாவரவகை) போன்று நீளமாகக் காட்சிதரும் மேகம். மேகம் கொடி கொடியாகக் காட்சி தந்தால், கடுமையான காற்று உடனே தோன்றும் என்பர் பரதவர். கடுங்காற்றிற்கு அறிகுறி கொடி மப்பு.

கொடுக்குமால் = கடல் கலத்தின் முன் பகுதியில் பாதுகாப்புக்காக அமைக்கப்பட்ட முக்கோணம் போன்ற காப்புப் பகுதி. Jib

கொடுவலை = வலைவகை. பிடித்த மீனைப் போட்டு வைக்க உதவும் கயிற்றுவலையால் ஆன பை போன்ற அமைப்புடையது

கொடுவா = மீன் வகை. Ambassis dayi; Glassy perchlet

கொட்டறா = மீன் வகை. Panaeus monodon

கொட்டறால் = மீன் வகை. Panaeus monodon

கொட்டுவலை = வலைவகை. வலைக்கண் ஒரு அங்குலம் உடையதாயிருக்கும். 150 அல்லது 200 அடி நீளம் கொண்டது. இவ்வலையை இறக்கிய பின்னர் வலைக்கு எதிர்திசையில் இருந்து கொண்டு பரதவர் தண்ணீரைக் தடிகொண்டு அடிப்பர். இப்படி அடிப்பதால் ஓடுகிற மீன்கள் இவ்வலைப் பக்கம் ஓடி அகப்பட்டுக் கொள்ளும் என்பர்.

கொண்டல் = கிழக்கு திசையிலிருந்து வீசும் காற்று. கீழ்க் காற்று

கொண்டவலை = வலைவகை. இழுவலையின் மறுபெயர் Dragnet

கொண்டிப்பாறை = மீன் வகை. Carangoides armatus

கொண்டுவலை = வலைவகை. பரதவர் தமது சிறு பிள்ளைகளுக்குப் பயிற்சிக்காக முதலில் இவ்வலையைக் கொடுத்தே பழக்குவர். இச்சிறுவர்கள் முதலில் இவ்வலைகளைப் பயன்படுத்தி இறால் மீன் பிடிப்பர். வலைக்கண் மிகச் சிறியது. வலையின் நீளம் 2 அல்லது 3 அடி

முதல் 10 அடிவரை இருக்கும். வலையை விரிக்க வசதிப்படும்படியாக 'கடுப்புக் கழிகள்' எனும் குறுக்குக் கழிகளைக் கட்டியிருப்பர்.

கொத்தறல் = ஒருவகை அறல்மீன். கூந்தல் போன்று வரிகள் உடைய மீன்

கொத்திப் புரட்டுதல் = களியடித்தபின் மண்வெட்டியால் அளத்துடன் கலக்கும்படிக் களியைக் கொத்திப் புரட்டுதல், உழவு போடுவதற்கு முந்திய செயல்

கொத்துப்பலகை = பாத்தியில் படிந்திருக்கும் உப்பை வாருவதற்கு வசதியாகக் கொத்தும் பலகை

கொப்புளிச்சுறா = மீன் வகை. Carcharhinus melonopterus

கொமரப்பாரை = மீன் வகை. Caranx nigrecens; Horse mackerel

கொம்பன் சுறா = சுறாமீன் வகை. தலையில் சம்மட்டி போன்ற அகன்ற உறுப்பைப் பெற்றிருப்பது

கொம்பிறுக்கை = கட்டுமரத்தின் ஓர் உறுப்பு

கொம்பு = கட்டுமரத்தின் ஓரப்பகுதியில் உள்ள மரம்

கொலரிக்காத்து = குளறிக்காற்று. சீரில்லாமல் விட்டு விட்டு அடிக்கும் காற்று

கொள்ளிமீன் = மீன் வகை

கோசு = 1. பாயின் கீழ்ப்புறம். கலத்தின் ஒரு பக்கம். 2. முன்பக்கம் கட்டும் கயிறு

கோசுவாரி = பாய்மரத்தின் கீழ்புறத்தில் பாயைக் கட்ட பயன்படும் குறுக்குவாட்டக்களி

கோடு போடுதல் = உப்புவாரும் சமயத்தில் கடினமாக இறுகிய உப்புத்தளத்தை நெகிழ்விப்பதற்காகக் கோட்டுப் பலகையால் கொத்துவர். இக்கடினமான வேலைக்குப் பிரதியாக ஒரு எளிமையான வேலையைச் செய்யலாம். கோட்டுப்பலகையால் பாத்தியின் குறுக்கிலும் நெடுக்கிலும்

தினசரி கோடு போட்டு வைத்திருந்தால் உப்பை இலேசாக அள்ளிக் கொள்ளலாம்.

கோடை = மேற்குத் திசையிலிருந்து வீசும் காற்று

கோடைக் காற்று = தென்மேற்குத் திசையிலிருந்து நேர் கிழக்குத் திசை நோக்கி வீசும் காற்று

கோட்டுப் பலகை = மரப்பல் அமைந்த வாருபலகை

கோட்டை = சிப்பியின் முகத்தலளவு. 112 படி கொண்டது

கோட்மால் = வலைகளை வைத்துக்கட்டும் பெரிய வலைப்பை

கோணாவலை = வலை வகை. இறால் மீன் பிடிக்கப் பயன்படும் வலை, சுண்டுவிரல் பருமனை விட நுண்ணிய கண் கொண்டது. பெரிய பை போன்ற அமைப்புடையது. இவ்வலையின் வாய்ப்பகுதி 20 அடி அகலக் கயிற்றால் பிணிக்கப்பட்டிருக்கும். இறால்மீன் கூட்டங்கூட்டமாக வரும். இரவு நேரங்களில் பரதவர் இரு தோணிகளில் எதிர்த் திசையில் வலை போட்டு இழுப்பர். பொதுவாக இவ்வலை இரவு நேரங்களில் பயன்படுத்தப்படுகிறது.

கோரை = கடல் தாவரம். Nutgrass

கோலா = மீன் வகை, Caucila

கோலாசுறா, = மீன் வகை. Carcharhinus macloti; Dog Shark

கோலாச்சி = மீன் வகை

கோலாமரம் = கோலா மீன் பிடிக்கச் செல்லும் மரம்

கோலாவலை = வலைவகை. ஆழ்கடல் சென்று காவாளைப் பூண்டு, தாழை ஆகியவற்றைப் பயன்படுத்திக் கோலாமீன் பிடிப்பது இப்போது குறைந்து வருகிறது. தற்போது 'கோலாவலை' என்ற வலையையே கோலா பிடிக்கப் பயன்படுத்துகின்றனர். வலைக்கண் அரை அங்குல அள வினது.

வலையின் அகலம் 10 அடி நீளம் 500 அடி. வலையின் மேல்புறம் மிதப்புக் கட்டைகளும் கீழ்ப்புறம் அளவான கற்களும் கட்டப்பட்டிருக்கும்.

கோல் = கட்டுமரத்தைத் தள்ளப் பயன்படும் கோல்

கோவஞ்சி = சங்கு வகை

கோவலை = வலைவகை. கடல் நீரோட்டம், ஆற்று நீரோட் டம், கழிமுகம் ஆகியவிடங்களில் இவ்வலை பயன்படுத்தப் படுகிறது. வலைக்கண்ணி சிறிய அளவினதாக அமைந் திருக்கும். வலை அகலம் 10 அடி, நீளம் 15 அடி. எல்லா வலைகளிலும் உள்ளது போலவே மேல்காக் கயிறு. கீழ்க்காக்கயிறு இதற்கும் உண்டு. 10 அல்லது 20 துண்டு வலைகளை ஒன்றாக இணைத்துக் கோவலை உண்டாக்கப் படுகிறது.

கோவில் புடித்த பத்துபார் = Kovil Puditha Pattu Par; Kovil- - Church; Bank in 10 fathoms having a Church as the leading mark on shore (J.H.)

கோழிமீன் = மீன் வகை. Acanthurus Spp; Surgeon fish

கோனிமே மற = மேற்குத் திசையிலிருந்து வடகிழக்குத் திசைநோக்கி ஓடும் நீரோட்டம்

சங்கரா = மீன் வகை, Gourami; Osphronemus

சங்கு = இவை நத்தைகளைப்போல் இரண்டு மூடி களைக் கொள்ளாமல் ஒரே ஓடு உள்ளனவாக இருப்பன. இவற்றில் சிறியது கடுகின் அளவும் பெரியது ஓர் அடிக்கு மேலும் இருக்கின்றன. சங்குகள் முட்டையிடும் போது முட்டைகளை அடுக்காக்கி அவற்றிற்குக் காப்பாக ஒரு கூட்டைக் கட்டுகின்றன. அதில் அச்சங்குப் பூச்சிகள் வளர்ந்து தாமே கூட்டைவிட்டு வெளிவருகின்றன. இவ்வினத்தில் பலவகை உண்டு. பலகறை, இராவணன் விழி, சொறி சங்கு, பல்பப் பூச்சி எனப் பலவகை உண்டு. இது முதுகெலும்பு இல்லாத பிராணி வகையைச் சேர்ந்தது. வலம்புரிச் சங்கே விசேஷம். இதன் ஓட்டை மாமிசத்தைப் போக்கி பானபாத்திரமாகவும் ஊது கருவியாகவும் உபயோகிப்பர். இப்பி 1000 சூழ்ந்தது இடம்புரிச் சங்கு. இடம்புரி 1000 சூழ்ந்தது வலம்புரி. வலம்புரி 1000 சூழ்ந்தது பாஞ்சசன்யம் . (1000 எனும் எண்ணிக்கை நம்பிக்கையாகலாம் -

ஆய்வாளர்) எழுத் தாணிச் சங்கு, ஐவிரலிச் சங்கு, குதிரைமுள்ளிச் சங்கு, கோவஞ்சி, சப்பாத்தி, பால் சங்கு, பிள்ளையார் சங்கு, புள்ளி கௌடா, புறாமுட்டை, முள்ளுச் சங்கு, யானை முள்ளிச் சங்கு, வலம் புரி, வாழைப்பூச் சங்கு, வெள்ளைப் பூண்டுச் சங்கு என்பன இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களில் கிடைப்பன . Chank

சங்கு அறுக்கிறது = சங்கு கோயில்களிலும் சமயச் சடங்குகளிலும் ஊதுகருவியாகவும் தனியார் வீடுகளில் விசேசமான பூசைக்குரிய பொருளாகவும் பயன்படுவது மட்டுமல்லாது மகளிர் அணிவதற்குரிய வளையல், காதணி போன்ற அணிகலன்களாகவும் அறுத்து வடிவமைக்கப் படு கின்றன. சங்கறுத்து தொழிற் செய்வோர் இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள மண்டபத்திலும் மேற்கு வங்காளத்திலும் வாழ்கின்றனர். சங்குக் கண் (நாகணம்) ஊதுபத்தி செய்யவும் சங்கின் கழிவுகள் பெயிண்ட், எனாமல், ஸ்நோ, பாலிஷ் பவுடர், உயர்ரக சுண்ணாம்பு ஆகியன செய்யவும் பயன்படுகின் றன.

சங்கு அரித்தல் = சங்கு குளிக்கும் பரதவர்கள் கடலடிக்குச் சென்று சங்கெடுத்தல்

சங்கு கழித்தல் = முதலாளர் சங்கு குளிக்கும் தொழிலாளரிடமிருந்து தரங்குறைந்த சங்குகளை ஏற்க மறுத்துக் கழித்தல்; சுறாக்கடி, சொரி, நண்டுகடி எனத் தரங்குறைந்த சங்குகளைக் குறிப்பர்

சங்குக் கிடங்கு = சங்குச் சேமிப்புக் கிடங்கு. Chank godown

சங்கு குளி சூசன் = சங்கு குளிக்கத் தோதான காலம்; ஆண்டுதோறும் ஒரு குறிப்பிட்ட காலத்தில் தான் சங்கு குளிப்பர். தூத்துக்குடியில் ஒரு காலம் சூசன். இது முடிந்ததும் திருச்செந்தூர் பகுதியில் சூசன்' தொடங்கும். மண்டபம், இராமேஸ்வரம் பகுதிகளில் ஒரு குறித்தகாலம் உண்டு. சூசன் - ஆங்கிலச் சொல்

சங்கு குளிப்பு = இராமநாதபுரம் மாவட்டத்தில் 3000 பரதவர்களும் திருநெல்வேலி மாவட்டத்தில் 2000 பரதவர்களும் இத்தொழிலில் ஈடுபட்டுள்ளனர். ஐப்பசி மாதம் தொடங்கி சித்திரை மாதம் முடிய 7 மாதங்கள் இத்தொழிலுக்குரிய காலமாகும். சங்கு குளிக்கும் பருவ காலமே தமிழ்நாட்டின் வடகிழக்குப் பருவமழை காலமாகும். வள்ளம் ஒன்றிற்கு பத்துபேர் வீதம் சங்கு குளிக்கச் செல்கின்றனர். முதல் 5 பேர்

கடலில் இறங்கிச் சங்கு குளிக்கும் போது மறு 5 பேர் வள்ளத்தி லிருந்து கொண்டு இத்தொழிலுக்குரிய உதவிகரமான காரியம் பார்த்துக் கொண்டும், உள்ளிறங்கிய குளியர்கள் மேல் வருவதைக் கண்காணித்துக் கொண்டும் இருப்பர் Chank fishing

சங்கு குளிப்பவர் = பாண்டியர் காலத்தில் தண்டனை அடைந்த குற்றவாளிகளே சங்கு, முத்து குளிப்பவர்களாக இருந் தனர். தற்போது இத்தொழிலைச் செய்பவர்கள் பரதவர்கள் . Chank diver

சங்குறைய பத்துபார் = Sankuraiya Pattu Par; San- Span; Kuraiya-less; Short of; Bank where depth is a foot less than 10 fathoms (J.H.)

சங்குக் கூலி = சங்கு குளியர்கள் கரைக்குக் கொணரும் சங்குகளை மீன்வளத்துறையினர் (சங்குப்பி ரிவினர்) பெற்றுக்கொண்டு அவற்றின் தரம், சுற்றளவு, எண்ணிக்கை ஆகியனவற்றின் அடிப்படையில் கூலி தருகின்றனர். 2 ¼ அங்குலச் சுற்றளவிற்கு உட்பட்டனவும் பிளவு, ஓட்டை ஆகிய குறை உடையனவும் சொத்தைச் சங்காகத் தள்ளப்படும். 2 ¼ அங்குலத்திற்கு மேல் 2 ½ அல்லது 2 ¾ அங்குலத்திற்குள் சுற்றளவுள்ள சங்கு ஒன்றுக்கு ரூ. 2-75-வும் 2 ¾ அங்குலச் சுற்றளவுக்கு மேற்பட்ட சங்கு ஒன்றுக்கு ரூ. 3-50 உம் கூலியாக வழங்கப்படும்.

சங்குக்கொட்டான் = சங்கு எடுத்துச் செல்லும் பெட்டி

சங்குப் பூச்சி = சங்கு ஓட்டினுள் இருக்கும் உயிரினம்

சங்குச்சதை = சங்கு குளியர்கள் மீன்வளத் துறையினரிடம் சங்குகளை ஒப்படைக்கும் முன்னர் அவற்றின் உட்புறத்திலுள்ள தசைப் பகுதியை வெளிப்படுத்தி வைத்துக் கொள்வர். இது சிறுசிறு துண்டுகளாக்கப்பட்டு உலர்த்தப்படும். உலர்த்தப்பட்ட இத்துண்டுகள் எண்ணெயில் பொரிக்கப்பட்டு சுவையான உணவு வகையாக உட்கொள்ளப்படுகிறது.

சங்குச் சலாபம் = சங்குக்குழி

சங்கு நண்டு = சங்கு வகை

சங்கு நிலம் = சங்குப்படுகை. சல்லி, பிறால் எனும் மறு பெயர்களும் உண்டு

சங்கு படுகை = கடலடியில் சங்குகள் நிறைந்திருக்கும் இடம். Chank bed

சங்கு புரி = சங்கில் அமைந்துள்ள வரிகள்

சங்கு புஷ்பம் = ஞாழல் எனும் கடற்கரைத் தாவரம்

சங்கு மணி = சங்கால் செய்யப்பட்ட மணி, ஆபரணம்

சங்குமால் = சங்குக் கிடங்கு. Chank godown

சங்கு முகம் = ஆறு கடலுடன் கலக்குமிடம். சங்கமத் துறை

சங்கு முத்து = சங்கின் முத்து

சங்கு வெள்ளை = சங்கு சுண்ணக் காறை

சங்குளி = சங்கு குளித்தல் எனும் சொற் களின் மரூஉ. இராமேஸ்வரம் பகுதியில் ஜனவரி தொடக்கம் மார்ச்சு முடியவும், மண்டபம் கேம்ப், தென்வெடலைப் பகுதியில் ஆகஸ்ட் தொடக்கம் டிசம்பர் முடியவும் பெரிய பட்டினம், கீழக்கரை பகுதியில் செப்டம்பர் தொடக்கம் ஜனவரி முடியவும் சங்கு குளிக்கப்படுகிறது. பொதுவாகத் தமிழ் மாதங்கள் ஐப்பசி தொடக்கம் சித்திரை முடிய கிழக்குக் கடற்கரைப் பகுதி சங்கு குளிப்பதற்குரிய அருமை யான பருவகாலமாகும். ஒரு நாளைக்கு ஒரு தொழிலாளி ஏறத்தாழ 30 முறைகள் சங்கு குளிப்பார்.

சடையன் = மீன் வகை

சண்டு அரிதல் = அரும்பு அரிதலுக்கு உள்ள மறு பெயர்

சந்தமரம் புடித்த பார் = சந்தை மரம் பிடித்த பார். Sandamaram Piditha Par; Sanda-a corrupt form of Santai or Chantai-Market; Maram-tree; piditha-touching i.e. indicating as does a land mark. Bank where land mark is a tree near a market (J. H.)

சந்திர வட்டம் = மாலை நேரத்தில் வானில் சந்திரனைச் சுற்றி ஒரு வட்டம் காணப்படும். இவ்வட்டம் 'சந்திர வட்டம்' எனப்படும். சந்திரவட்டம் காணப்படுதல் அடைமழைக்கு அடையாளம் என்பர் பரதவர்

சப்பாத்தி = சங்கு வகை

சப்பாத்திச் சங்கு = சங்கு வகை, அகன்ற பெரிய சங்கு

சப்பைத் திருக்கை = மீன் வகை. Aetomylus nichofii; Eagle Ray

சமோட்டி = 'சம்பான் ஓட்டி' எனும் சொற்களின் சேர்க்கை அல்லது திரிபு. 'தலைவன்' எனும் பொருள் தருவது

சம்பா வியாபாரம் = கருவாடு வியாபாரம்

சம்பானோட்டி = படகோட்டுபவன்

சம்பான் = படகு

சம்பான் காரர் = படகுக்காரர். படகின் உரிமை யாளர்

சப்பை = மீன் வியாபாரி

சம்மாடி = வள்ளத்தின் தலைவர். சம்மாட்டி, சம்மாடி இரண்டும் ஒரு பொருள் குறிப்பன

சம்மாட்டியார் = வள்ளத் தலைவர். Sammatti

சம்மாட்டி = கட்டுமரச் சொந்தக்காரன்; வள்ள உரிமை யாளன்

சரக்கு இறக்கறது = கப்பலிலிருந்து தோணிக்கும் தோணியிலிருந்து துறைமுகத்துக்கும் சரக்கை இறக்குதல்

சரக்கு ஏத்தறது = துறைமுகத்திலிருந்து தோணிக்கும் தோணியிலிருந்து கப்பலுக்கும் சரக்கை ஏற்றுதல்

சரக்கு ஏற்றிப் பறித்தல் = ஆழமில்லாத செயற்கைத் துறை முகங்களுக்குச் சரக்கேற்றிய கப்பல் வரவியலாது. ஆகவே சில கி. மீ. தள்ளி ஆழ்கடல் பகுதியிலேயே நிற்கும். அக்கப்பலிலிருந்து சரக்கை இறக்கித் துறைமுகத்திற்கு கொண்டு வரவேண்டும். அதுபோலவே துறைமுகத்திலிருக்கும் சரக்கைக் கப்பலுக்குக் கொண்டு சென்று ஏற்ற வேண்டும். இச்செயல்கள் இப்படிப்பட்ட நிலைமையில் பெருந் தோணிகள்

மூலமே நடக்கும். இதற்குச் 'சரக்கு ஏற்றிப் பறித்தல் என்று பெயர். (உதாரணம்: செயற்கைத் துறைமுகமான தூத்துக்குடி துறைமுகம்.)

சரக்குப் பறித்தல் = சரக்கு இறக்குதல். மேற்குறிப்பு காண்க

சலங்கைக்காரர் = இந்து சமயத்தைச் சேர்ந்த பரதவரில் ஒரு பிரிவினர்

சரடுசொம்பி = நூல் கப்பியல், சரடு - நூல். சாம்பி – கப்பியல்

சலாபத்துறை = முத்துத்துறை. Pearl Camp

சலாபம் = முத்துக் குளித்தல்

சலுத்து = பருமலையையும் பாய் மரத்தையும் சேர்த்துக் கட்டும் கயிறு. சலவர்- பரதவர், நெய்தல் நில மக்கள். பரதவர் பயன்படுத்தும் கயிறு எனும் பொருளில் இச்சொல் உருவாகியிருக்கலாம்

சல்லி நிலம் = கடலடிப் படுகையில் பொடிகற்கள் நிறைந்த பகுதி. சங்கு உற்பத்திக்கு ஏற்ற இடம். சிறு மணல் பகுதிகளைவிட சல்லி நிலமே சங்குகளின் அமோக உற்பத்திக்கு ஏற்ற இடமாகும்.

சவருக்குப் போதல் = நம் நாட்டில் உற்பத்தியாகும் பொருள்களை வெளிநாடுகளுக்கும் (சிறப்பாக கிழக்காசிய நாடுகளுக்கும்) தமிழ்நாட்டில் கிடைக்கும் பொருள்களை கேரளம், கர்நாடகம், மகாராட்டிரம், குஜராத் போன்ற மாநிலங்களுக்கும் கடல் வழியாக ஏற்றிச் சென்று கொடுத்து விட்டு ஆங்காங்கு கிடைப்பனவற்றை ஏற்றிக் கொண்டு வருதல். வீட்டுக் கூரைக்குரிய ஓடுகள், மங்களூர் ஓடுகள், உப்பு, சட்டிப்பானை, கருவாடு, வெல்லம், வெங்காயம் ஆகியன இத்தொழிலில் பரிவர்த்தனை செய்யப்படும் பொருள்களாகும்.

சவுட்டுமிதி = அளத் தயாரிப்பிற்காக உழவுபோட்ட பின்னர் இருக்கும் சிறு சிறு களிமண் கட்டிகளை காலால் மிதித்தல்

சவ்வாவாரி = வள்ளத்தில் பாய் உயர்த்திய பின்னர் அப்பாய் ஆடாமல் நேராகவும் விறைப்பாகவும் இருக்கும் பொருட்டுக் கயிற்றால் பிணைத்து வைப்பர். இப்படிப் பிணைப்பதற்கு வசதியாக அமைக்கப்பட்டிருக்கும் பலகை

அல்லது கழி சன்னக் கெண்டைவல = வலைவகை. சன்னமான சிறு மீன்கள் பிடிப்பதற்கு பயன்படுத்தப்படும் வலை. பாச்சு வலை அமைப்பில் இருப்பது

சாடிக்காரன் = பர்லா மீனின் மறுபெயர், குழூஉக்குறி

சாடிப்பானை = கோலாமீன் பிடிக்கச் செல்வோர் திரும்பி கரைக்கு வரச் சில நாட்களாகும். அதுவரைக் கெட்டுப் போகாதிருக்கும்படிப் பக்குவமாகச் சமைக்கப்படும் உணவுக்கு 'சாடிப்பானை' என்பது பெயர்.

சாணிக்கெண்டை = மீன் வகை. Barbas Sarana

சாதா(ரண) படகு = Plank Built Boat

சாந்தமகோயில் புடித்தபார் = சாந்தமகோயில் பிடித்தபார். Sandama coil-St. Mary's Church; Sandama, holy or blessed mother; i. e. St. (Sancta Maria) Kovil-Church, Bank touching St. Mary's Church; i. e. where st. Mary's Church is principle bearing (J. H.)

சாளமீன் = மீன் வகை

சாளவல = வலைவகை

சிக்குவல = வலைவகை. Trap net

சிங்கிறால் = மீன் வகை. பெரிய மீன். Cray fish. Lobster

சித்தலை = சிற்றலை. Wavelet

சிப்பி = கிளிஞ்சல், செல் என்ற சொற்களின் மாற்றுச் சொல். சுண்ணாம்பு தயாரிப்புக்கு உதவும் மூலப்பொருள்

சிப்பி மீன் = மீன் வகை . Cuttle fish

சிப்பி மெட்டி = கிளிஞ்சல் வகை

சிம்மச்சங்கு = சங்கு வகை

சிரட்டைச் சங்கு = சங்கு வகை. சைவ ஆண்டிகள், பிச்சைக் காரர்கள் பிச்சை ஏற்கப் பயன்படுத்துகிற பெரிய அளவிலான சங்கு. திருவோட்டுச்சங்கு எனும் பெயரும் உண்டு.

சிலாபம் = 'சிலம், இலாபம்' எனும் சொற்களின் சேர்க்கை . சிலம் - கடல் செல்வம்; உப்பு, மீன், முத்து ஆகியன. பின்னர் இச்சொல் முத்துக் குளிப்பை மட்டும் குறிப்பதாக வழக்கில் அமைந்தது.

சிவப்பு நண்டு = கடற்கரையோரமாகக் காணப்படும் ஒரு நண்டு வகை. நிறத்தால் பெற்ற பெயர்.

சிறுமரம் = சிறுபாய் மரம். Jigger

சின்ன இறால் = மீன் வகை. பொடிமீன்

சின்னக் குள்ளக் கெண்ட = மீன் வகை. Barbus Vittatus

சின்னக் கூன = 'சென்னாக்குன்னி' எனப் பேச்சுவழக்கில் அழைக்கப்படும் மீன் வகை

சின்ன பாய் = கலத்தின் சிறிய பாய்

சின்ன மரம் = பெரிய கட்டுமரத்திற்குத் துணையாகப் போகும் சிறிய கட்டுமரம்

சீமான்பிள்ளை காத்தபார் = Siman Pillai-a man's name; katha--guarded by; possibly this means the bank guarded by Siman Pillai (J.H.)

சீரம் பாம்பு = மீன் வகை. Anguilla bengalensis

சீர் பாட்டன் = காண்க : அறுன பாட்டன்

சீலா = மீன் வகை. Cybium guttatum

சீலா பனந்தளை = மீன் வகை. Cybium Spp.

சூலை = தோணி, வள்ளம் ஆகியவற்றில் பயனாகும் பாய் தைக்க உதவும் துணி

சூனி = நங்கூரம்

சூனிக்கயிறு = நங்கூரக் கயிறு

சூனிப்பலகை = வள்ளத்தின் உறுப்பு

சுக்கானி = சுக்கானைப் பிடித்து வள்ளத்தை இயக்குபவர்

சுக்கான் = கடல்கலம் நீரில் இயங்குவதற்கும் திரும்புவதற்கும் உதவும் கருவி. Rudder

சுக்கான் பிடி = சுக்கானின் கைப்பிடி, Helm; Tiller

சுணைக்கிறது = பாத்திகளில் விட்ட உப்புநீரின் அடர்த்தி 23 டிகிரி ஆனதும் உப்பு படிதல்

சுண்ணாம்பு = சிப்பி, விரல் சல்லி , நுரைகல் ஆகியனவற்றைச் சுடுவதால் கிடைக்கும் ரசாயனப் பொருள்

சுதும்பு = மீன் வகை. Lactarius Spp.

சுத்துப் பலகை பிடிக்கிறது = உப்பளத் தயாரிப்பில் வாரு பலகையால் பாத்தியைச் சமப்படுத்துதல்

சுத்துவல = வலைவகை: மீன்களைச் சுற்றி வளைத்துப் பிடிக்கும் வலை. Encircling net

சுத்தைச் சங்கு . = சொத்தைச் சங்கு' என்பதன் பேச்சு வடிவம். Wormed Chank

சுப்பி = சிப்பி என்பதன் பேச்சு வடிவம்

சுமப்படகு = சுமைப் படகு. சரக்கேற்றப்பட்ட படகு. Barge

சும்மாடு = தலையில் ஏற்றப்படும் பளுவால் மண்டை நோகாமல் மெத்தென்று இருக்க வைக்கப்படும் (துணிச்) சுருணை. உப்புப் பெட்டி சுமக்க உதவும் பொருள்

சுருக்கு ஒன்பது பார் = Surukku Onbadu Par; Onbadu-a Corrupt form of onpatu; Surukku-quickly; Bank falling quickly within 9 fathoms; i.8. a rapidly shelving bank; This is the case it is a narrow bank 5} fathoms deep on the west side, 8 fathoms deep on the east (J.H.)

சுரைப்பிள்ளை = கடற்கரைப் பகுதியில் காணலாகும் ஒரு நெய்தல் நிலத்தாவரம்

சுழல் = நீர்ச்சுழல். Swirl

சுழல் காத்து = சுற்றிச் சுற்றி அடிக்கும் காற்று. Whirl wind

சுழல் பலகை = வள்ளத்தின் உள்ளுறுப்பு. Turn table

சுழல் வல = வலைவகை. சுழன்று வளைத்து மீன்களைப் பிடிக்க வசதியான வலை

சுழி = 1. கடல் நீரோட்டத்தில் காணலாகும் சுழல். 2. சுண்ணாம்புக்கல். இராமேஸ்வரம் முதல் தூத்துக்குடி வரை விரவிக்கிடக்கும் மூலப் பொருள். பவள சுண்ணாம்புக் கல், நுரைகல் எனும் பெயர்களும் உண்டு.

சுளிக்கி = கூர்மையான முனையுடைய எறியுளி போன்ற கருவி

சுறா = மீன் வகை

சுறாக்கடி = கழிக்கப்பட்ட சங்கு. தரமற்ற சங்கு, சுறாவின் கடியால் பாதிக்கப்பட்ட சங்கு ஆகலாம்.

சூடு = மீன் வகை. Kowala Coval; Kowala thora. cata

சூடை = மீன் வகை. Clupea lile (White Sardine); clupea kanagurta (Indian sprat)

சூர = மீன் வகை

சூரி மீன் = மீன் வகை. Euthynnus abbeteratus

சூரிய வட்டம் = முற்பகலில் காலை 11 மணியளவில் சூரியனைச் சுற்றிக் காணப்படும் ஒரு வளையம்; கடல் தொழில் மேற்கொண்டு ஆழ்கடல் சென்ற பரதவர் இச்சூரிய வட்டத்தைக் கண்ட மாத்திரத்தில் விரைந்து கரைக்குத் திரும்புவர். ஏனெனில் இச்சூரிய வட்டமானது வரப்போகும் கடுமையான காற்றுக்கு ஓர் அறிகுறியாகும்.

சூறாவளி = சூறைவளி, சூறை- சூறையாடும் பெருங் காற்று. வளி - அளவு கடந்த காற்று. 65 மைல் வேகத்திற்கு மேற்பட்டது. Cyclone; Hurricane

சூறை வேடன் = சுறாவகை. இது அரிதாகக் காணப்படும். மீன். கடல் மட்டத்திற்கு மேல் எழும்பி வாய் திறக்கு மானால் பெரும்புயல் வரும் எனப் பரதவர் அறிந்து கொள்வர்

சூறை = மீன் வகை. Euthynnus abbeteratus

செங்கெறா(ல்) = மீன் வகை

செட்டி = இந்து சமயப் பரதவருள் ஒரு பிரிவினர்

செதிள் = தோல், பொருக்கு

செம்படக் கரை = செம்படவர் வாழும் கடற்கரை

செம்படக்கா = மீன் வகை

செம்படவன் = உள்நாட்டில் மீன் பிடிப்பவர். மீன் பிடித்தல், உலர்த்தல் தொழில் செய்வோர். பட்டினக்கரையில் வாழும் மீனவர் பரதவர். உள்நாட்டு நன்னீரில் மீன் பிடிப்பவர் செம்படவர் (பரதவர், செம்படவர் எனும் சொற்கள் மக்களிடையில் இப்படித் துல்லியமாக வழங்கப்படுவதில்லை -ஆய்வாளர்)

செம்பரவன் = பரதவருள் ஒரு பிரிவினர்

செம்மண்பட்டிபார் = Semman Patti Par; Semman-red sand or earth; patti-hill, Red hill Bank; red hill is the bearing (J. H.)

செம்மானம் = வானம் சிவந்திருத்தல், காலையில் வானம் சிவந்து காணப்படின் பெருங்காற்று வீசும் எனவும் மாலையில் சிவந்து காணப்படின் பெருமழை பொழியும் எனவும் பரதவர் கூறுவர். 'காலைச் செம்மானம் காத்துக்கு, மாலைச்செம்மானம் மழைக்கு' என்பது பரதவர் பழமொழி.

செயற்கை முத்து = இயற்கையாக முத்து உண்டாகும் அறிவியல் முறையில் தயாரிக்கப்படும் செயற்கை முத்து. Artificial Pearl

செயினத்து = மழைக்குப் பின்னர் அளத்தைப் பழுது பார்த்து மறு வருட வாருமதலுக்குத் தயாராக்கு

செலந்தன் = மீன் வகை. Ambassis Commersoni (Glassy perchlet), Ambassis dayi (Glassy perchlet)

செல் = சிப்பி

செவுள் = மீனின் சுவாச உறுப்பு. Gill; Organ with which a fish breathes

செவுள் வலை = வலைவகை. Gill net

செவ்வாயன் சங்கு = சங்கு வகை. சிவப்பு நிறச் சங்கு. வண்ணத்தால் பெற்ற பெயர்

செவ்வாலிக் கெண்டை = மீன் வகை. Barbus Machecola

சென்னவல = வலைவகை. சின்னவலை அல்லது சன்ன வலை

சேதுகுறையபத்துபார் = Sethukuraiya Pattu Par; Bank a little less than in 10 fathoms (J.H.)

சேந்துவல = வலைவகை. படகிலிருந்து சேந்தி எடுக்கப் படும் வலை . Boat Seine

சேலமீன் = மீன் வகை.

சேரி = மீன் வகை.

சேறு = கடல் ஓரத்தில் உள்ள நீர்க்கசடு. Addle

சேறு கருத்தல் = அளம் போட்ட ஓரிரு ஆண்டில் அளத்திலுள்ள களிமண் மிகவும் கருத்தல். சேறு கருப்பதால் உப்பு நீர் நிலத்தால் உறிஞ்சப் படாமல் தடுக்கப் படுகிறது.

சைடு பூசுதல் = சைடு - ஆங்கிலச்சொல் - பக்கம். உப்பள வரப்புகளின் ஓரங்களில் களிமண் பூசுதல்

சைத் ஒன்பது பார் = Saith onbadu Par; Saith-south (a local term derived from Portugeese) Southern Bank in nine fathoms (J.H.)

சைத்குடா முத்துபார் = Saith Kuda muthu Par; South Bank in the Pearl Bay

சொட்டவாள = மீன் வகை. சொட்டைவாளை.Notopterus Spp.

சொத்தச் சங்கு = 'சுத்தைச் சங்கு' எனப் பேச்சு வழக்கில் வழங்கப்படுவது. (அ) பிளவு, ஓட்டை ஆகியன உடையவை; (ஆ) 2 ¼ அங்குலச் சுற்றளவிற்கு உட்பட்டவை. Wormed Chank; Undersized

சொற = கடல் உயிரினம்; சங்கு குளிப்பவர் உடலின் மேல் பட்டால் தாங்க முடியாதபடி வலியும் எரிச்சலும் உண்டாகும்.

சொறி சங்கு . = சங்கு வகை. சங்கின் சுற்று வெளிப்புறம் வழவழப்பாக இல்லாமல் சொர சொரப்பாக இருக்கும்

சங்கு சோகி துண்டு பார் = Kanava Parakkum Sohi Thundu Par; Kanava-Cuttle fish; Parakkum-flying; Sohi-well dressed or adorned (J. H)

சோத்துப்புட்டி = கடல் தொழிலாளர் கட்டுச்சோறு எடுத்துச் செல்லப் பயன்படுத்தும் கோரையினால் அன பெட்டி

சோத்து வெள்ளி = இரவு வேளையில் சாப்பிடும் நேரம் காண்கிற விண்மீன். இரவு உணவு நேரம் வந்து விட்டதென்பதைக் கடலில் அறிந்து கொள்ள இவ்விண்மீனைக் கணக்காகக் கருத்தில் கொள்ளுதல்

சோழகர காத்து = சோழ - தெற்கு; கரைகாற்று - மேற்குக் காற்று; சோழக்கரைக் காற்று- தென்மேற்குத் திசையிலிருந்து வீசும் காற்று

சோழவகொண்ட(ல்) = சோழவம், சோளவம், சோனகம் எனும் சொற்கள் பரதவர் சமூகத்தில் தெற்கு எனும் பொருளில் வழங்கப்படுகின் றன. கொண்டல் - கிழக்குத் திசையிலிருந்து வீசும் காற்று; சோழவகொண்டல்- தென்கிழக்குத் திசையிலிருந்து வீசும் காற்று.

சோளவபார் = சோளகக்கரை பார். Bank lying off the South shore of Rameswaram; Solaka (Cholaka) -South; chola va probably a misprint for Cholakka which is the fishermen's term for south. Ten is the South of the landsman. (J.H.)

சோளவலைக்கட்டை = வலையின் முற்பகுதியில் கட்டப்பட்டிருக் கும் மிதப்புக் கட்டைகளுள் ஒன்று. தலைவலைக் கட்டை, தொங்கு வலைக்கட்டை, கெடமால்கட்டை, மோப்புக் கட்டை என்பன பிற மிதப்புக் கட்டைகளாகும்.

சோளி = கிளிஞ்சல் வகை

சோளிச்சங்கு = கிளிஞ்சல் வகை

சோனகம் = தென்கிழக்குக் காற்று

சோனிவாடு = தெற்குத்திசையிலிருந்து. வடதிசை நோக்கி ஓடும் கடல் நீரோட்டம்

சோனமேமறி வெள்ளம் = சோனிமேல் மறி வெள்ளம்; மேற்குத் திசையிலிருந்து வடகிழக்குத் திசை நோக்கி ஓடும் கடல் நீரோட்டம்

சோனி வெள்ளம் = தென் திசையிலிருந்து வடதிசை நோக்கி ஓடும் கடல் நீரோட்டம்

சௌடிபார் = Chowdi Par; Chodi Par-Chowdi Par; Ornamental Bank (J.H.)

ஜாதித் தலைவன் = பரதவர் குடியிருப்புகளில் குடியிருப்புக்கு ஒரு தலைவன் வீதம் இருப்பவர்கள். இவர்கள் அரசர்களுக்கு வருடாந்திர' அன்பளிப்புகளை மட்டும் வழங்குவர். நாட்டின் மற்ற வரிகள் இவர்களுக்குப் பொருந்தாது. இவர்கள் தன்னிச்சையானவர்களும் அளவற்ற அதிகாரங்களை வகிப்பவர்களும் ஆவர். இவர்களுக்குக் குப்பம் முழுமையும் அடங்கிக் கட்டுப்பட்டே ஆக வேண்டும். (Madras Fisheries Bulletin, Vol. XVI) (இக்காலத்தில் இப்படிப்பட்ட ஜாதித் தலைவர்கள் இல்லை. மேற்கண்ட செய்திகள் முற்காலத்துக்கு உரியவை. காரணம் கால வளர்ச்சியாகலாம்.)

ஜிப்ஸம் = சோடியம் சல்பேட். உப்பளங்களில் 15 டிகிரி முதல் 23 டிகிரி வரை படியும் இரசாயனப் பொருள். சிமிண்ட் தயாரிப்புக்கு உதவும் முக்கியமான மூலப் பொருள். அட்டு எனும் பெயரும் உண்டு.

ஜிலேபி = மீன் வகை

ஸ்டீம் போட் = ஆங்கிலம். Stream boat

டாக் = ஆங்கிலம். செயற்கைத் துறைமுகம். Dock

டிகிரி = ஆங்கிலம். Degree

டிரால் நெட் = ஆங்கிலம். விசைப்படகுகளில் இழுவை வலையாகப் பயன்படும் வலை. இவ்வலை கயிறு, தளை வலை, உடல்வலை, மடி எனும் நான்கு பிரிவாக அமைந்திருக்கும். மடியின் வடிவம் முக்கோணம்.

டீசல் போட் = ஆங்கிலம். டீசலால் இயங்கும் படகு. Diesel Boat

டெக் = ஆங்கிலம். கப்பல், படகு, லாஞ்சி ஆகியவற்றின் மேல் தளம். Deck

தக்கை = வலை மிதக்க உதவும் பொருள்

தங்கல் = மீன்பிடி கருவி

தங்காலம் = மீன்பாடு மிகக் குறைந்த மாசி, பங்குனி மாதங்கள்; கடல் தொழிலாளரின் வறுமைக்காலம்

தங்கு வலை = மீன்பிடி பரதவர்கள் ஆழ்கடலுக்குச் சென்று ஒருவாரம் கடலிலேயே தங்கியிருந்து மீன்பிடிப்பர். இதற்குப் பயன்படும் வலை தங்கு வலை. தங்கு வலை கொண்டு மீன்பிடிக்கும் தொழிலர் இரவுக் காலங்களில் கிருஸ்து ராஜா தீவு, நல்ல தண்ணித்தீவு ஆகியவற்றில் ஓய்வெடுப்பர்.

தங்கூசு = வலை தயாரிப்புக்கு உதவும் கருவி

தடச்சி = வலை முடிக்கப் பயன்படும் தடித்த நூல். மறு வலையின் 'கண்' இந்நூலால் முடிக்கப் படுகிறது.

தடிகாரன் = பர்லா மீனின் மறுபெயர்; குழு உக்குறி; மிக அழகான வடிவம் கொண்டது. கோலா மீன்களை உண வாகக் கொள்ளும் இயல்பினது. இது நீந்தும் அழகைக் காண ஆயிரம் கண்களும் போதாதென்பர். இம்மீனைத் தடியால் அடித்துக் கொன்று வேட்டையாடுவர். இக்காரணம் பற்றியே இம்மீனுக்கு (தடிகாரன்) எனும் குழூஉக்குறி உண்டானது. இதற்கு 'சாடிக்காரன்' எனும் பெயரும் உண்டு.

தட்டப்படகு = தட்டைப் படகு. Pontoon

தட்டப்பை வலை = தட்டையான பை போன்ற வலை. வலை வகை. Flat trawl

தட்டு = அளம். சிறு அளங்கள்

தட்டுமடி = கயிற்று நூலால் செய்யப்பட்ட வலை. முன்னாளில் இது மிகுதியும் பயன்பட்டது. தற்போது நைலான் முதலான செயற்கை இழை வலைகளின் வரத்தினால் வழக்கு ஒழிந்து போனது.

தட்டுமேடு = நெல் களமேடு போல உப்பு கொட்டி வைக்கப் பயன்படும் மேடான நிலம்.

தண்டல் = பணம் தண்டுபவர். பாக்கி வசூலிப்பவர்

தண்டலாள் = பார்க்க - தண்டல். Tindal

தண்டிக்கா = தோணியில் வலிக்கப் பயன்படும் தண்டு

தண்டு = துடுப்பு

தண்டுக்காரன் = கலத்தை இயக்க தண்டு பிடிப்பவன் . கொம்பால் கட்டுமரத்தைச் செலுத்துபவன்

தண்டு வலித்தல் = கலமியங்கத் துடுப்புப் போடுதல்

தண்ணி அற ஓடுதல் = கடல் நீர், கரைப் பகுதிகளில் அஷ்டமி, இருட்டு அமாவாசை, பௌர்ணமி காலங்களில் மேல் ஏறும். முக்கால் மணி நேரத்திற்கு ஒருமுறை ஏறுவதும் இறங்குவதுமாக இருக்கும். இவை முடிந்ததும் கடல் நீர் மீண்டும் பழையபடி முன்னிருந்த இடத்திற்கே ஓடி விடும். இவ்வாறு ஓடுதலை ' தண்ணி அற ஓடுதல்' என்ப ர்.

தண்ணி கழித்தல் = , உப்பு நீரின் அடர்த்தி 29 டிகிரி கடந்ததும் பாத்திகளிலிருந்து நீரை வெளியேற்றுதல்.

தண்ணிகாட்டம் ஏறுதல் = உப்பு நீரின் அடர்த்தி மேன்மேலும் கூடுதல்

தண்ணி குத்துறது = தொட்டானிலிருந்து உப்புநீரை பாத்திக்குத் திறந்து விடுதல்

தண்ணிபன்னா = தண்ணீர்ப் பன்னா. மீன் வகை

தண்ணிபோட்டு மிதித்தல் = உப்பளத் தயாரிப்பிற்காகப் பாத்தியில் உழப்பு முடிந்ததும் தண்ணீர் விட்டு அடுக்கடுக்காக மிதித்தல்

தண்ணி மாத்துறது = கருவாடு தயாரிப்பில் பயன்படும் சிமிண்ட் தொட்டியில் ஊறப்போடும் மீனைத் தினந்தோறும் அள்ளிக் கொண்டிருந்தாலும் உப்பு நீரைத் தினமும் மாற்ற மாட்டார்கள். ஏழு நாட்களுக்கு ஒரு முறை மட்டும் பழைய நீரை வெளியேற்றி அடியில் உள்ள உப்பை அள்ளி அப்புறப்படுத்திச் சுத்தம் செய்த பின்னர் புது நீர் விட்டு உப்புப் போடுவார்கள். இது தண்ணீர் மாற்றுதல் எனப்படும்.

தரகர் = விற்பவர்- வாங்குபவருக்கிடையில் வணிகம் நடக்க முயற்சி மேற்கொண்டு அதற்குக் கூலியாகப் பொருள் பெறுபவர். பரதவர் சமூகத்தில் மீன் தரகர் முக்கிய பங்கு வகிக்கிறார்.

தரவை = உப்பங்கழி

தராசு வெள்ளி = வானின் தென் பகுதியில் காணலாகும் இரு விண்மீன்களைத் தராசு வெள்ளி' என்பர்

தருவை = நீர் நிலை

தலைப் பலகை = கலத்தின் முன்பகுதியில் உள்ள சுக்கான் பலகை

தலைப் பெட்டி = தாழை ஓலையினால் செய்யப்பட்ட தலைத் தொப்பி

தலையாக்கோல் = தோணியின் முன்பகுதியிலிருந்து குத்தித் தாங்கும் கோல்

தலைவலைக் கட்டை = வலையின் மேற்பகுதியில் கட்டப்பட்டிருக்கும் பல மிதப்புக்கட்டைகளுள் ஒன்றின் பெயர்

தவளப் பாசி = தெப்பங்களில் படியும் ஒருவகைப் பாசி

தவளமீன் = மீன் வகை. தவளைக்குஞ்சின் உருவம் போல இருக்கும் மீன். இதன் கண்கள் வலப்பக்கத்தில் அமைந்திருக்கும்

தளம் வச்சிவாருதல் = ஏற்கனவே பாத்தியில் படிந்திருக்கும் உப்பை அள்ளாமல் அதனையே தளமாக்கி அதன் மேல் படியும் சுத்தமான உப்பை அள்ளுதல்

தனித்தூண்டில் = மீன்பிடி கருவி. Casting line

தனியறை = லாஞ்சி போன்ற இயந்திரப் படகுகளில் இயக்குநர் அமர்வதற்குரிய அறை. Cabinet

தன்னுவத்தை = சிற்றோடம்; சிறிய தோணி

தாங்குதல் = தோணி, வள்ளம் போன்ற கலங்களில் இருந்து கொண்டு கோலால் குத்தித் தாங்குதல். கலத்தை முன்னோக்கிச் செலுத்தச் செய்யப்படும் முயற்சி.

தாச்சிக்கண்ட = மீன் வகை; (மணிமேகலைக் காப்பியத்தில் கூறப்பட்டுள்ள திட்டிவிடங்களைப் போல) பார்த்த மாத்திரத்தில் உயிருக்கு ஆபத்து என்பர். கரு நிறம் உடையது. 1 அல்லது 2 முழ நீளம் கொண்டது; கட்டு மரம், வள்ளம் ஆகிய கலங்களின் குறுக்கே பாயும் இயல்பினது. இம்மீனின் மீதுள்ள நீர் நம்மீது தெளித்தாலும் மரணம் என்பர். பரதவர் இம்மீனுக்கு மிகவும் அஞ்சுவர்.

தாச்சில் = ஆழ்கடல்

தாட்டு = தேங்காய் நாரினால் சிறுசிறு கண்ணிகள் அமையப் பின்னப்பட்ட பாய், உலர் மீன் உலர்த்தப் பயன்படும் பாய்.

தாண்டு போச்சி = தோணி, படகு, வள்ளம் ஆகியன கடலில் கவிழ்ந்துவிட்டால் 'தாண்டு போச்சு' என்பர். வள்ளம் தாண்டு போச்சு-உதாரணம்

தாமணி = பல தூண்டில்கள் கோக்கப்பட்ட கயிறு. இது இருவகைப்படும். 1. சின்ன தாமணி; 2. பெரிய தாமணி அளவில் சிறிய தூண்டில்கள் கோக்கப்பட்டிருப்பின் அது சின்ன தாமணி என்றும் பெரிய தூண்டில்கள் கோக்கப் பட்டிருப்பின் அது பெரிய தாமணி என்றும் வழங்கப்படும். நீண்ட வலுவான கயிற்றில் தூண்டில்களைக் கோத்து முதல் நாள் இறக்கி மறுநாள் கிளப்புவர். வழக்கம் போலத் தூண்டில் முள்ளில் இரை சேர்க்கப் பட்டிருக்கும். தாமணி - கயிறு, தாம்பு, வடம், புரி

தாமதம் = பெருவலையின் ஓர் உறுப்பு. தாமம்- அணை கயிறு. கயிறு

தாமாங்கயிறு = தோணிப்பாயின் பின் பக்கத்துக் கீழ்ப் பகுதிக் கயிறு தாமான் கயிறு. தாமான் - கப்பற்பாயின் பின்பக்கக் கயிறு

தாமாவாரி = பாயின் பின்புறத்தில் கட்டப்பட்டிருக்கும் பலகை. வள்ளத்தின் துணை உறுப்பு

தாமானிலே வருதல் = காற்றுப் போக்கிலே கலம் ஓடுதல். ஓடு நீரில் கப்பல் ஓடுதல்

தாமான் = கடல் ஊர்தியின் பின்பக்கத்துக் கயிறு

தார்ப்பூச்சு = வள்ளம், தோணி ஆகியன கட்டி முடிக்கப்பட்டவுடன் மரத்தடிகளுக்கிடையில் உள்ள ஓட்டைகளை பிசின் கலந்த நூல் பிரிகளால் அடைப்பர். இதன் மேல் உருக்கப்பட்ட தார் பெயிண்ட் போலப் பூசப்படும். நீரில் புழங்கப்படும் மரமாதலால் மரம் நூரை உறிஞ்சாமல் இருக்கவும் நீரால் உளுத்துப் போகாமல் நீண்டநாள் உழைக்கவும் தார்ப்பூச்சு பாதுகாப்பிற்காகப் பூசப்படுகிறது.

தாவுகல் = கடலுக்கடியில் ஆழத்தையும் பார் (பாறை) இருப்பிடத்தையும் அறிய பரிசோதனை செய்யும் கயிறு. இக்கயிற்றின் இறுதியில் சிறு கல் முடியப்பட்டிருக்கும்.

காவுதல் = தோணியில் துடுப்புக் கொண்டு தள்ளுதல்

தாழுவல = வலைவகை, Bottom net

தாழை = கடற்கரைத் தாவரம். தாழை ஓலையினால் பெட்டி, தலைக்குத் தொப்பி ஆகியன பரதவர் முன்னாளில் செய்து கொள்வர். கோலா முதலான மீன்களைப் பிடிக்கத் தாழை போன்றவற்றைக் கடலில் போடுவர். காண்க கோலா

திடீர்ப் புயல் = திடீர்- எதிர்பாராமல். எதிர்பாராமல் வீசும் புயல் காற்று. Squall

திமிங்கலம் = மீன் வகை. Whale

திராவுதல் = படகில் துடுப்புப் போட்டுத் தள்ளுதல்

திருக்கை = மீன் வகை. இது தட்டையான அகன்ற உருவமுள்ள பிராணி. கோணம் போன்ற முகத்தின் கீழ்ப்பாகத்தில் வாயும் மேற்பாகத்தில் கண்களும் பெற்றிருக்கும். இதன் வால் 1 அடி முதல் 12 அடிவரை நீண்டு சாட்டைபோல் இருக்கும். இதன் இரண்டு பக்கங்களிலும் இறக்கை போன்ற உறுப்பு உண்டு. இதனால் இது நீரில் தாவிச் செல்லும். இதனை வவ்வால் மீன் என்பர். இவ்விடத்தில் கழுகுத் திருக்கை, கொடுக்கு வால்

திருக்கை, சாரத்திருக்கை உண்டென்பர். புட்டிமீன் - இது திருக்கையின் பேதம். புட்டியைப் போல் உருவம் உள்ளது Aetobatus flagellum (spotted eagle Ray), Aetobatus narinari

திருக்கை வலை = வலைவகை. வலுவான, தடித்த நைலான் கயிற்றால் செய்யப்பட்டது. சுறா மீன் பிடிக்கவும் திருக்கை மீன் பிடிக்கவும் இவ்வலையைப் பயன்படுத்துவர். வலைக் கண் அரை அடி அகலம் கொண்டது. வலை அகலம் 10 அடி; நீளம் 300 அல்லது 400 அடி. இவ்வலை துவர்ச்சாயம் தோய்க்கப்பட்டிருக்கும். பிறவலைகளில் கட்டப் பட்டிருப்பது போல கீழ்ப்புறத்தில் கற்கள் கட்டப்பட்டிரா. இவ்வலையை முதல் நாள் கடலில் இறக்கி மறுநாள் எடுப்பர்.

திருச்செந்தூர் பூந்தோட்டபார் = Tiruchendore Punthotta Par; Punthottam-Flower garden; probably so named on account of some pretty species of sea-weed or other marine organism found on this Bank; Tiru chendur flower garden bank (J.H.)

தில்லை நண்டு = தில்லைக் காட்டுப் பகுதிகளில் வாழும் ஒருவகை நண்டு. தில்லை – ஒருமரம்

தில்லை மரம் = ஒரு வகை மரம்

துடுப்பு = தண்டு

துடுப்பு அழுகல் = மீனுக்கு உண்டாகும் நோய். மீனின் துடுப்பு அழுகுதல். Finrot

துணைச் சுவாசம் = முத்து, சங்கு குளிப்பவர்கள் நவீன சுவாசக் கருவி மூலம் கடலின் அடியில் சுவாசித்தல். Accessory respiration

துண்டுதடி = 1. பாய் மரத்தடி விழுந்து விடாமல் இருக்க மூட்டுக் கொடுக்கப் பயன்படும் சிறுதடி. 2. பர்லா முதலான மீன்களை அடித்துக் கொல்லப் பயன்படும் சிறு தடி

துண்டு பார் = Tundu Par; Small bank (J. H.)

துப்ப கூலி = மீன் வகை . Aetomylus nichofii (Eagle Ray)

தும்பி = மீன் வகை

தும்பிலி = ஒருவகை மரம்

தூராட்(டு) = பெரும்பை வலையின் மேற்பகுதிக்கும் மடிக்கும் இடையே உள்ள மால். Throat

துவர் வைத்தல் = வலைக்குச் சாயம் ஏற்றுதல். புளியங் கொட்டைத் தோல் மூலம் தயாரிக்கப்படும் துவர்ச்சாயத்தில் வலை தோய்க்கப்படுவதால் வலை உறுதிப்படும்; நிறம் பெறும். புளியங்கொட்டைத்தோல் எளிதில் கிடைக்கக் கூடிய விலையற்ற கச்சாப் பொருள். இது உறுதி ஊட்டுவது. பள்ளர்கள் தமது தோற்கருவிகளுக்குப் புளியங்கொட்டைப் பசையினால் உறுதி ஊட்டுதல் இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.

துவி = சுறா வகை. மீன்களின் இறக்கை, செதில், வால் போன்றன 'துவி' எனப்படும். இதன் மறுபெயர் 'பீலி'. இது விலை மிகுந்தது. ஜப்பான், மலேசியா ஆகிய கீழ்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. இது அந்நியச் செலாவணியை ஈட்டித்தரும் ஏற்றுமதிப் பொருளாகும். (திருநெல்வேலி மாவட்டத்தின் தென்பகுதியில் கத்தோலிக்க ஆலயங்களுக்கும் பரதவர்களுக்குமிடையில் 'தனிக் குத்தகை' காரணமாக அண்மையில் ஒரு பெரும் போராட்டம் வெடித்தது. இப்போராட்டத்தை மையமாக்கி திருமதி ராஜம் கிருஷ்ணன் 'அலைவாய்க் கரையில்' எனும் சமூக நாவலை உருவாக்கியுள்ளமை கவனிக்கத் தக்கது.)

துள்ளுகெண்ட = மீன் வகை. Chanos chanos

துறிஞ்சில் = மீன் வகை . Albizzia amara

துறை = மீன்பிடி கலங்களாகிய படகு, வள்ளம் ஆகியன நிற்குமிடம்

துறைமுகம் = பெரிய கடல் கலங்கள் நிற்குமிடம். Harbour

தூண்டில் = மீன்பிடி கருவி

தூண்டில் இரை = மீனவர் பெரிய மீன்களைப் பிடிக்கத் தூண்டில் கொக்கியில் - சிறு மீன், மண்புழு போன்றவற்றைச் செருகிக் கடலில் வீசி எறிவர். இவற்றை உண்பதற்கு ஆசைப்பட்டு வரும் மீன்கள் கொக்கியை

விழுங்கி மீள முடியாமல் அகப்பட்டுக் கொள்ளும். இதற்குப் பயன்படுவது தூண்டில் இரை. Bob

தூண்டில் இரை மீன் = பார்க்க - தூண்டில் இரை. Fish Bait

தூண்டி (ல்) மரம் = தூண்டில் போட்டு மீன் பிடிக்கக் கடலுக்குப் போகும் மரம். மரம் - கட்டு மரம்

தூண்டில் மீன் பிடிக்கிறது = தூண்டிலை மீன்பிடி கருவியாகக் கொண்டு மீன் பிடித்தல். Line fishing

தூண்டில் மீன் பிடிக்கிறவர் = தூண்டிலால் மீன் பிடிப்பவர். Angler

தூண்டில் முள் = மீன்பிடிக்கப் பயன்படும் தூண்டிலின் நுனியில் பொருத்தப்பட்டிருக்கும் முள். Fish hook

தூத்துக்குடி கோடபார் = Tuticorin Coda Par; The Bank off Tuticorin Bay. Kuda-bay; primarily a cavity or hollow (J. H.)

தூய்பு கட்டைச் சட்டம் = வள்ளத்தில் உள்ள ஒருவகைச் சட்டம். Out rigger boom

தூராங்காசி = கிளிஞ்சல் வகை

தூரி = மீன் பிடிக்கும் வலை. வாய் அகன்றும் அடி சிறுத்தும் அடிப்பாகம் திறக்க இயல்வதாகவும் உள்ளது. நீரோட்டத்தில் இது மீன் பிடிக்கப் பயன்படுகிறது.

தூரிவலை = வலை வகை. Trawl net

தூர் = புளியங்கொட்டைத் தோலிலிருந்து தயாரிக்கப் படும் சாயம். வலைக்கு நிறமும் உறுதியும் ஊட்ட இச்சாயத்தில் வலை தோய்க்கப்படும். தூர்- சேறு, மண்டி, கெட்டியான சாயக்குழம்பு

தூர்வாட்டில் வருதல் = வள்ளம் முதலான கடல் கலத்திற்கு அண்மையில் மீன் துள்ளித் துள்ளி வருதல்

தெப்பம் = 1. கடல் கலம், 2. உப்பளப் பாத்தி

தெம்மா ஒழினி வெள்ளம் = தென்கிழக்குத் திசையிலிருந்து வடமேற்குத் திசை நோக்கி ஓடும் கடல் நீரோட்டம்

தெய்வயானை தண்ணீர் வாங்குதல் = வாடைக் காலத்தில் கடலின் மேல் குறிப்பிட்ட இடத்தில் கருத்த மேகம் திரண்டு காணப் படும். நிலையாக நிற்கின்ற இம்மேகத்திடமிருந்து விழுதுகளைப் போல் கோடு கோடாக மேகங்கள் கடலைத் தொடும். இக்கடற்பகுதியில் கிட்டத்தட்ட 1000 அடி பரப்பளவுக்குக் கடல் நீர் கொந்தளிக்கும். இதில் கடல் கலங்கள் சிக்கினால் பாய்மரம் கிழிந்து உயிருக்கு ஆபத்து ஏற்படும். மழையைத் தரும் தெய்வயானை நீரைக் கடலிலிருந்து முகந்து செல்கிறது எனப் பரதவர் நம்புகின்றனர்.

தெரவாங்கன = மீன் வகை

தெவ்வலை = வலை வகை

தெளிவு = 1. கடல் நீர் துல்லியமாகத் தெளிவுபட இருத்தல். இங்ஙனம் இருப்பின் குளியர்கள் சங்கு, முத்து ஆகியன குளிக்கக் கடலில் இறங்க மாட்டார்கள். காரணம் -ஆடா திருக்கை, சுறா போன்றவை எளிதில் மனிதர்களைக் கண்டுகொண்டு பாய்ந்து கடித்து ஆபத்தை விளைவிக்கும். மீன் பிடி தொழிலரும் தெளிவை' விரும்புவதில்லை. மீன்பாடு 'தெளிவு' காரணமாக மிகவும் குறைந்து விடுவது காரணமாகும். 2. வலையின் கண்கள் சுருங்கி விடாமல் விரிந்து இருத்தல்

தெளிவுத் தண்ணீர் = நீர்த்தெளிவு. காண்க : தெளிவு

தென்னல் = தெற்குத் திசையிலிருந்து வீசும் காற்று. திசையால் பெற்ற பெயர்

தேக்கு = வள்ளம், தோணி கட்டுவதற்குரிய தரமான மரவகை

தேங்காய்ப்பாரை = மீன் வகை. Caranx hippos

தேச்சிவிடறது = உப்பைத் தளம் வைத்து வாரும் முறையில் முதலில் படிந்த உப்பை அளத்தோடு தேய்த்து விடுதல்

தேரடி புடித்துபார் = TeradiPiditha Par; Taradi Puditha Par; Ter-Car; 'Teradi-place where car is kept; i.e. Pagoda or temple; Bank having Tiruchendur Pagoda as land mark (J. H.)

தேரி = செக்கச் சிவந்த மணற் பாங்கான இடம். உவர் , மணப்பாடு பகுதிகளில் 200 அடி உயரத்திற்கு அமைந்திருக்கும் மணல்மேடு ('சோமலெ'). மணல் திட்டை

தேவிபார் = Devi Par; Probably the Rani's bank. Devi a titular suffix to the names of the Rani of Ramnad and of Madura; primarily the name of a Goddess (Siva's Wife) (J. H.)

தேளி = மூன் வகை

தொங்குகயிறு = வள்ளத்திற்கும் கடலில் இறக்கிய வலைகளும் இடையில் தொங்கும் கயிறு. Hanging twine

தொங்குவலைக் கட்டை = வலையின் மேற்புறம் கட்டப்பட்டிருக்கும் மிதப்புக் கட்டைகளில் ஒன்று

தொட்டாப்பு = வலைத்துண்டம்

தொட்டான் = உப்பளத்தில் தெப்பத்திற்கும் பாத்திக்கும் இடையில் உள்ள நீர்த்தேக்கம்

தொண்டை = மூன் வகை

தொழி = பழைய முறையில் தயாரிக்கப்படும் உப்பள முறையில் இருக்கும் தொட்டானின் மறுபெயர்

தொழில் = பரதவர் சமூகத் தொழில். மன்னார் வளைகுடாப் பகுதியில் அமைந்த இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டக் கடற்கரைப் பரதவர் 85% மூன்பிடி தொழிலிலும் 15% சரக்கேற்றுதல், சரக்குப் பறித்தல், சவருக்குப் போதல் ஆகிய பிற தொழில்களிலும் ஈடுபட்டுள்ளனர். சங்கு, முத்துக் குளித்தல் மூன்பிடி தொழிலில் அடங்குவன. வணிகம் உப்பளத் தொழில் இன்ன பிற தொழில்களில் அடங்குவன.

தொளுத்தை = மீன் வகை. கடல் பரப்பில், பெருங்கூட்டமாக வயிரத் துண்டங்களின் தொகுதிபோல மின்னிப் பரவும். இம்மீனைக் காண நேர்ந்தால் கடல் கொந்தளிப்பு, புயல் ஆகியன உருவாகப் போகின்றன எனப் பரதவர் நம்புவர்.

தொள்ளாளி = மந்திரவாதி. தாயத்து முதலானவை செய்து தருபவர். மீன்பாடு குறைவாக இருப்பின் எச்சமயத்தைச் சார்ந்த பரதவராயினும் தொள்ளாளியிடம் சென்று தாயத்து பெற்று வந்து சடங்கு செய்வர். காண்க : கண் திருஷ்டி

தொள்ளாயிரம்பார் = Tholayiram Par; 900 Banks; A large bank characterised by numerous small patches of rock rising from a sandy bottom (J.A.)

தோட = தோடை. 'தோட' என்பவர் சங்கு குளிப்பவர்களைக் கண்காணிப்பவர். தொழில் நுணுக்கம் அறிந்தவர். இப்படிப்பட்டவர்கள் இருவர் அல்லது மூவர் ஒவ்வொரு சங்கு குளி வள்ளத்திலும் இருப்பர்.

தோடையன் = 'தோட' எனினும் தோடையன் எனினும் ஒருவரே. மேற்குறிப்பு காண்க

தோட்டுக் கணவா = மீன் வகை. கணவாய் மீனின் இனம்

தோணி = கடலூர்தி. சரக்கு ஏற்றிச் செல்ல வாகானது. Water craft; canoe

தோணி கழுவுதல் = கடல் தொழில் முடிந்து கரை திரும்பியதும் அன்றன்றைக்குப் படிந்த சேறு, மீன் கவுச்சி (மீன் வாடை) போகுமாறு கழுவிச் சுத்தம் செய்தல். கட்டு மரமானால் அதன் கட்டை அவிழ்த்து ஒவ்வொரு தடியாகக் கரைக்குக் கொணர்ந்து சுத்தப் படுத்துவர்.

தோணிக்காரன் = சம்பானோட்டி

தோணி காவுதல் = தொழிலுக்குப் புறப்படும்போது துண்டு தடிகளில் கயிற்றைக் கட்டி அதனூடே தோணி மரங்களைத் (கன்னாத் தோணி, கட்டுமரம்) தூக்கிச் சென்று கரையோரம் வைப்பர். இது தோணி காவுதல் எனப்படும்.

தோணிக்குப் பெயர் வைத்தல் = தமது கலத்தை அடையாளம் காணுவதற்காகவும் தெய்வத்தின் பெயர் சூட்டப்பட்டிருப்பின் அபாயம் நேராது எனும் நம்பிக்கைக்காகவும் தோணிக்கும் இன்ன பிற கலங்களுக்கும் பெயர் சூட்டுவது வழக்கம். கலத்திற்குப் பரதவர் சூட்டும் பெயர்களுள் சில அந்தோணியார், அல்லா, அன்னம்மாள், ஆரோக்கியமாதா, இராயப்பர், இன்னாசியார், சகாயமாதா, சன்பிரேலியஸ் சந்தலேனாள், சந்தனமாரி, சன் அருளப்பர், சன்சார்லஸ், சன்யாகப்பர், சிந்தா யாத்திரை மாதா, சின்னப்பர், சூசையப்பர், ஜார்ஜ், திரேசம்மாள், தோமையார், நாகூர் ஆண்டவர், பரலோக மாதா, பழனியாண்டி, பாத்திமா, பீட்டர்ஸ், பூண்டி மாதா, முருகன், மைக்கேல் சாலமன், லூர்தம்மாள் ஆகியன. ஆபத்துக் காலங்களில் குட்டி யாண்டவர், பாவாடைராயன், முன்னோடும் பிள்ளை பெயர்களை உச்சரிப்பர். தேவ மாதா போன்ற சமயச் சார்பினைப் புலப்படுத்தும் பெயர் சூட்டுதலோடு வசந்தம்' 'விஸ்வநாத்' எனும் தனக்குப் பிடித்தமான அல்லது தன், தனது குடும்ப உறுப்பினரின் பெயர் சூட்டுதலும் உண்டு.

தோணித்துறை = தோணிகள் நிற்குமிடம். Ferry

தோல் பாரை = மீன் வகை. Chorinemus Sanctipetri) Butter fish

நகராபார் = நகரை. ஒருவகை மீன் Upeneus Sulphureus (yellow goat fish); Bank a bounding in a fish called negarai, nagara the name of a fish (J.H.)

நங்கூரக்கல் = இரும்பால் ஆக்கப்படாத, கல் கட்டியநங்கூரம். Killic

நங்கூரத்தண்டு = நங்கூரத்தைத் தாங்கியுள்ள இரும்புச் சங்கிலி. Shank

நங்கூர மிதப்பு = நங்கூரச் சங்கிலியில் பிணைக்கப் பட்டுள்ள மிதப்பு. Moorings

நங்கூரம் = கடல் கலத்தை ஆடாமல் அசையாமல் நிலை நிறுத்துவதற்காகக் கடலடியைக் கௌவிப் பிடித்திருக்கும் இரும்பாலான கொக்கி. Anchor

நங்கூரம் பாய்ச்சுமிடம் = நங்கூரத்தை இறக்கியுள்ள இடம். Anchorage

நங்கூரவடம் = நங்கூரத்தையும் கலத்தையும் இணைக் கும் வடம். Bridle

நஞ்சுக்கான் = கான் - கால்வாய். 29 டிகிரி அடர்த்தியுள்ள உப்பு நூரைக் கழித்து நஞ்சுதண்ணீர்பாத்திக்கு அனுப்பப் பயன்படும் கால்வாய்

நஞ்சுதண்ணி பாத்தி = உப்புத் தயாரிப்பில் இறுதிக் கட்டமாகக் கழியும் நூரைத் தேக்கி வைக்கப் பயன்படும் பாத்தி. உப்ப ளங்களில் உப்பு விளைவித்த பின்னர் மூதி நூரை இப்புடி தேக்குவர். உணவுக்குப் பயன்படுத்த முடியாத அளவுக்கு பல இரசாயனப் பொருட்கள் இதில் கலத்திருக்கும். இந்த உப்பு நீர் நஞ்சு தண்ணீர் எனவும் இது தேங்கியுள்ள இடம் நஞ்சு தண்ணீர்ப் பாத்தி எனவும் வழங்கப்படும். இந்த நீரின் அடியில் உண்டாகும் உப்பு, தோல் பதனிடும் உப்பா கவும் தென்னை போன்ற மரங்களுக்கு அடியிலிடும் உர உப்பாகவும் பயன்படுகிறது.

நஞ்சுவாய்க்கால் = நஞ்சுக்கான்

நடுகடல் = ஆழ்கடல்

நடுகுடா முத்துபார் = Nadu Kuda Muthu Par; Nadu middle; Bank near the middle of the Pearl Bay (J. H.)

நடுக்கட்டி = வள்ளத்தின் நடுவில் உள்ள உள்ளுறுப்பு

நடுக்கோல் = கட்டுமரத்தின் அடிப்பகுதியிலிருந்து குத்தித் தாங்கும் கோல்

நடுவுமலை பிடித்தபார் = Naduvu malai Piditha Par; Naduvu Central; malai-hill; Bank touching or on the bearing of a peak of the Western Ghates (J.H.)

நடுவுல மரம் = கட்டு மரத்தின் நடுமரம்

நண்டு = கடல் நண்டு . Crab

நண்டுகடி = தரமற்றது என முதலாளரால் கழிக்கப் படும் சங்கு

நண்டுக் கண்ணி = நண்டு பிடிக்கும் பொறி. Crab noose

நண்டுக்கூடு = நண்டைப் பிடித்துப்போட பயன்படும் குடுவை போன்ற கருவி. Grab pot

நண்டு கட்டை = கடலோரங்களில் உள்ள நண்டுகளைப் பிடிக்கப் பயன்படும் கருவி. நீண்ட கயிற்றில் சிறு மீன்களையும் இறந்த தவளைகளையும் கட்டி அக்கயிற்றைக் கடலில் போடுவர். பரதவச் சிறுவர்கள் பயிற்சிக்காகவும் இது பயன்படுதல் உண்டு. இந்த நண்டுக் கட்டையைப் போடப் போகிறவர் தனியே நீந்தியும் தனிக் கட்டைகளைத் துணைக்குக் கொண்டு நீந்தியும் கடலின் உட்பகுதியில் அலை இல்லாத இடத்தில் போடுவர். இதைப் போட்ட சிறிது நேரத்தில் மீண்டும் வட்ட வடிவமான வாயோடு கூடிய பை போன்றிருக்கும் கச்சாவலையை எடுத்துச் சென்று நீந்திக்கொண்டே கயிற்றை மெல்லப் பற்றி கயிற்றில் கட்டப்பட்ட இரைகளைத் தின்று கொண்டிருக்கும் நண்டுகளைக் கச்சாவலையில் ஏந்திக் கொள்வர். தூண்டிலில் இரை தீர்ந்துவிட்டால் வேறு இரை. கட்டுவர். பரதவச் சிறுவர்க்குக் கடல் நுணுக்கம், வெள்ளம் பற்றிய அறிவு, நீச்சல் பயிற்சி ஆகியன இதன் மூலம் கிடைக்கின்றன.

நண்டுப் பரி = நண்டுக் கூடு. Crab pot

நண்டுவல = வலைவகை; வலையின் நிறம் வெண்மை ; வலைக்கண் அரை அங்குல அளவினது. அகலம் 5 அடி; நீளம் 30 அடி; பல துண்டு வலைகள் இணைந்தது ஒரு நண்டு வலை. ஒரு கட்டு மரத்தில் சென்று தொழில் செய்ய 10 துண்டு வலைகள் போதுமானவை. இவ்வலையைக் கொண்டு தொழில் செய்ய இரு பரதவர் போதும். இவ்வலையில் மிகுதியும் பிடிபடுவது பொருவா எனும் மீனாகும். 'மேங்கா'வில் மிதப்புகளும் 'கீங்கா'வில் கற்களும் வழக்கம்போல் கட்டப்பட்டிருக்கும். அம்பது கட்டை வலை, அறுவது கட்டை வ(லை என மிதப்புக் கட்டைகளின் எண்ணிக்கையை வைத்து வலையின் பெருமை, சிறுமையைக் கூறுவர்.

நரம்பு = கனமான உறுதியான செயற்கை இழை; மீன் பிடிக்கப் பயன்படுவது; 100ஆம் நெம்பர், 70ஆம். நெம்பர் என நரம்பு வகைகளுக்குப் பரதவர் வைத்திருக்கும் பெயர்கள்.

நல்ல தண்ணி தீவு = இராமநாதபுரத்திலிருந்து 40 கி. மீ. தொலைவிலும் வாலி நோக்கத்திலிருந்து ஒரு மணி நேரப் பயண தூரத்திலும் நல்ல தண்ணித்தீவு உள்ளது; 100 ஹெக்டேர் பரப்பளவு உள்ளது; மீனவர்கள் தொழிலினூடே ஓய்வெடுக்கப் பயன்படும் இடமாக இத்தீவு

அமைந்துள்ளது. இது ஒரு காலத்தில் இராமநாதபுரம் அரசருக்கு உரிமைப் பட்டதாக இருந்தது. சில தசாப்தங்களுக்கு முன்னர், மகமதிய வணிகர் ஒருவருக்கு விற்கப்பட்டுவிட்டது. இங்கே ஒரு. முனியசாமி கோயில் உள்ளது. கடல் கொந்தளிப்பில் அகப்பட்டுக் கொண்டு பிரார்த்தித்துத் தப்பிப் பிழைத்த மீனவர் நேர்ச்சைக் கடனாகக் கட்டியது இக்கோயில் என்பர். பக்கத்தில் உள்ள ஆலமரத்தில் நேர்ச்சைக் கடனாக பல மணிகள் கட்டப்பட்டுள்ளன. இத்தீவைச் சுற்றிலும் பவளப் பாறைகள் உள்ளன. இத்தீவில் குடிக்க நல்ல தண்ணீர் உள்ளது.

நல்ல தண்ணி தீவு பார் = Nalla Thannir Tivu Par; Nalla Thannir-fresh water; nalla thanni tivu is a island in the Zamindari of Ramnad where excellent fresh water is obtainable from shallow wells (J.H.)

நல்ல கணிசம் = மீன் படுவதற்குரிய தகுந்த நேரம்

நவரை = மீன் வகை

நறுக்கு கொத்தா(ய்) கொத்துதல் = சண்டு அரிதலுக்கு வசதியாக உப்பளப் பாத்தியை மண்வெட்டியால் சிறுசிறு கொத்தாய்க் கொத்துதல்

நாகணம் = சங்கின் கண்

நாக்கு = மீன் வகை. மனிதனுக்கு உள்ளது போல் நாக்கு உள்ள மீன் . Brachirus Orientalis, Brachiras albomaculata, Brachirus Pan

நாட்டார் = பரதவருள் ஒரு பிரிவினர்

நாட்டுப் படகு = மரபு வழிப்பட்ட, பழமையான கடல் கலம். Country oraft

நாட்டுமரம் = மரபு வழிப்பட்ட மரக்கலம். Indigenous craft

நாமப் பன்ன = மீன் வகை. Epinephe]us boenack

நாமப்பாரை = மீன் வகை. Caranx leptolepis

நாயராட்சை = ஞாயிற்றுக்கிழமை. பரதவர்க்கு ஞாயிற்றுக்கிழமை இருவழிகளில் முக்கியத்துவமுடையது. 1. வார விடுமுறை நாள்; 2.

பெரும்பாலோர் ரோமன் கத்தோலிக்கராதலால் குடும்பத்தோடு தேவாலயங்களுக்குச் சென்று வழிபாடு செய்யும் நாள். 'மெனக்கி நாள்' என்றும் கூறு வர்.

நாய்ச்சுறா = சுறா மூன் வகை. சுறா இனத்தில் மிகச் சிறியது. 4 அடி நூளம் வரை வளர்வது.

நாரிப்பெட்டி = மூன் எடுக்கப் பயன்படுத்தப்படும் பெட்டி

நிலவு பதிதல் = நிலவு கடற்பரப்பிலிருந்து வெளியில் கிளம்புதல். முழு நிலவும் கடற்பரப்பை ஒட்டி நிற்கும் சமயம் நிலவு கடல்மேல் பதிந்தது போலத் தோற்றமளிக்கும். நிலவு பதியற நேரமாச்சு' என்பர் பரதவர். இது நேரம் குறிக்கும் தொடர்.

நாவாய் = கடல் கலம். Vessel

நாளி = வள்ளத்தின் உள்ளூறுப்ப

நிலைவல = வலை வகை. Setnet

நூரோட்டம் = கடல் நூரிடையில் கிழக்கிலிருந்து மேற்காகவும் வடக்கிலிருந்து தெற்காகவும் தனி ஆறுபோல் வேகத்துடன் ஓடும் நூரோட்டம். Current; Stream.

நூர்க்க சடு = தளதளப்பான சேறு. Addle

நூர்த்தல் = ஆழ்கடலுக்கு மூன் பிடிக்கச் செல்லுதல்

நூர்நாய் = கடல்வாழ் உயிரினம். Otter

நூர்ப்பாசி = கடல் தாவரம்

நூர்ப்பாடு = நூர்க்குறைவு

நூர்வாரு = கடல் நூரோட்டம்

நூலங்கல்லுபார் = நூலம் கல் பார். Nilam-Blue; Kallu Stone; Blue stone bank (J.H.)

நுரகல்லு = நுரைகல். கடவில் கிடைக்கும் சுண்ணாம்புக்கல். நுரை போன்ற அமைப்புடையது. பவளச் சுண்ணாம்புக்கல், சுழி எனும் பெயர்களும் உண்டு.

நுழைப்பள்ளி . = பரதவருள் ஒரு பிரிவினர்

நூங்கு = கடல்வாழ் உயிரினம்; நண்டு இனம். பார்ப்பதற்கு 'இறால்' போலத் தோற்றமளிக்கும். 'இறால்' மிகுந்த விலை விற்பதனால் 'நூங்கு' இதனுடன் கலப்படம் செய்யப்படுவதாகச் சொல்கின்றனர். ஒரு சிலரே பேராசை காரணமாகச் செய்வதாகக் கூறப்படுகிறது.

நூல் = வலை பின்னுவதற்கு உதவும் மூலப்பொருள். பருத்தி நூல் அல்லது நைலான் நூல். Twine

நூல் ஏணி = நூலால் ஆகிய ஏணி

நூல் முருக்க = நூலை முறுக்கி உறுதிப் படுத்துவதற்குரிய கருவி

நெஞ்சுரிச்சான்பார் = Nenjurichan Par; Good for nothing bank; literally 'heart harrower'. Nenjurichan! Nenju-heart; Urichan-flayer or peeler (J. H.)

நெடுமான் கெளிறு = மீன் வகை. Arius dussumieri

நெட்டி = மீனின் வயிற்றுக்குள் இருக்கும் காற்றுப்பை 'பாளை' எனும் மறுபெயரும் இதற்கு உண்டு.

நெத்திலி = நெற்றிலி, மீன் வகை. Engraulis indicus (White bait)

நெத்திலி வலை = வலைவகை. நெத்திலி (நெற்றிலி) மீன் இவ்வலையில் மிகுதியும் பிடிபடும், வலைக்கண சிறிய அளவினது. வலையின் அகலம் 5 அடி

நெய்ச்சூலா = சூலா மீன் வகை. சுவையும் விலையும் மிகுந்தது

நெருக்கு = வள்ளத்தின் உள்ளுறுப்பு

நேரம் வெள்ளை வைத்தல் = மானம் கீழ்மாறு வாங்குதல்; இருளகன்று வெளிச்சம் புலப்படும் அதிகாலைப் பொழுது

நோக்கச்சாங்காத்து = நேர் தென் திசையிலிருந்து வடதிசை நோக்கி வீசும் கடற் காற்று

தேர் கொண்ட காத்து = நேர்கிழக்குத் திசையிலிருந்து மேற்குத் திசை நோக்கி வீசும் கடற்காற்று

நேர் கோடைக் காத்து = நேர்மேற்குத் திசையிலிருந்து கிழக்குத் திசை நோக்கி வீசும் கடற்காற்று

நேர் பாட்டன் = காற்று பலமாக அடிக்கும் போது வாயுவை பாட்டன் முறை கொண்டழைத்துப் பரதவர் கூவுவர். கடல் நூரை அள்ளிப் பாய்மேல் தெளித்து வணங்குவர். காண்க ஆறுனபாட்டன்

நேர் வாடைக் காத்து = நேர் வடதிசையிலிருந்து தென் திசை நோக்கி வீசும் கடற்காற்று

நைலான் வலை = நைலான்-ஆங்கிலச் சொல். செயற்கை இழையால் ஆக்கப்பட்ட வலை. வலைவகை. Nylon yarn

பகுறணை = 'பௌர்ணமி' எனும் சொல்லின் பேச்சு வழக்கு. கடல் தொழிலில் இந்நாள் குறிப்பிடத் தகுந்தது.

பச்சிலை அடித்தல் = நூர்வாட்டம், மீன்பாட்டுப் பருவம் முதலானவை சரியாக இருந்தும் தொடர்ச்சியாகச் சில நாட்கள் மீன் சரியாகக் கிடைக்கவில்லையென்றால் வலைக்குச் சடங்கு செய்வார்கள். எருக்கன் இலை, பூக். கிளாத்தி ஆகியவற்றைக் கொத்தாகக் கொண்டு வந்து அவற்றால் வலைகளையும் வள்ளத்தையும் அடிப்பார்கள் இதற்குப் பச்சிலையடித்தல் என்பது பெயர்.

பஞ்சலை = மீன் வகை . Barbus Chrysopoma, Barbus Sarana

படகு = கடலூர்தி. Boat

படகுக் கண் திறத்தல் = வள்ளம் அல்லது படகை நாள் செய்து கடலில் தள்ளுவதற்கு கொஞ்சநேரம் முன்பு, அந்தப் படகைக் கட்டிய ஆசாரியைக்

கூட்டி வந்து உளியினால் படகின் இருபக்கங்களிலும் 'கண்' போன்ற அமைப்பை வெட்டுவிக்கின்றனர். இப்படிக் கண் வெட்டு வித்தால் படகு விபத்துக்களில் சிக்காமல் இருக்கும் என நம்புகின்றனர். மனிதனுக்குக் கண் அவசியமாக இருப்பதைப் போலப் படகுக்கும் கண் அவசியம் என்பர், படகுக்குக் கண் திறக்கும் நாளில் 'கொழுக்கட்டை ' முதலானவற்றைச் செய்து படைப்பர். படகு கட்டிய ஆசாரிக்குப் புது வேட்டி, துண்டு ஆகியன எடுத்துக் கொடுப்பர்.

படகு திருப்பல் = பெரிய வலை வைப்பதற்கு (கடலில் இளக்குவதற்கு) முன்னர் படகை நேர் கிழக்குத் திசையில் திருப்புதல்

படகுத் துடுப்பு = படகு நீரில் முன்னோக்கிச் செல்வதற்கு வாய்ப்பாக நீரைப் பின்னோக்கித் தள்ள உதவும் தட்டையான ஒரு மரச்சட்டம். Oar, scull

படகு நாள் செய்தல் = பரதவர்கள் புதிதாகச் செய்த தங்களின் தோணிகளை முதன்முதலாகக் கடலில் இறக்குவதற்குச் செய்யும் சடங்கு , 'நாள் செய்தல்' எனப்படும். நாள், நட்சத்திரம் முதலியவற்றை நல்ல ஜோசியரிடம் பார்த்துக் குறிப்பிட்ட நாளில் கடலில் இறக்குவதென முடிவு செய்து நாள் குறிப்பர். அந்தக் குறிப்பிட்ட நாளில் புனித மரியன்னை கோவிலுக்குச் சென்று அன்பளிப்புகளை வழங்கித் தங்களுக்காகப் பாதிரியாரிடம் வழிபாடு நடத்தச் சொல்வார்கள். அன்றைக்கே நெருங்கிய உறவினர்கள், நண்பர்கள் எல்லோருக்கும் தெரிவித்து படகு இருக்கும் இடத்திற்குச் சென்று பொங்கல் வைத்து கடலை சுண்டல் ஆகியன வைத்துப் படைப்பர். பின்னர் பரதவர் பலர் சேர்ந்து தோணியைக் கடலுக்குள் தள்ளிவிடுவர். இச்சடங்கின் போது பன்னீர் பாட்டில் உடைத்து நாள் செய்வர். உயிர்ப்பலிப் பழக்கம் கிருத்துவ தொடர்பால் பன்னீர் பாட்டில் உடைப்பதாக மாறிவிட்டது. இச்சடங்கைக் கூர்ந்து நோக்கினால் இரு சமயக் கலப்பையும் கவனிக்கலாம். பொங்கல் இடுவது இந்து சமய வழக்கம். பன்னீர் பாட்டில் உடைப்பது கிருத்துவ சமய வழக்கம்.

படகு வலிக்கிறவர் = படகு இயங்கத் துடுப்புப் போடுகிறவர். Sculler

படிசு = வீச்சு வலையின் ஓர் உறுப்பு

படிப் புறப்படல் = கலங்கள் கடல் அலைகளைத் தாண்டிச் செல்லுதல். கொந்தளிக்கும் கடலோரப் பகுதியைத் தாண்டி ஒரே நேரத்தில் தாவுகள்

தள்ள, துடுப்புகள் வலிக்க, கோல்கள் குத்தித் தாங்க கலம் பயணம் புறப்படல்.

படிவலை = வலைவகை.

படுகுழி = கடற்பரப்பின் கீழ் இருக்கும் பேராழம். Abyss

படுத்தமரைக்கான் துண்டுபார் = The small bank close to the Padutha marikan Par; Thundu-fragment i. e. small; marikan-maraikan (J.H.)

படுத்த மரைக்கான் பார் = Bank whereon Marikan (a Musal- - man) was found lying (dead). Paduthiru-lying down. Marikan or Marikar-appended to Muham madan names in a relic of an honorofic bestowed by the Portugeese upon prominent Muhammadans (J.H.)

படுபாதாளம் = கடற்பரப்பின் கீழ் 300 பாகத்தைக் காட்டிலும் ஆழமான பகுதி. 1 பாகம் - 6 அடி. 300 பாகம் 1875 அடி. படு பாதாளம் - ஏறக்குறைய 2000 அடிக்கு மேல் உள்ள ஆழமான பகுதி.

படைக்காரன் = கோலாமீனின் மறு பெயர்; குழூஉக்குறி. காண்க - கோலா

பட்டங்கட்டிகள் = ஜாதித் தலைவன். பரதவர் சமுதாயத்தில் இவர்கள் ஊர்த் தலைவர்கள் போன்றவர்கள். முன்னாளில் இவர்கள் முழு அதிகாரம் பெற்றிருந்தனர். இவர்களுக்கு அச்சமூகம் முழுவதும் பயந்து கட்டுப்படும்,

பட்டறை = தோணி செய்யப்படும் இடம்; செய்தபின் கடலில் இறக்குவதற்கு முன் நிறுத்தி வைக்கும் இடம்.

பட்டன சுட்டான் = மீன் பெயர்.

பட்டி = 1. சங்கு வகை. இராமநாதபுரம் மாவட்டக் கடற் கரைப் பகுதிகளில் கிடைப்பது. பலகறை எனும் சங்கு வகை. 2. தோணியின் குறுக்கே உட்காரப் பயன்படும் பலகை

பட்டிவல = வலைவகை. Pound net

பட்டினவர் = பட்டினம் - கடற்கரையில் அமைந்த நகரம். கடற்கரையிலிருந்து கொண்டு கடல் தொழில் செய்யும் நெய்தல் நில மக்கள். கரையில்

பட்டினவன் = பரதவருள் ஒரு பிரிவினர். நெய்தல் நில மக்கள், பரவர்

பணிஞ்சிட்டுப் படுது = மீன்கள் கடல் நீரின் கீழ் மட்டத்திலிருந்து கொண்டு வலைவீசும் போது அகப்படுதல்

பண்டாரி = மீன் வகை

பண்ணடித்தல் = வலையின் குறிப்பிட்ட பகுதியைத் தட்டிக் காயப் போடுதல்; அடிமை வேலை செய்தல்

பண்ணிக்குச்சுகளி = கடற்கரையோர உப்பங்கழிகளில் வளர்கின்ற தாவரம்; ஒருவகை மரம். இம்மரம் அடுப்பெரிக்க விறகாகவும், வீடு கட்ட மரமாகவும் பயன்படுகிறது,

பண்ணுபோட்டுக் காவுதல் = கடல் தொழிலுக்குப் புறப்படுஞ் சமயம் தனித்தனியாக இருக்கும் கட்டுமரங்களைக் கரையோரம் தூக்கிச் சென்று அணைத்துக் கட்டவேண்டும். மரம் பளுவாக இருப்பதால் இருவர் இருவராகத் தோளில் போட்டுத் தூக்கிச் செல்வர். இப்படித் தூக்கிச் செல்வதை 'பண்ணு போட்டுக் காவுதல்' என்பர். 'மரங்காவுதல்' என்றும் சொல்வர்.

பண்ணையன் = உப்பளத்தில் தொழில் புரிபவர்

பத்தரன்பார் = பத்து அரை அன் பார். பத்தரையன்-- பத்தரன். 101(fathom) bank; Pattu-ton; arai-half ((J.H.)

பத்தார் = வள்ளத்தின் உள்ளூறுப்பு

பத்துகடை = வலை வகை

பத்துகட்டல் = வலையை அளவு பார்த்துச் சீர் செய்து கட்டுதல்

பத்துவளி = பற்றுவாரி. முதலாளியர் சங்குகுளித் தொழிலாளர்க்குத் தொழில் சூசன் இல்லாத சமயங்களில் முன் பணமாகக் கொடுக்கும் கடன் தொகை.

பந்தயப்படகு = படகுவகை. அகலம் குறைந்த நூளம் மிகுந்த அலங்காரமான படகு. Streamlined boat; Yacht

பந்துகட்டல் = கடல் அலைகளின் மூது மிகவும் அரிதாகப் பாம்புகள் ஆணும் பெண்ணுமாக இணைந்து பந்துபோலத் திரண்டு நூர்மேல் மிதத்தல்

பரண்டாவலை = வலைவகை. 'பரண்டா ' எனும் மூன் பிடிக்கப் பயன்படும் வலை

பரதர் = நெய்தல் நில மக்கள், வணிகர், கடலோடிகள் (அரும்பதவுரை)

பரதவர் = நெய்தல் நில மக்கள், நுளையர்

பரமந்தாடி = சங்கு குளிக்கும் குளியர்களுக்குச் சங்கு படிந்து கிடக்கும் சங்குப் படுகைகளைக் காட்டிக் கொடுப்பவர்.

பரவர் = ஒரு ஜாதியார், வலைஞர். பரவர்-- வேள்விக்குடிச் செப்பேட்டுச் சொல்லாட்சி.

பரி = மூன் பிடிக்கும் கருவி, ஈர்க்கு, கோரை, பிரம்பு போன்றவற்றால் ஆக்கப்பட்டது. வாய் அகன்றும் அடி மூடப்பட்டும் தூரி போன்ற அமைப்பில் இருப்பது.

பரிசல் = ஆளேற்றிச் செல்லும் தட்டைப் படகு : Coracle; Whorry

பருமணி = பெரிய உப்பு

பருமல் = படகில் பாயுடன் பிணைக்கப்பட்ட கம்பி. கப்பல் பாய், கட்டு மரம்

பருமை = பாய்மேல் கட்டப்படும் மூங்கில் தடி

பருவலை = வலைவகை

பருவாட்டில் வருதல் = மீன் 'பொச பொச' வென்று கடலின் மேல் வெளி வருதல்

பருவான் = தோணியின் உட்கருவி

பர்லா = மீன் பெயர். கோலா மீனை உணவாக உட்கொள்ளும் இயல்பின. 'தடிகாரன்' என்பது இதனைச் சுட்டும் குழூஉக்குறி. கோலா மீனுக்குப் பின்னாலேயே சுற்றும். காண்க- தடிகாரன்

பர்வதராச குலம் = பரதவர் பொதுப் பெயர்

பலகறை = சங்குவகை

பலவனாக்கு = பலவை நாக்கு (பலகை நாக்கு?) துடுப்பு அல்லது தண்டு

பலாச் சுறா = சுறாவகை. மிகவும் கொடியது. இதற்குப் பாயும் உடல் வாகு மிகுதி. கலத்தின் அருகில் இது தென்பட்டாலே பரதவர் மிகவும் எச்சரிக்கை அடைவர். நல்ல உயர்சாதி நாய்கள் பாய்ந்து கவ்வுவது போல இது மனிதனைப் பாய்ந்து கவ்வும். மனிதரை உணவாகக் கொள்வதில் விருப்பம் மிகவுடைய மீன் இது.

பல் சக்கரம் = லாஞ்சிலிருந்து வலையை இளக்குவதற்கும் வாங்குவதற்கும் உதவும் பல் சக்கரம்

பல்ப் பூச்சி = சங்கு வகை, மிகச் சிறிய சங்கு

பல்வாயன் = சங்குவகை. சங்கின் உள் அமைப்புகள் பல் போன்று அமைந்திருப்பதால் உண்டான பெயர்

பல்ஜிப்சம் = நன்றாக விளைந்த ஜிப்ஸம். உப்பளத் தளத்தினுள் நீண்ட - கூக்மையான பற்களைக் கொண்டு ஆழப் பதிந்தது. இலேசில் பிடுங்க முடியாதது.

பவழம் = பவழம், பவளம் - ஒரு பொருள் குறிப்பன. இது கடலில் பாறைகளைத் தமக்கு இடமாகக் கொண்ட பூச்சிகளின் உடற்கவசம். இது வெப்பமான பிரதேசங்களின் கடற்பகுதிகளில் உண்டு. இது சுண்ணாம்புச் சத்தைக் கொண்டது. இப்பூச்சிகள் பவழத்தைக் கவசமாகக் கொண்டு தலையில் பலமலர்போல் உறுப்புகளை பெற்றிருக்கிறது. தனக்கு அபாயம்

நேருகிறபோது கைகளை உள்ளிழுத்துக் கொள்கின்றன. இவை பல வகையாகப் புற்றுகளாகவும் பூண்டுகள் போலவும் ஊர்ந்தும் இருந்தும் வளர்கின்றன.

பவளம் = பார்க்க-பவழம். Coral

பவளச் சுண்ணாம்புக் கல் = நுரைகல், சுழி எனும் பெயர்களுமுண்டு. சுண்ணாம்புத் தயாரிப்புக்கு உதவும் மூலப்பொருள்

பவளச் சுண்ணாம்புப் பாறை = பவளச் சுண்ணாம்பு பெரிய பாறைபோல் ஆகியிருத்தல். Coral rock

பவளத்திட்டு = பவளம் - கடல் வாழ் உயிரினமான ஒரு பூச்சியின் உடற்கவசம். இக்கவசங்களின் தொகுதி புற்றுகளாகவும் பாறைகளாகவும் திட்டுகளாகவும் வளர்ந்திருத்தல். Atoll

பவளத் தூவு = பவளப்பாறைகளால் ஆன தூவு

பவளப்பாறைத் தொடர் = பவளப் பாறைகள் நீண்ட தொடராக நீண்டிருப்பது. Coral reef

பவளவேர் = பவளத்தின் வேர்ப் பகுதி. Coral wort

பறச்சேரிபத்தூர் = Paracherry Pathoor; Paracherry Pattu Par; 'Pathoor' appears to be a misrendering for <Pattu Par' the depth being 10 fathoms. Pathoor may also signify the 10 villages; but the context does not support this reading; 10 fathom bank off the Paraiah village (J.H.)

பறச்சேரிபார் = Paracherry Par; Cheri--village; Paraiyan, Paraiah-a drummer; the bank off the Paraiah village (J. H.)

பறி = மீன் வைப்பதற்குப் பயன்படுத்தும் பனை ஓலையால் செய்யப்பட்ட கூடை

பற்று வடம் = மரக்கலத்தின் சிறிய பாய் கட்டப்பட்டிருக் கும் கயிறு. Lanyard

பனந்தலை = மீன் வகை. Aragyrops Spinifer (Long spined red bream)

பனவன் = மீன் பெயர். இதைக் காண்பது அபசகுனம் என்பர் பரதவர். இது வலையிலோ வள்ளத்திலோ படாமல் இருக்கக் கிருத்துவப் பரதவர் மரியன்னைக்கும் இந்துப் பரதவர் கன்னிமாருக்கும் பூசை போடுவர். இது திமிங்கல வகையைச் சேர்ந்ததாகும். கானாங் கெளுத்தி, சூடை மீன்களின் மீது கொண்ட ஆசையால் இது கரைப் பகுதிக்கு வரும். இது வருவது தீவு நகர்வது போலக் காணப்படும். இதற்குப் பரதவர் பெரிதும் அஞ்சுவர். 'கன்னா ' எனப்படும் சிறு தோணிகளைக் கூடக் கடித்துத் துண்டாக்கி விடும் வலிமையுடையது. இதனுடன் கலம் மோதினால் பாய் கிழிந்து அறுந்து உயிருக்கு ஆபத்து உண்டாகும். இது உணவு வேட்டையாடுதல் தந்திரமான செயலாகும். வாயை அங்காந்து திறந்து கொண்டு தாடையைக் கடல் நீர் மட்டத்தில் வைத்திருக்கும். நீரோடு ஓடி வரும் மீன்கள் அபாயத்தை உணர்ந்து கொள்ளாமல் வாயில் வந்து விழ - இது வாயை மூடிக்கொண்டு உட்புகுந்த நீரைக் காது வழியாக வெளியே பனைமர உயரத்திற்குப் பீய்ச்சி அடித்து வீட்டு மீன்களை விழுங்கி விடும்.

பனைமீன் = மீன் வகை

பனையேறிக் கெண்டை = - மீன் வகை. Anabasscandens; Climbing porch

பன்னா = மீன் வகை. Epinephelus miniatus

பன்னாமீன் = மீன் வகை. பன்னா, பன்னா மீன் - ஒரே மீன்

பாகம் = ஆங்கிலப் பதம். 'பாதம்' எனும் உச்சரிப்பின் பேச்சு வழக்கு. Fathom

பாங்காக்கெண்டை = மீன் வகை. Bangkok Strair

பாசி = நீர்த்தாவரம். Alga

பாசித்திரள் = பாசிகளின் தொகுப்பு. Algal bloom

பாசிப்பார் = Sea-weed bank; pasi-sea-weed; literally moss (J. H.)

பாச்சவலை = வலைவகை. மீன்கள் பாய்ந்து சென்று வலையில் மாட்டிக் கொள்வதால் பாய்ச்சல் வலை என்று பெயர் பெற்றுப் பின் பாச்சவலை என மருவிற்று. Bottom net. Trammel net

பாஜம் = பாதம் எனும் ஆங்கிலச் சொல்லின் மறு வடிவம், பாதம்-பாவம்-பாகம்-பாஜம். கடலாழத்தைக் கணக்கிடப் பயன்படும் நீட்டலளவை. ஏறக்குறைய ஆறு அடி நீளம் கொண்டது ஒரு பாதம். Fathom

பாஞ்சல் திருக்கை = மீன் வகை. Aetomylus maoulatus (Nottled eagle Ray) Aetonylus nichofii (Eagle Ray)

பாட்டா பாட்டா = முறைப்பெயர் விளி. கடல் தொழிலாளர்க்குக் காற்று முக்கியமானது. காற்று ஓட்டம் இல்லாமல் கமுக்கமாக இருந்தால் மிகவும் கடினம். கலத்தை இயக்க உடல் வலுவை மட்டுமே நம்பியாக வேண்டும். இது சிரமமானதுங்கூட. காற்று அடித்தால் பாய்விரித்து எளிதாகக் கலம் ஓட்டலாம். காற்றில்லாச் சூழ்நிலையில் பரதவர் காற்றை 'பாட்டா, பாட்டா' என முறைச் சொல்லிக் கூப்பிடுவர். சீழ்க்கை ஒலி எழுப்புவர். இறப்பாக் கட்டையால் தண்ணீர் முகந்து பாயில் வாரி இறைப்பர். இப்படிச் செய்தால் காற்று வீசும் என்பது அவர்தம் நம்பிக்கை.

பாட்டை பாட்டையாகப் பெய்தல் = கடற்பரப்பின் மீது இடம் விட்டு விட்டு மழை பெய்தல்

பாணி அடித்தல் = கடலடியில் மீன் மண்ணைப் பறித்துத் தங்குதல்

பாத்தி = உப்பளத்தில் உப்பு விளையும் நிலம்

பாத்தி கொதிப்பேறுதல் = கடுமையான வெயிலால் அளவுக்கு அதிகமாக உப்பளம் கொதிப்படைதல். இதனால் உப்பு சிறு சிறு உப்பாக விளையும். உற்பத்தி குறையும்.

பாத்தி சீவுதல் = அறுத்து வாங்குதல்

பாப்பர மூஞ்சன் = மீன் வகை

பாம்பன் கரையார் = Pambankarai Par; karai-shore; Par-rock; and by extension of meaning rocky back (J.H.)

பாம்புவாய் நாற்றம் = கடல் வெளியில் வீசும் சகிக்க முடியாத துர்நாற்றம். பெருமீன்களை உண்டுவிட்டு பாம்பு கடல் மட்டத்திற்கு வந்து காற்று வாக்கில் வாயைத் திறப்பதால் இந்நாற்றம் உண்டாகிறது என்பர் பரதவர்.

பாயாசாரி = பாய் ஆசாரி. பச்சுவாடா போன்ற கலங்களில் பயன்படுகின்ற பெரிய பாய்களைத் தைத்தல் சிரமமான அரிய தொழிலாகும். இந்தப் பாய்களைத் தைப்பவர் பாயாசாரீ எனப்படுவர். தூத்துக்குடிக்குச் சமீபத்திலுள்ள முகமதியர்கள் பாய் தைப்பதில் தேர்ச்சி உள்ளவர்கள். காரணம் இவர்கள் முற்காலத்தில் மரக்கலராயராக இருந்து பெற்றத் தொழில் அனுபவமாகும். சிறு பாய்கள் எனில் பரதவரே தயாரித்துக் கொள்வர்.

பாய் = வள்ளம், தோணி ஆகியன இயங்க உதவும் பாய். இது இருவகைப்படும். பெரும்பாய், சிறுபாய் என்பன அவை. பாய் முரட்டுத் துணியால் ஆக்கப்படுகிறது. காற்றின் வேகத்தையும் வலிவையும் பயன்படுத்தி வள்ளத்தை நேரில் செலுத்த உபயோகப்படும் கருவி. Sail

பாய் ஓட்டில் ஓடல் = அளவாகக் காற்று வீசும் போது பாயை விரித்துச் சரியான திசையில் கட்டிவிட்டால் கலம் நீரைக் கிழித்துக் கொண்டு வேகமாக ஓடும். இவ்வோட்டத்தினை 'பாய் ஓட்டில் ஓடுதல்' என்பர்.

பாய்நாட்டி ஓடுதல் = மேல்குறிப்பு காண்க.

பாய்பறி மிதித்தல் = குழூஉக்குறி. கணவன் - மனைவியாக உடலுறவு கொள்ளுதல்

பாய்மர ஆப்பு = பாய்மரத்தை வள்ளத்தோடு இணைக்கும் சிறு மரத்துண்டு. Cleat

பாய்மர ஓரக்கயிறு = பாய்மரத்தில் உள்ள பாயின் அகல வாட்டத்தை விறைப்பாக்கிக் கட்டும் கயிறு. Bolt rope

பாய்மரக்கப்பி = பாய்மரத்தின் உச்சிக்குப் பாயை ஏற்ற வும் இறக்கவும் பயன்படும் கப்பி. Bollock

பாய்மரக்கயிறு = பாய் மரத்தின் உச்சிக்குப் பாயை ஏற்றவும் இறக்கவும் பயன்படும் கயிறு. Bolt rope

பாய்மரத்தடி = பாய்கட்டப் பயன்படும் தடி.

பாய்மரத்துவாரி = வள்ளம் அல்லது தோணியில் நடப்பட்டிருக்கும் பாய்மரத்தைத் தாங்கி நிற்கும் பலகை. பாய்மரம் அத்து வாரி வாரி - பலகை. அத்து-தைத்தல், இசைத்தல். பாய்மரம் குழிபோன்ற அமைப்பில் நிற்க, இதனை நெருக்கித் தைத்ததுபோல் இருபலகைகள் பக்கத்துக்கு ஒன்றாக வள்ளத்தின் குறுக்குவாட்டில் அமைந்திருக்கும். பாய் மரம் சாயாமல் நேராக நிற்க இவ்வாரி உதவுகிறது.

பாய்மர மேல் பகுதி = பாய்மரத்தின் உச்சி பாகம். Aloft

பாய்மரம் = வள்ளம் முதலியன காற்றின் வலிமையாலும் பரதவர் உடல் உழைப்பாலும் கடலில் இயங்குவன. கித்தான் போன்ற, வலுவான விரிந்தகன்ற பாய் மூது மோதும் காற்றின் வன்மையைப் பயன்படுத்திக் கடலூர்தியை இயக்குகின்றனர். இத்துணை இன்றியமையாததாகிய பாயைத் தாங்கும் பாய் மரம்.

பாய்மரவாரி = பார்க்க-பாய் மரத்துவாரி

பாரக்கலவா = மூன் வகை

பார் = 1. பாறை-பாரை எனும் சொற்களின் குறுக்கம் சிலவிடங்களில் 'கரை' எனும் பொருளும் தரும் சொல். தென் தமிழ்நாட்டில் சுந்தர பாண்டியன் பட்டினம் முதல் குமரி வரை 65 பார்கள் உள்ளன. (அ) வடக்கு அல்லது கூழக்கரைப் பிரிவு - பாம்பன்கரை முதல் வேம்பார் பெரிய பார் வரை-11 பார்கள்; (ஆ) மத்திய அல்லது தூத்துக்குடிப் பிரிவு - வைப்பார் பெரியபார் முதல் சுருக்கு ஒன்பதுபார் வரை-42 பார்கள்; (இ) தெற்கு அல்லது குமரிப் பிரிவு - மணப்பாடு பெரியபார் முதல் உவரி அந்தோணியார் கோவில் வள்ளவிளைபார் வரை-12 பார்கள் (Madras Fisheries Bulletin Vol. XVI) 2. 'பாறை-பாரை' எனும் சொல்லின் குறுக்கம், கல்குவியல். கல் மலை போன்றவற்றைக் குறிக்கும். பரி பாடல் (5), திருமுருகாற்றுப்படை (45), பாகவதம் (5, கருத்தமன். 50) ஆகிய நூல்களில் ஆளப்பட்ட சொல்; பரதவரிடையில் தினசரி பயன்படும் வழக்காற்றுச் சொல்; கடலில் வலை வீசும்போது பார்மூது வலைப்படாமல் பார்த்துக் கொள்வர். பாரில் வலை

மாட்டிக் கொண்டால் வலை கிழிந்து ஆயிரக்கணக்கான ரூபாய் இழப்பு ஏற்படும்.

பார் குண்டஞ்சன் பார் = Par Kundanjan Par

பார் தூண்டி (ல்) = கடற் பார்களுக்குச் சென்று மீன் பிடிக்கப் பயன்படுத்தும் தூண்டில்

பார் தோணி = கடற்பார் பக்கத்தில் சென்று மீன் பிடிக்கப் பயன்படுத்தும் தோணி

பார் மரம் = ஆழ்கடலில் பெரும்பாறைகள் மலை போல் இருக்கும். நைலான் வலையோடு பார் இருக்கும் பகுதிக்குச் சென்று பாரின் மேல் பகுதியிலோ அல்லது பக்க வாட்டிலோ வலையை மிகக் கவனத்துடன் இளக்கு வர். குறிப்பிட்ட நேரத்தில் பாரின் உட்பகுதியில் இருந்து மீன்கள் வெளியே வர அவை வலையில் அகப்பட்டுக் கொள்ளும். மீன்பாடு கணிசமாகக் கிடைக்கும். இத்தொழிலுக்குப் பயன்படும் மரம் (கட்டுமரம் முதலான கலம்) 'பார் மரம்' எனப்படும்.

பால்கெண்டை = மீன் வகை, Chanos Salmoneus

பால் சங்கு = சங்குவகை. மிகுந்த வெண்ணி றமுடைய சங்கு

பால் சுறா = மீன் வகை, (Small Shark) Carcharhinus la tica udus

பாவம் = பார்க்க-பாதம், பாகம். சங்கு குளிப்பு. முத்துக்குளிப்பில் மீனவர்களால் பயன்படுத்தப்படும் சொல். சங்குளி 14 பாவத்திலிருந்து 20 பாவம் வரையிலான ஆழத்தில் நடைபெறும் என்பர்.

பாளெடுத்தல் = இழைகளைப் பிரித்து நூல் ஆக்குதல்

பாளை = 1. தென்னை, பனை ஆகியவற்றின் பாளை. மீன்பிடிக்க உதவுவது. 2. இறப்பாக் கட்டைபோலப் பயன்படும் கருவி.

பாறை = 1. கற்பாறை. 2. மீன் வகை

பிச்சல்வாரி = வள்ளத்தில் கட்டப்பட்டிருக்கும் சிறிய பாய்மரத்தைத் தாங்கி நிற்கும் பலகை. இதற்கு ஆஞ்சான் 'வாரி எனும் பெயரும் உண்டு.

பித்தளை = தோணியின் உள்ளுறுப்பு

பிரஷ் = ' ஆங்கிலம். துடைப்பான் அல்லது தூரூகை. Brush

பிள்ளை = இந்துப் பரதவருள் ஒரு பிரிவினர்.

பிறால் = பார் என்னும் சொல்லுக்கு எதிர்ச் சொல், பார் பாறை, கரை. பிறால் -சிறுமண், மணல், சேறு ஆகியன வற்றின் கலவை. சங்கு நிலம், சங்குப் படுகை (J.H.)

பூலி = 'துவி'யின் மறுபெயர். காண்க – துவி

பூலிக்கணவா(ய்) = கணவா மீனின் வகை. கரு நிற மையைப் பீய்ச்சி அடித்து நீர்ப்பரப்பைக் கருப்பாக்கி மறைந்துவிடும் தந்திரமுள்ளது. இது தலைப் பக்கமும் ஓடும்; வால் பக்கமும் ஓடும். அதாவது முன்னோக்கியும் ஓடும். பின்னோக்கியும் ஓடும். இதில் சிறப்பு என்னவெனில் பின்னோக்கி வால் பக்கமாக மிக விரைந்து ஓடக்கூடிய இயல்புடையது இது.

பூலிக்காரன் = சுறாமீனின் மறுபெயர்; குழூஉக்குறி. பூலி (துவி) உடைய மீன் ஆதலால் பெற்ற பெயர் இது.

புசல் காத்து = புயல் காற்று எனும் சொற்களின் வழக்காற்று வடிவம். பொசக்காத்து எனவும் வழங்கப்படும் காற்று

புசல் மையம் = புயல் மையம். பெருங்காற்று மையம் கொண்டிருக்கும் இடம். Storm Centre

புடிகம்பு = தோணி அல்லது வள்ளத்தின் துணை உறுப்பு

புண்டுவிரிஞ்சான் = மீன் வகை. Dussumieria acutta; Dussumieria hasseleti

புண்டு விரிஞ்சான்பார் = Pundu Virinjan Par; Bank abounding Dussumieria accutta fish (J. H.)

புதுத்தண்ணிவிட்டு அலசுதல் = பாத்தியிலிருந்து உப்பு வாரிய பின்னர் பழைய நீரைப் பாத்தியிலிருந்து கழித்து வீட்டுப் புதுநீரால் சுத்தமாக அலசுதல்

புதுபார் = Puthu Par; Puthu-new; New Bank (J.H.)

புதைஞ்சிட்டுபடுது = மணலில் புதைந்திருந்த மீன் வலைப்பட்டு அகப்பட்டுக் கொள்ளுதல்

புயல் = கடுங்காற்று. Gale

புரோசினா = மீன் வகை

புலிச்சுறா = சுறா வகை. இந்தப் புலிச் சுறாமீன் ஒரே சமயத்தில் 60 குட்டிகளைப் போடும் இயல்பினது. இதில் சிறப்பு என்னவென்றால் இந்த 60 குட்டிகளும் உயிருடன் இருக்கும்

புழுக்குத் தட்டம் = வள்ளத்தில் கடல் தொழிலுக்காகச் செல் லும் பரதவர் ஓரிரு நாட்கள் நடுக்கடலில் தங்குவர். அங்கு வைத்துப் புழுங்குவதற்காக ஒரு மண் பாத்திரத்தை உடன் கொண்டு செல்வர். . சமைக்கவும் உணவு பரிமாறவும் இது பயன்படும். புழுங்கும் தட்டு. புழுக்குத் தட்டு. தட்டு - தட்டம். Casserole

புளிபூண்டுபார் = Puli Pundu Par; Puli-tamarind; Pundu-bush; Bank having a tamarind bush as land mark (J. H.)

புளுக்கை = முறையாக மணம் செய்யாத வெளிநாட்டார்க்கும் பரதவர்க்கும் பிறந்தவர்; வசவுச் சொல், தொழிலின்போது ஏசிக்கொள்ளப் பயன்படுத்தும் வார்த்தை .

புளோட் = ஆங்கிலம். வலையைக் கடலில் இறக்கியபின் வலைக்கு அடையாளமாக கடல்பரப்பில் மிதக்கும் மிதவை. ரப்பரால் ஆனது. மிதத்தல் காரணமாகப் பெற்ற பெயர். Float

புள்பா (ய்)ச்சல் = கடற் பரப்பின்மேல் மீனைக் கொத்தித் தின்பதற்காகப் பாயும் பறவைகளின் பாய்ச்சல்

புள்ளிக்கழி = தோணியின் குறுக்காகக் கட்டப்படும் கழி

புள்ளிக் கலவா = மீன் வகை. Epinephelus merra

புள்ளிக் கெண்டை = மீன் வகை. Barbus ticto

புள்ளிக் கௌடா = சங்கு வகை

புள்ளிப்பாரை = மீன் வகை. Caranx affinis

புள்ளையார் சங்கு = சங்குவகை. பிள்ளையார் (யானைமுகன்) போன்ற அமைப்பில் காணப்படும் சங்கு. பிள்ளையார் – புள்ளையார்

புள்ளை வாய்க்கால் = தொட்டானிலிருந்து பாத்திக்குத் தண்ணீர் வரும் கால்வாய் (உப்பள அமைப்பு : 1. தெப்பம்; 2. தொட்டான்; 3. பாத்தி)

புறாமுட்டைச் சங்கு = சங்கு வகை. புறாவின் முட்டையைப் போன்ற அளவும் அமைப்பும் உடைய சங்காதலால் எற்பட்ட பெயர்.

புன்னக்காயல் செல்தான் பார் = Punnaikayal Seltan Par, Pinne kayal (Anglice) Pinnacoil; the name of & large para va settlement on the Tinnevelly coast. (J.H.)

பூங்கரை = கடலில் மழைநீர் விழும்போது கடலின் உப்பு நீரும் நன்னீரும் கலப்பதால் உண்டாகும் ஒரு வகையான நுரை. இந்நுரையின் பெயர் பூங்கரை. ஆழ்கடல் மீன்கள் இந்நுரையின் சுவை விரும்பி கடல் மட்டத்திற்கு வந்து உண்ணும் வழக்கமுடையன.

பூதார் = வள்ளம், தோணி, லாஞ்சுகளில் சரக்கு வைக்கும் இடம்

பூரைப்படுதல் = கடலில் வலை இளக்கும் போதும் பற்றும் போதும் பல காரணங்களால் வலை கிழிந்துவிடும். பெருமீன்கள் வலையைக் கிழிக்கலாம் அல்லது பாரில் வலை சிக்கி அறுந்து போகலாம். இவ்வாறு வலை கிழிவதற்கு 'பூரைப்படுதல்' என்பர். 'வலைப் பொத்தல்' எனும் தொடரும் இதனைக் குறிப்பதே ஆகும். இந்தக் கிழிசல்களை அன்றன்றைக்குப் 'பொத்துகின்ற' பரதவர் பொறுப்பு மிக்கவர். ஒரு வாரம்

வரை இப்பூரைகளைப் பொத்தாமல் விட்டுவிட்டால் வலை பழையதாகிப் பயனற்றுப் போய்விடும்.

பெட்டி = கூடை

பெட்ரோல் போட் = ஆங்கிலச் சொற்கள். இது பெட்ரோலை எரிபொருளாகக் கொண்டு இயங்கும். Petrol boat

பெரியதலை செம்மண்தரைப்பார் = Periya Talai Semman Tharai Par; Bank lying near the great head (land) of red earth (J.H.)

பெரியபடகு = அளவில் பெரிய மரக்கலம். Vessel

பெரிய பாய் = தோணியில் பயன்படுத்துகிற மிகப்பெரிய பாய்

பெரியமலை புடித்தபார் = Periyamalai Piditha Par; Bank touching the great hill (J.H.)

பெரியவலை = வலைவகை ; வலைகளுள் இது பெரியது; இதன் மூலம் தொழில் செய்ய 20 அல்லது 30 பேர் தேவை; 2 மைல் நீளமுடையது; இளக்கிய வலையைப் பற்றி இழுக்க இரு புறங்களிலும் பெரியவர்களும் சிறியவர்களும் சேர்ந்திருப்பர்; வலைக்கண் 2 அடி அகலம் கொண்டது. நீண்ட கண்களை உடைய தாமம், 1 அங்குல அகலக் கண்களையுடைய மேலாவலை, சிறு கண்களையுடைய பை போன்ற மடிவலை ஆகியன இதனுடன் இணைந்திருக்கும்; ஒரு நாளைக்கு இவ்வலையைப் பயன்படுத்தி 2 அல்லது 3 முறை தொழில் செய்வர்; இதனை முதல் பாடு, இரண்டாம்பாடு, மூன்றாம்பாடு என்பர்.

பெரும்பை வலை = வலைவகை. பெரிய பை போன்ற அமைப்புடையது. Seem trawl

பெர்ணாந்து பார் = Fernando's bank; probably first found by a fisherman of this name ((J.H.)

பெர்த் = ஆங்கிலம், நங்கூரம் பாய்ச்சி கலங்கள் சிற்குமிடம். Berth

பெறுங்குவல = பிறங்கு வலை- பெறங்குவலை, வலைவகை

பேத்தை = மீன் வகை.

பேந்தவலை = வலைவகை

பே(ய்)க் கணவா = கணவா மீனின் வகை. வலைப்பட்டு கலத்திற்கு வந்தபோதும் சாகாது. துண்டு தடியால் அடித்தால் தான் சாகும்.

பேய்ச்சாள = மீன் வகை . பேய்சாளை. Clupea brachyo soma

பேரல் = ஆங்கிலம், பிப்பாய், Barrel

பைக் வலை = வலைவகை. பைக் - ஆங்கிலச் சொல், இறக்கைகளைக் கொண்ட வளையம் போன்ற வலைப் பொறி. Fyke net

பைட்டி - = வலைக்கண்கள் 'தெளிவாக இல்லாமல் (காண்க - தெளிவு) இறுக்கமாக இருத்தல்

பைண்டா வலை = வலை வகை

பைவலை = வலைவகை. பைபோன்ற அமைப் புடையது. Dip net

பொசக் காத்து = பார்க்க - புயல் காற்று

பொத்தல் = வலை ஓட்டை

பொடிமணி = சிறிய உப்பு

பொடிவலை = வலை வகை

பொம்மீன் = மீன் வகை. Barbus tor

பொரிவிலாங்கு = மீன் வகை. Bengalensis

பொருவா = மீன் வகை. Anchoviella bataviensis. Anchoviella heteroloba, Anchoviella baganensis, Anchoviella Zollingeri, Anchoviella Commersonii, Anchoviella Indica, Anchoviella tri

பொற பிடிப்பவர் = வீசுவலை அல்லது வீச்சுவலை வீசும் போது முன்னோக்கி ஓடிக் கொண்டிருக்கும் தோணியைப் பின் பக்கமாகத் தாவிப் பிடிப்பவர் (புறம் பிடிப்பவர்) 'பொற பிடிப்பவர்' எனப்படுவார்.

போத்தல் = ஒலி அமைப்பால் தமிழ்ப்படுத்தப்பட்ட ஆங்கிலச் சொல். பெருங்குப்பி. Bottle

போயா = ஆங்கிலம். அலுமினியத்தாலான உள்ளீடற்ற, வெற்றிடமான மிதக்கும் உருண்டை. வலையுடன் பிணைக்கப்பட்டது. கடலில் இளக்கப்பட்ட வலை மிதப்பதற்கு அடையாளமாக இது பயன்படுகிறது. Buoy; a floating object

போயாக்கட்டை = வலையின் மேற்புறம் கட்டப்பட்டிருக்கும் மிதப்புக் கட்டை. போயா- ஆங்கிலச் சொல்

போரைறால் = இறால் வகை

போலி மீன் இரை = தூண்டில் மீன் பிடிப்பவர் தூண்டில் கொக்கியில் உண்மையான சிறு மீனையோ அல்லது மண் புழுவையோ குத்தி கடலில் வீசுவர். ஆனால் இலங்கையில் பிளாஸ்டிக் மீனை தூண்டில் கொக்கியில் இணைத்து பெரு மீன் பிடிப்பது வழக்கம். இலங்கைக்கும் செந்தமிழ் நாட்டுக் கடற்கரைக்கும் நேரடித் தொடர்பு உண்டாதலால் அவ்வழக்கம் இங்கும் பரவி உள்ளது. Jig

மச்சக்கெண்டை = மீன் வகை. Barbus filamentosus

மச்சம் = மீன்

மச்சவாள = - மீன் வகை

மச்சான் பங்கு - = உறவுச் சடங்கு. எச்சமயத்தைச் சார்ந்த பரதவராயிருந்தாலும் கடற்தொழில் மேற்கொண்டு கலத்தில் திருச்செந்தூர்க் கோயிலைக் கடந்து செல்லும்போது மறக்காமல் தேங்காய் உடைத்து முருகனுக்கு வழிபாடு செய்வர். தெய்வயானை பரதவர் குலப் பெண்ணாதலால் முருகன் மச்சான் முறை. 'எது எப்படி இருந்தாலும் மச்சானுக்குரிய பங்கைச் செலுத்தி விடுவோம்' என்பர் பரதவர்.

மச்சுவா = ஆபத்துக்காலங்களில் பயன்படுத்திக் கொள்வதற்காகத் தோணியில் வைத்திருக்கும் சிறு படகு

மச்சுவாடா = பெரிய தோணி; 25 அடி அகலம் 110 அடி நீளம் கொண்டது; 3 பெரிய பாய் மரங்களும் உடையது. காற்றின் வேகம் குறையக் குறைய பாயின் எண்ணிக்கை மிகும்; காற்றின் வேகம் கூடக்கூட பாயின் எண்ணிக்கை குறையும். சரக்கு ஏற்றிப் பறிக்க இப் பெருந்தோணி பயன்படுத்தப்படுகிறது.

மடை = கடலில் சேறாக உள்ள பகுதி

மடக்கு = பிளாஸ்டிக் நூல்

மடக்கு மண்டா = மீன்பிடி கருவி

மடக்கு மிதி = அளத் தயாரிப்பில் அடுக்கு மிதிக்குப் பின்னால் கால் தடங்களை அழிப்பதற்காகச் செய்யும் மிதிப்பு

மிதிப்பு மடங்குக் கட்டல் = வலையை அளவாகக் கட்டுதல்

துடுப்பு மடவை = மீன் வகை

மடவை சுறா = மீன் வகை. Carcharhinus Sorrah

மடி எடுத்தல் = வலையில் அகப்பட்ட மீன்களை மடியிலிருந்து எடுத்தல்

மடிகட்டல் = கடற்கரைக்கு வந்துவிட்ட பெருவலையின் வாயை மீன்கள் ஓடாதிருக்கும்படிக் கட்டுதல்

மடிகட்டை = பெரிய வளையில் உள்ள மடியின் வாயை அகற்றிப் பிடிக்கக் கட்டப் பட்டிருக்கும் கட்டை

மடிகம்பு = வலைக்கம்பு

மடிக்கயிறு = பரதவர் பயன்படுத்தும் நீண்ட கயிறு. Cod en rop

மடிகாரன் = நாட்டுப் படகில் தொழில் செய்பவன்

மடிதப்பல் = மடி (வலையின் ஓர் உறுப்பு) யை அலசுதல்

மடி பெரைதல் = மடியின் புதிய சாத்து(வலை)களை இணைத்தல்

மடிவலை = வலை வகை. Boat Seine; Bag net

மட்டப்பாரை = மீன் வகை. Carangoides malar baricus

மட்டப்பிரி = வள்ளத்தின் உறுப்பு

மட்டி = 1. கிளிஞ்சல் வகை. Clam. 2. மீன் வகை. Meretrix

மணப்பாடு பத்தூர் = Manappadu Pathoor; Manappadu 10 fathom bank (J.H.)

மணப்பாடு பெரியபார் = Manappadu; name of a promontory. Large bank of Manappadu (J.H.)

மணல்திட்டு = கடலுள் காணலாகும் சிறுசிறு திட்டுகள்

மணல்மேடு = ஆற்றுவாய்ப்பக்கம் மேடாகக் குவிந்திருக்கும் மணல் குவியல்

மனக்கட்டை = வலை மிதப்பதற்காக மேலே கட்டப்படும் மரக்கட்டைத் துண்டுகள். பெரும்பாலும் எருக்கிலைத் தண்டுகள். (தற்காலத்தில் அலுமினியத்தாலான போயாவும் ரப்பராலான புளோட்டும் மரக்கட்டைத் துண்டுகளுக்குப் பதிலாகப் பயன்படுத்தப்படுகின்றன.)

மணக்கால் = வலையின் அடிப்பகுதி நீரில் அமிழ்வதற்காகக் கோக்கப்படும் சுடப்பட்ட மண் உருண்டை

மணிவலை = வலைவகை. ஒருவலை Cast net

மண்டல் வலை = வலைவகை. தடித்த நைலான் நூலினால் செய்யப்படுவது. இவ்வலையின் சிறப்புத் தன்மை-மிதப்புக் கட்டைகள் சிறியனவாகவும் கீங்காக்கற்கள் பெரியனவாதவும் இருப்பதாகும். வலைக்கண் 5 அங்குலம் அளவினது; வலையின் நீளம் 400 அல்லது 500 அடி; மிதப்புக் கட்டை ,

கூங்காக்கல் அமைப்புகளால் இவ்வலை கடலின் கீழ்ப்பகுதி வரை சென்று வேலி போல அமைந்திருக்கும்.

மண்டா = திமிங்கலம் போன்றவற்றைப் பிடிப்பதற்காகக் கையால் வீசி எறியப்படும் கொக்கியுடன் கூடிய நீண்ட கயிறு. Harpoon

மண்டால் = இரட்டைக் கருவீட்டி. பன்றி முதலானவற்றைக் குத்த உதவும் ஈட்டிவகை. எறியுளி. இரவுக் காலங்களில் நல்ல இருட்டில் மண்டா வேட்டைக்குச் செல்வர். கட்டுமரம் அல்லது சிறிய தோணியின் முன் உட்கார்ந்து கொண்டு முன் பக்கமாகவே தோணியைத் தள்ளிச் செல்வர். பின்பகுதியில் ஒருவர் மண்டாவுடன் விழிப்போடு காத்திருப்பார். கலத்தின் முன்பகுதியில் இணைக்கப்பட்ட முறம் போன்ற ஒன்று தண்ணீரில் மிதந்து வர இதனை இரை என்று கருதிய திருக்கைமீன் அதன் மீது பாய உடனே எறியுளியால் எறிந்து மீனைக் கைப்பற்றுவர்.

மண்டா = திருக்கைமீன் வேட்டைக்குப் பயன்படும் கருவி. 'மண்டு' எனும் சொல்லடியாகப் பிறந்தது. மண்டு - உறுதியாகப் பிடித்தல், செறிவு என்பன பொருள். இக்கருவி மீனை உறுதியாகப் பற்றும் தன்மையது.

மண்டாடி = வள்ளத்தை ஓட்டுபவர். வள்ள இயக்குநர்

மண்டுக்கி = முனையில் கொக்கிபோல் வளைந்த இரும்பாலான கருவி. இதன் அமைப்பானது ஒன்றில் எளிதில் இறங்கிப் பதியும் படியாகவும் வெளியில் எடுத்தால் எளிதில் வெளிவராததாகவும் இருக்கும். மீன் வேட்டைக்குப் பயன்படும் சாதனம்

மண்டைக் கெளிறு = மீன் வகை. Arius thalassinus

மதவலை = வலைவகை

மதனா = மீன் வகை

மத்தகம் = காற்றோட்டமற்ற இறுக்கமான சூழ்நிலை

மத்த வைத்தல் = அலையோடு அலையாக விளையாடும் பரதவச் சிறுவர்களின் கடல் விளையாட்டு

மத்தை = கடல் அலை

மந்தி புரளுதல் = காற்று வீசிக்கொண்டிருக்கும் திசையில் கடல் மட்டத்திலிருந்து தென்னை மர உயரத்திற்கு ஏதோ ஒன்று இருகை அகல அளவில் தோன்றி மறையும். இது இரு வண்ணங்களிலோ அல்லது பல வண்ணங்களிலோ காட்சி தரும். இதற்கு மந்திபுரளுதல் என்பது பெயர். இது தோன்றிய சில மணிகளுக்குள்ளாக பெரும் சுழற்காற்று உருவாகும். ஆகவே பரதவர் இதனை அபாய எச்சரிக்கையாகக் கருதி விரைந்து கரைக்குத் திரும்புவர். பொதுவாக இது கோடைக்காலங்களில் காணப்படும். 'கோடைப் புயலுக்கு முன் தோன்றும் அறிகுறி இது.

மப்பு = மேகம்

மப்பு கட்டி இருத்தல் = மேகந் திரண்டு இருத்தல்.

மப்பு மேகம். = மழை வருவதற்கு முந்தைய நிலை

மயறி = மீன் வகை

மயில உப்பு = வெள்ளை நிறம் குறைந்த, அழுக்கு நிறமான உப்பு

மரக்கலம் = கப்பல், தோணி . மரத்தால் பெருமீனின் உருப்போல் கடலில் பயணம் செய்ய உருவாக்கப்பட்ட மிதவை. இதன் உறுப்புகள் துடுப்பு, பாய் மரம், கயிறு ஆகியன. Craft

மரக்கலப் பாய் = கப்பல் பாய்

மரக்காயர் = இவர்கள் தமிழ் பேசும் மகமதியர். ஸங்கர ஜாதியார். வர்த்தகர். லப்பைகளின், வேறு பட்டவர்கள். இந்தப் பெயர் அரபி பாஷையில் 'மரகாட்' (இதன் பொருள் படகு). இவர்கள் படகோட்டிகள் இவர்கள் குற்றவாளிகளாக அரேபியாவிலிருந்து துரத்தப்பட்டபோது தமிழறியாத இவர்களை நீங்கள் யாரெனக் கேட்டதற்குத் தங்கள் படகைக்காட்டி ‘மரகாப்' 'என்றனர். அதனால் இவர்கள் மரக்காயர் எனப்பட்டனர் (தர்ஸ்டன்). மரக்கலத்துக்கு உரிமையுள்ளவர்கள் மரக்கலராயர்கள். இது மரக்காயர் என மாறிற்று. (சோமலெ'). கி. பி. 14 ஆம் நூற்றாண்டு முதலே தமிழகத்ல் முகமதியர்களின் செல்வாக்குப் பரவலாயிற்று. இவர் தம் பெயரில் அமைந்த பல பட்டினங்கள் கிழக்குக் கடற்கரையில் உள்ளன. மீன், உலர் மீன் வர்த்தகத்தில் பெரும்பங்கு வகிப்பவர்கள். இராமநாதபுரம்

மாவட்டத்துக் குளியர்களுள் முகமதியர்களே பெரும்பான்மையானவர்களாய் இன்றும் இருக்கின்றனர்.

மரக்கோலா = மீன் வகை. Belone Chorum; Belona melo nostigma

மரப்படகு = இராமநாதபுரம் மாவட்டத்தில் காணப்படும் ஒருவகைப் படகு

மரமடித்தல் = உழவுக்குப் பின்னர் அளத்தைச் சமப்படுத்துவதற்காகக் கனமான மரத்தடியால் அடித்தல்.

மரம் = மரத்தாலாகிய கட்டுமரத்தை உணர்த்தும் சொல். ஆகு பெயர். Craft.

மரம் அணைத்தல் = கட்டு மரத்தடிகளைச் சேர்த்தணைத்துக் கட்டுதல்; தொழிலுக்குச் செல்லும் முன்பாகச் செய்யும் செயல்.

மரம் கட்டல் = மரம் அணைத்தல் என்பதும் இதுவும் ஒன்றே. மேற்குறிப்பு காண்க.

மரம் காவல் = 1. முன்னாளில் கரையில் நிற்கும் கட்டுமரம் முதலான தலங்களும் வலை முதலான பொருள்களும் களவு போதல் இல்லை. இந்நாளில் வலை முதலான துணைப் பொருள்கள் காணாமல் போவதும் வள்ளம் முதலானவை இல்லாமல் போவதும் அரிதாக நடைபெறுகின்றன. ஆகவே, அவரவர் பொருள்களைக் காத்துக் கொள்வது அவரவர் பொறுப்பாகிறது. களவு போகாமல் காத்தல் மரம் காவல் எனப்படும். 2. மரம் காவுதல் (கட்டு மரத்தடி களைத் தோளில் தூக்கிச் செல்லுதல்) என்பதன் திரிபு

மலட்டுத் தண்ணீர் = தெளிந்த கடல் நீர்; நீர் தெளிவாக இருப்பின் மீன்பாடு மிகக் குறைவாக இருக்கும். ஆகவே இது மலட்டுத் தண்ணீர் எனப்படுகிறது.

மலையாள தச்சன் = மணப்பாட்டில் உள்ள மீனவர்களுக்குப் படகு செய்து கொடுப்போர் ('சோமலெ')

மழுக்கி விடுதல் = தேச்சி விடுதல்

மறிஞ்சிப்பாரை = மீன் வகை. Caranx djedaba

மனுவலை = வலைவகை. இவ்வலை நண்டு பிடிக்கப் பயன்படுகிறது. இதனை இழுப்புவலை என்றும் கூறுவர். இவ்வலையின் கண்ணானது தடச்சி எனும் நூலால் 2 அங்குல அளவில் ஆக்கப்பட்டிருக்கும். வலையின் வாய்ப் பகுதியில் இரு பெரிய தடிகள் இணைக்கப்பட்டிருக்கும். பக்கத்திற்கு ஒருவராக இருந்து இவ்வலையை இழுப்பர். வலை இளக்கிய பின்பு ஒரு மணி நேரம் கழித்து வலை கிளப்புவர்.

மண்ணாடி = மண்டாடி

மாங்கு' = 1. பாத்திகளில் படியும் தூள் ஜிப்ஸம். 2. மீன் வகை

மாசி = மேகம்

மாட்டு வலை = வலைவகை. பெரு வலையின் ஒரு உறுப்பாகப் பிணைக்கப்பட்டிருக்கும் வலை

மாதா பலகை = வள்ளத்தின் உறுப்பு. வள்ளத்தின் சுற்றுப்புற மரத்தடி

மாதாபலகை முதல் சுத்து = முதலாம் சுத்து மாதாபலகை

மாதாபலகை இரண்டாம் சுத்து = இரண்டாம் சுத்து மாதா பலகை

மாப்பு = மீன் கூட்டம். மீன் திரள். கரை யோர மீன்கள் புயல் வருவதன் முன்னர், வரும் புயலை உணர்ந்து கொண்டு ஆழ்கடலான சேற்றுக்கடல் பகுதிக்குத் தப்பி ஓடுவது போல விரைந்து ஓடும். இப்படிச் செல்லுவதைக் கண்டவுடன் பரதவர் புயல் வரப்போவதை அறிந்து கொள்வர்.

மாப்பு கட்டிப்படல் = கூட்டங் கூட்டமாக மீன் அகப்படல்

மாப்பு கல்லுது - = கடல் நீர் மட்டத்திற்கு மேல் மீன் கூட்டங் கூட்டமாகச் செல்லுதல்

மாப்பு சாய்தல் = கூட்டமாக மீன்கள் வருதல்

மாப்பு இறால் = கூட்டமாக வரும் (இ)றால்

மால் = வலை, வலை இணைப்பு. Network; Webbing

மானம் கீழ்மாறு வாங்குகல் = இருளகன்று வெளிச்சம் புலப்படும் அதிகாலைப் பொழுது

மாஸ்க் = ஆங்கிலம். சங்கு, முத்துக் குளிப்பவர்கள் கண் காப்பிற்காக அணியும் முகமூடி. பார்க்க-கண்ணாடி. Mask

மிதவை = மிதக்கும் பொருள். Float, Buoy

மிதவை வலை = வலைவகை. Drift net

மிலாறு = கோலாமீன் பிடிப்புக்காகக் கொண்டு செல்லும் புங்கந்தழை, துளசிச் செடி, கொள்ளுச் செடி இன்ன பிறவற்றை மிலாறு என்பர்.

மீன் உதறல் = வலைப்பட்ட மீன் உதறிக்கொண்டு தப்பிச் செல்லுதல்

மீன் எண்ணெய் = மீனின் கொழுப்பிலிருந்து தயாரிக்கப்படும் எண்ணெய்

மீன் ஏலம் = மீனை உயர்ந்த பட்சத் தொகைக்கு ஏலம் கூறுதல்

மீன் கழிக்கிறது = தரமில்லாத மீன்களை அப்புறப் படுத்துதல்

மீன் குஞ்சு = சின்னஞ்சிறு மீன் குஞ்சுகள், Fish seed

மீன் கூட்டம் = மீன் திரட்சி. Congregation of fish

மீன் சினை = மீன் முட்டை . Fish roe

மீன் செதிள் = மீனின் புறக் கவசம். வெண்தோடு, பொருக்கு. Argentine

மீன் பண்ணை = நவீன முறையில் மீன்களைப் பெருக்கும் மீன் உற்பத்தி நிலையம். Fish farm'

மீன்பாடு = மீன்பிடிப்பு. படு-பாடு. முதல் நிலை நீண்ட தொழிற் பெயர்

மீன் பிசினி = மீன் கொழுப்பிலிருந்து செய்யப்படும் பொருள். Fish Glue

மீன்பிடி கருவி = மீன்பிடிக்கப் பயன்படும் கருவி

மீன்பிடி படகு = வள்ளம் முதலியன. Yawl

மீன் பேக்கறது = வலையிலிருந்து மீனைப் பெயர்த்து எடுத்தல்

மீன் பொறுக்குதல் = வெயிலில் உலர்ந்த மீனை இனம், அளவு வாரியாகத் தனித்தனியாகப் பொறுக்கிப் பிரித்தல்

மீன்மிசை = மீனின் வாய்ப்புறம் நீட்டிக் கொண்டிருக்கும் இழைகள்

மீன்முட்டை = மீன் சினை. Fish egg

மீன் வலையர் = மீன் பிடிக்கும் வலையர். வலைஞர். பரதர், பரதவர், பரவர், பரவா எனும் பெயர்களால் அழைக்கப் படுபவர்

மீன் வால் = மீன் திரும்புவதற்குப் பயன்படும் உறுப்பு Caudal fin

முகப்பு = கடல்கலத்தின் முன்புறம், அமரத்தின் எதிர்ப் புறம். Bow

முக்குவர் = பரதவருள் ஒரு பிரிவினர்

முசல்தீவு பார் = Musal Tivu Par; Bank lying near Hare island; Musal-Hare; Tivu-island (J.R.)

முடிச்சு = வலை முடிச்சு. Knot

முடிச்சு நெகிழ்த்தல் = வலையிளக்கும் போது முடிச்சு நெகிழ்த்துதல், Knot slippage

முடிச்சு வலை = வலை வகை. முடிச்சு முடிச்சாக உள்ள வலை . Knot net

முடிறு = மீன் வகை. Gizzard Shad; Anodontostoma Chacunda

முட்டி = மீன் வகை. சம்மட்டி . சம்மட்டி போன்ற தோற்றமுடைய மீன்

முண்டக் கண் = மீன் வகை. Apogon aureus (Golden cardinal fish) Apogon septemstriatus (Seven banden Cardinal fish)

முண்டக்கண் பாரை = மீன் வகை. Caranx crumenopthallum

முண்டன் சுறா = மீன் வகை. Gangetic Shark

முதலையார் = முதலை. வன்மீன். வன்மீன் பிடிப்பவர் முதலையார்

முதல்பாடு = முதல்முறையாக வலை இளக்கி மீன் பிடித்தல்

முத்து = முத்துக்கள் தலசம், சலசம் என இருவகை. தலசம் பூமியில் உள்ள பொருள்களில் உண்டாவன. சலசம் நீரில் உள்ள பொருள்களில் பிறப்பன . (இக்கோட்பாடும் இதன் விளக்கமும் நம்பிக்கை அடிப்படையில் எழுந்தனவாகலாம் -ஆய்வாளர்) சிப்பியின் உட்புறமுள்ள சதைப்புறத்தில் உறுத்தலான பொருள் (மணல் துகள் போன்றவை) படும்போது அப்பொருளைச் சுற்றி அந்த உயிரினம் ஒரு திரவத்தைச் சுரக்கிறது. திரவம் அந்த உறுத்தற் பொருளைச் சுற்றிச் சூழ்ந்துக் கெட்டிப் படுகிறது. இதுவே முத்தெனப் படுகிறது . Pearl

முத்துக்குளி = கடலில் மூழ்கி முத்துக்குளித்தல்

முத்துக்குளித்தல் = பார்க்க - முத்துக்குளி. கடலில் முத்தெடுக்க மூழ்குதல் . இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டக் கடற்கரைப் பகுதிகளிலும் இலங்கையின் வடக்கு, வடமேற்கு, மேற்கு கடற்கரைப் பகுதிகளிலும் நெடுங்காலமாக இத்தொழில் நடைபெற்று வருகிறது.

முத்துக் குளிப்பவர் = முத்துக் குளிக்கும் தொழில் செய்யும் பரதவர். Pearl diver

முத்துக் குளியாள் = பார்க்க : முத்துக் குளிப்பவர். Pearl diver

முத்துச் சலாபம் = முத்துக் குளிப்பதற்குரிய கூலி

முத்துச்சிப்பி = முத்து உண்டாகும் சிப்பிகள் இரண்டின் ஒட்டு . Pearl oyster, Pinctada Vulgaris; bi-valve water animal

முரடன் சுறா = மீன் வகை. Carcharhinus gange; ticus; Gangetic shark

முழுக்காளிகள் = வளர்ந்து கனத்த முத்துக் கிளிஞ்சல்கள் கடல் மட்டத்திற்குக் கீழ்ச் சென்று பூமியுள் புதைந்து விடும். குளியர் அல்லது குளியோடிகள் இவற்றை எடுக்க முடியாது. 15 பாகம் ஆழம்வரை முழுக்காளிகள் முத்துக் குளித்து இவற்றை எடுப்பர்

முள்ளிச்சங்கு = சங்கு வகை. சங்கின் புறப்பரப்பு முழுவதும் கூரான முட்கள் போன்ற அமைப்புடைய சங்கு

முள்ளுச் சுறா = சுறாமீன் வகை

முள்ளுப் பலகை = கொத்துப் பலகையின் மறுபெயர். உப்பளத்தில் பயன்படும் கருவி

முள்ளுவாளை = மீன் வகை, Chirocentrus dorab

மூக்குமீன் = சுறாமீன் வகை. இதில் புள்ளிச்சுறா, சுத்தித் தலைச்சுறா, வாள்பல் சுறா எனப் பலவகைகள் உள்ளன. Sword fish

மூசாப்பு = காற்றற்ற மந்தமான நிலை. புயலுக்கு முன் தோன்றும் ஓர் அறிகுறி

மூச்சுக்குப்பி = முத்துக் குளியாளும் சங்கு குளியாளும் கடலில் மூழ்க நவீன முறையில் கையாளும் சுவாசக் காற்றுக் குப்பி. Aspirator bottle

மூச்சுப்பிடித்தல் = குளியல் தொழிலின் போது மூச்சடக்கல்

மூடந்தட்டுதல் = அளப் பாத்திகளில் தேங்கியிருக்கும் உப்புநீர்மீது படியும் காற்றுக் குறைவினால் உண்டாகும் பாசி போன்ற ஆடையை வாரு பலகையினால் கலைத்து அப்புறப்படுத்துதல்

மூடம் = முகத்தலளவு. எட்டு மரக்கால் கொண்டது. சிப்பியை அளக்கப் பயன்படுவது

முடம் = நீராடை

மூப்பன் = நகரப் பரதவன். பரதவர் தலைவன், மூப்பன். சில சாதியாரின் பட்டப் பெயர். மூப்பர்-கிருத்துவ மதத்தலைவருள் ஒருவகையார்

மூளான் = மறுபெயர் சொறி. மீன் இனத்துள் ஒன்று. கடுமையான விஷமுடையது. கடற்பரப்பில் பஞ்சு மிதப்பது போல மிதக்கும். "சிவன் பை' என்றும் இதனை அழைப்பர் (சிவனுக்கும் மூளானுக்கும் தொடர்பு நஞ்சால் ஏற்பட்டிருக்கலாம்). இதனுடைய விஷத்தின் அளவுக்கு ஒரு தகவல் சொல்வார்கள். ஒரு பித்தளைச் செம்பில் தண்ணீர் விட்டு அதில் மூளானைப் போட்டு அச்செம்பை தலையில் வைத்துக் கொண்டால் செம்பையும் ஊடுருவித் தலை வழியாக விஷம் இறங்கும் என்பர். இது உடல் மீது பட்டு விட்டால் 3 நாட்களுக்குத் துடிப்பர். மூளான் சொறிகளின் அரசன் என்பர். சொறிகளின் வகைகளாவன : செஞ்சொறி, முட்ட சொறி, வவ்வால் சொறி, கொதவள சொறி, பெரப்பாங் கண்ணி சொறி, கடுக்காச் சொறி, எட்டுக்கால் சொறி, இராணிமுடி சொறி, அகல சொறி, மடவா சொறி, பாளத்தான் சொறி, வட்டுச்சொறி, மணிச் சொறி, தொளுத்தைச் சொறி ஆகியன.

மூன்றாம் பாடு = மூன்றாம் முறை வலை இளக்கி மீன் பிடித்தல்

மெதப்பு வலை = வலை வகை. நீரின் மேல் மிதந்து கொண்டிருக்கும் ஒருவகை வலை, மிதப்பு வலை.

மெதுவக் கட்டை = மிதவைக் கட்டை. நீரில் வலைக்கு அடையாளமாக மிதக்கும் நுரைக்கட்டை.

மெனக்கிநாள் = நாயராட்சை, ஞாயிற்றுக்கிழமை. காண்க – நாயராட்சை

மேங்கா = வலையின் மேற்பகுதி

மேங்கா பற்றல் = மேல் வலையைப் பற்றுதல்

மேசைக்காரா = மேல் நாட்டுக் கிருத்துவப் பாதிரிமாரோடு மேசை போட்டமர்ந்து பேசுமளவுக்கு வாழ்க்கைத் தரத்தில் உயர்ந்தவர்கள்,

மேமறி = மேற்குத் திசையிலிருந்து கிழக்குத் திசை நோக்கி ஓடும் நீரோட்டம்

மேமறி வெள்ளம் = மேமறி. முற்குறிப்புக் காண்க.0

மேல ஒன்பதுபார் = Melaombadu Par; Mela-further or distant, outer; further or outer 9 fathoms bank (J.H.)

மேலா மரம் = ஆழ்கடலுக்கு மீன்பிடிக்கச் செல்லும் கட்டுமரம். திருக்கைவலை, பாச்சுவலை ஆகியன இம்மரத்தில் பயன்படுத்தப்படுகின்றன. இம்மரத்தில் பெருவலைகளே தொழில் செய்ய பயன்படுகின்றன.

மேல் காத்து = மேற்கிலிருந்து வீசும் காற்று.

மோப்புக்கட்டை = மிதப்புக்கட்டை, மேல் புறக்கட்டை, வலைமீது மிதக்கும் மிதவை.

மையிருட்டு , = வெளிச்சம் அறவேயில்லாத கருக்கிருட்டு

மொட்டச்சி = மீன் வகை . Atherina forskallii

மொட்டிகோலாக் கெண்டை = மீன் வகை. Atherina forskallil மொரல்

மொரல் = மீன் வகை

மோட்டார்போட் = ஆங்கிலச் சொற்கள். இயந்திரப் படகு. Motor boat.

மோர்சிங் பாரை = மீன் வகை. Caranx djedaba

யானைமுள்ளிச் சங்கு = சங்குவகை. பெரிய யானை போன்ற அமைப்பு உடையதும், வெளிப்புறம் முட்கள் நிறைந்தது மான சங்கு.

ரங்கூன்வல = வலைவகை. பிளாஸ்டிக் இரைமீன் பயன்படுத்தும் வழக்கம் இலங்கையிலிருந்து வந்தது போல இந்த வலையைப் பயன்படுத்தும் வழக்கம் ரங்கூனிலிருந்து வந்ததாயிருக்கலாம். Rangoon net

ராணி கம்பி = மீன் தூண்டிலுக்குப் பயன்படும் கம்பி. கொழும்பு நகரில் இக்கம்பி விக்டோரியா ராணியின் ஞாபகார்த்தமாக ராணிகம்பி என வழங்கப்பட்டு தூத்துக்குடிப் பரதவரிடையிலும் அப்பெயர் பரவி விட்டது.

ராகத்தா = வசதி. 'கார்த்திகை மாசம் சங்குளிக்கு ரொம்பவும் ராகத்தாவா இரிக்கும்'-மீனவர் பேச்சு

ராவிவிடறது = தேச்சி விடுதல், மழுக்கி விடுதல். உப்பளத்தில் பயன்படுத்தும் சொல்

ராஜாவுக்குச்சிப்பிசோதிச்சபார் = சோதித்த- சோதிச்ச: Rajavukku Sippi Sothicha Par; Rajavukku-for or to a Raja; Sothicha--searched or examined; Sippi-Oysters; Bank searched for Oysters for the Raja (J. H.)

ரெண்டாம் பாய் = இரண்டாவது உச்சிப்பாய். படகின் தலைப் பாய்க்கு மேலுள்ள சிறுபாய். Topgallant

ரெண்டாம் பத்துவளி = சங்கு குளிக்கும் பருவம் அல்லாதபோது அத்தொழில் மேற்கொண்டார் வாழ்வதற்கு முதலாளியர் கொஞ்சம் பணம் கடனாக முன்பணம்போல் தருவர். பருவம் வந்ததும் சங்கு குளித்துத் தொழில் செய்து கடனை அடைத்தல் வேண்டும். பொதுவாக ஒரு முதலாளியிடம் பதிவாகத் தொழில் செய்வோர் வேறொரு முதலாளியுடன் தொடர்பு கொள்ளார். சிலர் ஒரு முதலாளியிடம் வேலை பார்த்துக்கொண்டே அவர்க்குத் தெரியாமல் இன்னொரு முதலாளியிடம் கணக்கு வைத்துக் கொள்ளுதலும் உண்டு. இதற்கு இரண்டாம் பற்றுவார் என்று பெயர். முதல் முதலாளிக்குத் தெரியாமல் தரம் மிகுந்த உயர்ரகச் சங்குகளை இரண்டாமவருக்கு விற்றுவிடுதலும் உண்டு

ரெண்டாம் பாடு = இரண்டாம் முறையாக வலை இளக்கி மீன் பிடித்தல்

ரோமியோ = மீன் வகை

ரோஸ்வாயன் = சங்கு வகை. ரோஸ்--ஒரு வண்ணம். ரோஸ் வண்ணமுடைய சங்கு

லம்பராவலை = லம்பரா- ஆங்கிலச் சொல். வலைவகை. மீன்களைச் சுற்றி வளைக்கும் வலை. Lampara

லஸ்கர் = தோணியில் தொழில் செய்வோர்.

லாஞ்சு = ஆங்கிலம். இயந்திரப்படகு. Launch

லெப்போ = வள்ளத்தின் உள்ளூறுப்பு

லைட்டர் = ஆங்கிலம். சிறுபடகு. மரத்தாலும் தகட்டாலும் செய்யப்படுபவை. துறைமுகம் இருக்குமிடத்தில் ஆழம் குறைவாயிருந்தால் கப்பல்கள் கரைக்கருகில் வரமுடியாது. கடலிலேயே சில கிலோமீட்டர்களுக்கு அப்பால் இருக்கும். ஆழ்கடலில் நிற்கும் கப்பல்களிலிருந்து லைட்டர்கள் வழியாக 200 டன் நிறையுள்ள பொருள்களை ஒவ்வொரு முறையும் ஏற்றி இறக்குவர். லைட்டர்கள் கரைக்கும் கப்பலுக்கும் இடையில் சென்று வருவன. Lighter

லைன் = ஆங்கிலம். இழை, சரடு, நூல். Line

லோக்கல் உப்பு = லோக்கல் - ஆங்கிலம். பழைய முறையில் தயாரிக்கப்படும் உப்பு. வெளியே திடமாகவும் உள்ளே திரவமாகவும் இருக்கும் உப்பு. இதனை இயந்திரத்தில் அரைத்து பவுடர் உப்பு தயாரிக்க முடியாது. Local salt

வங்கராங்கரை = கடற்கரையோர நெய்தல் நிலத் தாவரம்

வங்கு = மரக்கலத் தறி

வங்கடை = மீன் வகை

வங்கடைபாரை = மீன் வகை. Caranx Crumeno phthalmus

வஞ்சிரம் = வன் சிரம். மீன் வகை. Cybium Commersonii

வட ஒன்பதுபார் = வடக்கு ஒன்பது பார். Northern bank in nine fathoms; Vada-north ((J.H.)

வடுப்படல் = காயப்படுதல், மீன் வேட்டையில் உண்டாகும் காயம்

வட்டக்காரர் = சம்மாட்டியார் மூலமாக மீன்பிடி தொழிலில் பணம் முதலீடு செய்பவர். சம்மாட்டியார் அன்றாடம் கிடைக்கும் மீன்பாட்டினை ஏலம் விட்டு அத்தொகையில் நூற்றுக்கு ஒரு வட்டம் வீதம் கொடுப்பார்.

வட்டக்காரர் தமது முதலுக்கு வட்டத் தொகையை வட்டிப் போலப் பெற்றுக் கொள்கிறார். 1 வட்டம் - ரூ. 6-25

வட்டம் = பணம், வராகன் போன்ற பெயர். பார்க்க – வட்டக்காரர்

வட்டம் கூறுகல் = ஏலம் கூறுதல்

வண்டு காயப் போடுதல் = உப்பளப் பாத்தியில் இருந்து வாரி எடுக்கும் உப்பை அப்பாத்தியின் வரப்பிலேயே குவித்து ஒருநாள் காயப் போடுதல்

வண்டு கூட்டுதல் = பாத்தியிலிருந்து உப்பை அள்ளி அவ்ரைப்பிலேயே குவித்தல்

வண்ணாங்குன்னை = மீன் வகை

வத்தகரை = கடற்கரை

வத்தம் = வற்றம். கடல் நீர் குறைதல்

வத்தல் = 1. சிறுவள்ளம். 2. பெரிய தோணி

வந்த கணிசம் = நீர் குறையும் நேரம்

வந்தீவு ஆறுபாகம் பார் = வன்மை தீவு ஆறு பாகம் பார். Vantivu Arupagam Par; Bank off vantivu in six fathoms (Vantivu, hard white rock island) Aru-six; Pagam - fathom; Van-hard; Vantivu-a small island north of Tuticorin; on which there is small fishing beacon. Probably so called on account of hard white rock there present (J.H.)

வரால் = மீன் வகை

வரிக்காரை = - மீன் வகை. Atropus atropus

வரிச்சவலை = வலைவகை

வரிநண்டு = நண்டுவகை. Neptunus pelagicus

வரிப்பாரை = மீன் வகை. Caranx Specious

வரிமப்பு = மப்பு-மேகம். வரிவரியாகத் தோன்றும் மேகம். இது கடுமையான காற்று வீசப்போவதற்கு அறிகுறி என்பர்.

வரிவலை = வலைவகை (நற்றிணை 111)

வல = பலவகை வலைகளாவன : கரை வலை, கைவலை, உடுவலை, வீச்சுவலை, பாச்சுவலை, தெவ்வலை, வரிவலை, கொண்டைவலை, செவிள்வலை, சிக்கு வலை. குஞ்சுவலை, மடிவலை, வலிவலை, இழுவலை, பொடிவலை. பருவலை, தூரிவலை, சாளவலை, நைலான் வலை, ரங்கூன் வலை எனப்பல. மீன்பிடி கருவி. Net

வலம்புரிச் சங்கு = சங்குவகை. இது தெய்வீகத் தன்மை உடையது எனும் நம்பிக்கை இந்துக்களிடையே நிலவுகிறது. இதனால் இது மிகுந்த விலை உடையதாகிறது. இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள தேவிபட்டினம், திருப்பாலக்குடி, மோரிபனை, கரங்காடு ஆகிய ஊர்களுக்குப் பக்கத்தில் உள்ள கடல் பகுதிகளில் இது மிகுதியாக எடுக்கப்படுகிறது. வலம்புரிச்சங்கு கிடைத்த குளியாள் மிகுந்த கூலியும் மகிழ்ச்சியும் அடைவார்.

வலிவலை = வலைவகை. Drift net

வலை அடித்தல் = பரதவர் தமது தொழில் முடித்துக் கரையேறிய பின்பு வலைகளை நீரில் அடித்துக் கழுவி அலசுவர். இச்சொல் இப்பொருளது.

வலை அணைத்தல் = வலையைக் கட்டிக் கொண்டு தொழிலுக்குச் செல்லுதல்

வலை இடையர் = பரதவருள் ஒரு பிரிவினர்

வலை இலக்கிறது = கடல் கலத்திலிருந்து வலையைக் கடலிற் விரித்து இறக்குதல்

வலை ஊசி = வலை பின்னுவதற்குப் பயன்படும்

வலை ஏற்றல் = பெருவலையைப் படகில் அல்லது கலத்தில் ஏற்றுதல்

வலைகட்டறது = 1. வலை பின்னுதல்; 2. பழுது பட்ட வலைகளைச் சரி செய்தல். Felling of net

வலை கட்ட பத்தல் = வலையைத் தயார் நிலையில் வைத்தல்

வலை கத்தி = வலை பின்னும் போதும் பழுது பார்க்கும் போதும் வலை நூல் அறுக்கவும் பிற தேவைக்கும் பயன் படுத்தும் கத்தி

வலைகப்பி = லாஞ்சிலிருந்து வலையைக் கடலில் இளக்கவும் வாங்கவும் பயன்படுத்தும் உருளை. Gallows

வலைகாய வைத்தல் = அழுக்கடைந்த வலையை நீரில் அலசி, மணலில் போட்டு நீர்வற்றவிட்ட பின்பு வெயிலில் பரப்பி காய வைத்தல்

வலைகாயப் போடுறது = மீன்பிடிப்பு முடிந்ததும் கழுவிய வலையை வெயிலில் உலரப் போடுதல்

வலைகாவுதல் = வலையைத் தோளிலிட்டுத் தூக்கிச் செல்லுதல்

வலைகிளப்புதல் = இளக்கிய வலையில் மீன் மிகுதியாகப் பட்டதறிந்ததும் வலையைக் கிளப்புதல். வலையைப் பற்றி மேலிழுத்தல்

வலைக் கூண்டு = கடற்கரையில் வலைகளைப் போட்டு வைக்கும் சிறுகுடில்

வலை தடுத்தல் = பகை காரணமாக மந்திரம் போட்டு ஒருவர் இளக்கிய வலையில் மீன்கள் படாமலிருக்கச் செய்தல்

வலை தட்டல் = வீசிய வலையைக் கொணர்ந்து தரையில் தட்டல்

வலை தப்பல் = அழுக்கடைந்து மீன் கவிச்சோடு இருக்கும் வலைகளைத் துவைத்துச் சுத்தப்படுத்திப் போடுதல்

வலை தள்ளல் = கலத்திலிருந்து வலையை இளக்குவதற்கு முன்னர் கடலில் தள்ளுதல்

வலை நாள்செய்தல் = புதியவலை வாங்கிய உடன் அதனை நேராகக் கடலுக்குக் கொண்டு செல்வதில்லை. அதற்குச் செய்யவேண்டிய

சடங்குகளைச் செய்த பின்னரே தொழிலுக்குக் கொண்டு செல்வர். முதலில், வாங்கிய வலை களைக் குவித்து ஊதுவத்தி, சூடம் கொளுத்தி மஞ்சள் நீர் தெளிப்பர். பின்னர் அதன் முன் அவல், கடலை, அரிசி, வெல்லம் ஆகியன வைத்துப் படைத்து வந்த விருந்தின ருக்கு வழங்குவர். குடும்பத்தெய்வங்கள் தங்கள் வலைக்குக் காவலாக இருக்கவேண்டும் எனச் சில நேரங்களில் சாராயமும் வைத்துப் படைக்கப்படுவதுண்டு. இதன் பின்னரே வலை தொழிலுக்குக் கொண்டு செல்லப்படும்.

வலை பத்தியாச்சு = இத்தொடரால் பெருவலை கரையேறிவிட்டது என்பதைக் குறிப்பிடுகின்றனர்

வலை பற்றல் = கிளப்பிய வலையைப் பற்றி எடுத்தல்

வலை பொத்தல் = வலை பூரைப்படுதல். பெருமீன்கள் காரணமாகவோ, பார்களில் சிக்கியதன் காரணமாகவோ வலை கிழிந்து போதல்

வலைமால் = வலைகளின் இணைப்பு

வலைமால் அடி = வலையின் கீழ்ப்புற விளிம்பு

வலைமால் இணைக்கிறது = வலைகளை ஒன்று சேர்த்தல். Mounting of webbing

வலை முடிதல் = வலை கட்டுதல்: Braiding

வலை மே(ல்) புறம் = வலையின் மேல் பகுதி: Cork line

வலையர் = மீன் பிடிக்கும் தொழில் செய்வோர். நாட்டின் பூர்வீகக் குடிமக்கள்

வலை வளைத்தல் = 1. பூரைகளையெல்லாம் முழுமையாகப் பொத்தி முடிய மாலை நான்கு மணியாகும். அதன்பின் பொத்திய வலைகளை எல்லாம் சரி செய்து மறுநாள் வலை வீசுவதற்கான நிலைமையில் ஒழுங்கு செய்து கட்டி வைப்பர். இதற்கு வலை வளைத்தல் என்று பெயர். 2. வலையைக் கடலுள் அரைவட்டம் போல் இளக்கி மீன்கள் தப்பி ஓடிவிடாதபடி வளைத்தல்.

வலை வாங்குதல் = மீன் பாட்டிற்காகக் கடலில் இளக்கிய வலையை கடல் கலத்திற்குத் திரும்பவும் சேந்தி வைத்தல். (வாங்க குடம் நிறைக்கும்

வள்ளல் பெரும் பசுக்கள் - திருப்பாவை. இருகையால் பால் கறத்தலும் இருகையால் வலை வாங்குதலும் ஒப்புநோக்கத்தக்கன.)

வலை வைத்தல் = கடலில் பெருவலையைப் போடுதல்

வழுவன் = மீன் வகை. கடல் பரப்பின் மீது தன் குடலையே மிதக்கவிட்டு செத்ததுபோல் இருக்கும். பறவையின் கவனத்தைக் கவர ஒரு வகை எண்ணெய் பசையை நீரின் மீது பரப்பும். இறந்து வீட்ட மீன் எனத் தவறாகக் கருதிய பறவை இதன்மீது அமர்ந்து கொத்தத் தொடங்கும்போது அதனை குடலுடன் சுருட்டி வாயிலிட்டு உண்ணும் தந்திரம் கொண்டது.

வள்ளப் போட்டி = கடலில் வள்ளங்களை போட்டிபோட்டுக் கொண்டு ஓட்டுதல்

வள்ளம் = மீன்பிடி படகு. இதன் உறுப்புகளாவன: கால், வங்கு, ஏறா, பத்தார், சூனிப்பலகை, ரெண்டாஞ் சுத்து மாதா பலகை , முதல் சுத்து மாதாபலகை, நெருக்கு , நடுக் கட்டி, பாய்மரம், பாய்மரவாரி, பாய், சலுத்துக் கயிறு, ஆஞ்சாங்கயிறு, அணியம், பிந்தலை, மட்டப்பிரி, லெப்போ, தார்ப்பூச்சு, நாளி, ஊசி, சுக்கான், காணா, புடி கம்பு, தண்டு, பருவான், கயிறு ஆகியன. Canoe

வள்ளம் ஆட்டம் போடுதல் = கடல் அலை பேரளவில் எழும் போது வள்ளம் தத்தளித்தல்

வள்ளம் குதித்தல் = வள்ளம் கடல் அலைகளில் முன்னேறும் போது குதித்துத் தாவுதல்

வன்னமேமரி = வடமேற்குத் திசையிலிருந்து தென்கிழக்குத் திசை நோக்கி ஓடும் கடல் நீரோட்டம்

வன்னி வெள்ளம் = வடதிசையிலிருந்து தென் திசை நோக்கி ஓடும் கடல் நீரோட்டம்

வாகைமரம் = கடல்கலங்கள் செய்ய வாகான மரம். Albizzia lebbeck

வாங்கிக் கயிறு = வீச்சு வலையையும் வீச்சுக்காரரையும் தொடர்பு படுத்தி இணைக்கும் கயிறு

வாங்க வெள்ளம் = ஆள் தவறி விழுந்து விட்டால் மீளவே முடியாத கடுமையான நீரோட்டம்

வாங்கு = ஆங்கிலம். பாய்மரத்தின் இருபக்கமும் உள்ள சமநிலைக்கயிறு. Vang

வாங்குவலை = வலைவகை; Boat seine

வாடை. = வடதிசைக் காற்று, குளிர் எனும் பொருளும் இச்சொல்லுக்கு உண்டு.

வாடகச்சான் = வட மேற்குக் காற்று

வாடகர காத்து = கர - மேற்கு. பரதவரிடையே கர எனும் சொல் இப்பொருள் தருகிறது. வட மேற்குக் காற்று

வாட காத்து = வடக்கிலிருந்து வீசும் காற்று

வாட கொண்ட = வாடை - வட காற்று. கொண்டல் --கீழ் காற்று. வாட கொண்ட - வடகிழக்குத் திசையிலிருந்து வீசும் காற்று.

வாடார் = ஆங்கிலம். பரதவர் அணியும் மிதியடி. Wader

வாடா ஒழினி = வடதிசையிலிருந்து தென் மேற்குத் திசை நோக்கி ஓடும் கடல் நீரோட்டம்

வாடா ஒழினி வெள்ளம் = வாடா ஒழினி; மேல் குறிப்புக் காண்க

வாடா = மிகப் பெரிய தோணி

வாடா வலை = பொடிவலை

வாடைக்கொண்ட = வாடைக் கொண்டல். வட கிழக்குத் திசையிலிருந்து தென் மேற்குத் திசை நோக்கி வீசும் காற்று

வாணிவாடு = கடலில் வடக்கிலிருந்து தெற்காக ஓடும் கடல் நீரோட்டம்

வா(ய) புறம் = வள்ளம் அல்லது தோணியில் காற்று வீசும் திசைக்கு ஏற்ப பாய் கட்டப்பட்டிருக்கும். காற்று திசை வாய் புறம் எனவும் எதிர்திசை கௌல் எனவும் வழங்கப் படுகின்றன.

வாரி = நல்ல நீளமும் கனமும் கொண்ட மரம். வள்ளத்தின் பல பாகங்கள் வாரி எனப்படுகின்றன. (அணித்துவாரி , ஆஞ்சான் வாரி போன்றவை) வாரி.-- கதவு ( ). இச்சொல் கதவின் மூலப் பொருளான மரப்பலகையைப் பின்னர் குறிக்கும் வழக்கம் ஏற்பட்டிருக்கலாம்.

வாருபாத்தி = உப்பளப் பாத்தி

வால் தெப்பம் = தொட்டானுக்கு நீரை அனுப்பும் தெப்பம்.

வாவல் = மீன் வகை. இராமநாதபுரம் மாவட்டத்தில் சிறப்பாகப் பேசப்படும் கடல் மீன்; இட்டளி போன்ற வடிவமும் மென்மையும் உடையது. 'ஆவலைப் போக்க வாவலைச் சாப்பிடு' என்பது பழமொழி.

வாழைப் பூச்சங்கு = சங்குவகை; வாழைப்பூவின் தோற்றத்தை ஒத்திருக்கும் சங்கு

வாளா = மீன் வகை. வாள் சுறாவின் இனம்

வாளா வலை = வலைவகை. வாளா (வாள் சுறா) மீன் பிடிக்க உதவும் வலை

வாளை = மீன் வகை. வாள் போன்ற பலமான உறுப்பு ஆறடி நீளத்திற்கு உடையது. கப்பல்களையும் பெருமீன் களையும் குத்திப் பயப்படுத்தும் மீன்

வாள்சுறா = சுறாமீன் வகை. வாள் போன்ற பற்களைக் கொண்டது

விசிறுவலை = வலை வகை; விசிறியெறியப்படும் வலை'. வீச்சுவலை என்றும் பெயருமுண்டு : Falling net; cast net

விங்சு = வலையைக் கிளப்புகிற கடினமான வேலையை எளிதாக்கும் சாதனம். விசைப்படகில் அமைந்திருக்கும் கருவி

விடிவெள்ளி = பொழுது விடிவதற்குக் கொஞ்ச நேரம் முன்பு வானில் தோன்றும் விண்மீன். இவ்விண்மீன் பரதவர்க்கு நேரம் அறிவிக்கிறது

விட்டகயிறு = தனித் தூண்டில் : Hand line

விரட்டு வலை = வலைவகை. மீன்களை விரட்டிப்பிடிக்கும் வலை : Drive in net; Torch net

விரல் சல்லி = சுண்ணாம்பின் மூலப்பொருள். மனிதர் கைவிரல் போன்ற அமைப்புடையது.

விரால் = மீன் வகை . Ophiocephalus Spp; Ophioce phalus Striats

விரால்கண்ணி = விரால் மீன் பிடிக்கப் பயன்படும் கண்ணி : Murrel noose

விரால் தடவறது = உப்பங்கழிகளில் கைகளால் தடவித் தடவி விரால் மீன் பிடித்தல்

விலாங்கு = மீன் வகை. மலங்கு என்றும் வழங்குவர், Anguilla Spp (Eel)

விச்சுக் கயிறு = கடலில் வலை வீசுவதற்கு வசதியாக இருக்கும்படி வலையுடன் இணைக்கப்பட்ட கயிறு : whiffing lines

விச்சுக்காரன் = வீசுவலையைக் கொண்டு நன்றாக வலை வீசுபவனை வீச்சுக்காரன் என்பர். வசை வீசுதல் என்பது லாவகம், தொழில் நுணுக்கம், நீண்ட காலப் பயிற்சி ஆகியவற்றால் செய்யமுடியும் வேலையாகும்.

விச்சுத் தண்டில் = தூண்டில் இருவகைப்படும். 1. பார் தூண்டில்; 2. வீச்சுத் தூண்டில். பாய் ஓட்டில் கட்டு மரமோ, தோணியோ ஓடிக் கொண்டிருக்கும் போது வீசப்படும் தூண்டில் வீச்சுத் தூண்டில் எனப்படும்.

விச்சு வலை = வலைவகை. வீசி எறியப்படும் வலை. விசிறுவலை எனவும் வழங்குவர்: Falling net; Cast net

விஞ்ச் = பாய்மரத்தில் பாயை ஏற்றவும் இறக்கவும் உதவும் பல் சக்கரம்

வெங்கணவா = மீன் வகை

வெங்கன = மீன் வகை : Pellona hoaranijur

வெட்டி = மீன் வகை : Boleopthalmas boddacrti (Mud skipper)

வெண்ணெப்பாரை = மீன் வகை : Caranx sansum

வெண்தேக்கு = மரவகை; வள்ளம், தோணி செய்யப் பயன்படும் மரம்

வெலங்கு கருவை பார் = விலங்கு - வெலங்கு; விலக்கு - விலங்கு. Off shore black bank (J.H.)

வெலங்குபார் = பாம்பன் வெலங்கு பார்; Velangu further; The bank near Pamban lying further from shore; i. e. Pamban outer bank ((J.H.)

வெல்லடி = பரதவர் மீன்பிடி கருவி

வெள்வாயன் சங்கு = சங்குவகை; வெண்ணிறச் சங்கு

வெள்ளத்தரிப்பு = மிகுதியான கடல் நீரோட்டம்

வெள்ளம் = நீரோட்டம், கடல் நீரோட்டம்

வெள்ளறா = மீன் வகை: Penaeus Indicus

வெள்ளறால் = மீன் வகை: Penaeus Indicus

வெள்ளாவலை = வலைவகை. பெருவலை போன்ற அமைப்புடையது. இவ்வலை அரிசிமாக்கஞ்சியில் அடிக்கடி, நனைக்கப் படுவதால் இதற்கு உறுதி மிகுதி. இதன் மடி சணல் நூலினால் முடியப்பட்டு துவர்ச்சாயம் ஊட்டப் - பெற்று கனமான முக்கோணப்பை போல விளங்கும். இவ்வலை மூலம் கடலில் தொழில் செய்ய 8 பேர் தேவைப்படுவர்; 2 கட்டுமரம் அல்லது தோணிகளில் புறப்படுவர்.

வெள்ளியமலைகரைபார் = Velliamalaikarai Par; Inner bank of Vellai malai; Karai-inshore i... inner in contrast to Velangu, outer; Vellaimalai; a white and conspicious sand dune near Kilakkarai (J. H.)

வெள்ளி வயிறு = மீன் வகை. இராமநாதபுர மாவட்டத்தில் கிடைக்கும் மீன்; எலும்பு நிறைந்ததும் கொழுப்புக் குறைந்ததுமான மீன்; சமைப்பதற்கு ஏற்றது.

வெள்ளைக் கெழுத்தி = மீன் வகை : Arius Jella (white cat fish)

வெள்ளைக் கெளிறு = பார்க்க – மேலது

வெள்ளைக்கோல் சுறா = மீன் வகை: Hemigaleus belpouri

வெள்ளைச் சுறா = சுறாமீன் வகை. இது 25 அடி முதல் 40 அடி வரை நீண்டு வளரும். இதன் அடிப்பாகத்தில் வாய். வாயினடியில் 6 வரிசையான கத்தி போன்ற கூர்மையான பற்கள் உண்டு. இதனடியில் நிறம் வெண்மையாகக் காணப்படும். எலும்பில்லாத மீன்

வெள்ளை பூண்டுச் சங்கு = சங்குவகை. அளவில் சிறிய சங்கு. வெண்மையானதும் பூண்டு போன்ற அமைம்புடையதுமான சங்கு வகை

வேடாங் கயிறு = பாயின் மேற் பகுதியில் உள்ள ஒரு கயிறு

வேம்பார் பெரியபார் = Vembar Periya Par; Large bank lying off Vembar village; Peria--large (J.H.)

வேரூத்து = பரதவர் மீன்பிடி கருவி

வேளா மீன் = மீன் வகை. இம்மீன் வலைப்படுவதோ, காண்பதோ தூய சகுனமென்பர் பரதவர்

வைப்பார் பெரியபார் = Vaippar Periya Par; Large bank lying off Vaippar Village (J.H.)

வௌவால் = மீன் வகை. வௌவால் போன்ற தோற்றமுடையது. திருக்கை மீனின் வகை.